முன்னோடி உத்வேகத்திற்கான இணைப்பு

kcg.edu

The Kyoto College of Graduate Studies for Informatics

京都情報大学院大学


URL: https://www.kcg.edu/

மின்னஞ்சல்: admissions@kcg.edu

விசாரணைகள்: சேர்க்கை பிரிவு,
தி கியோட்டோ காலேஜ் ஆஃப் கிராஜுயேட்
ஸ்டடீஸ் ஃபார் இன்ஃபர்மேட்டிக்ஸ்
7 Tanakamonzen-cho, Sakyo-ku, கியோட்டோ 606-8225, ஜப்பான்
தொலைபேசி: 075-681-6334 (+81-75-681-6334 ஜப்பானுக்கு வெளியே)
ஃபேக்ஸ்: 075-671-1382 (+81-75-671-1382 ஜப்பானுக்கு வெளியே)


タミル語 202111

ஜப்பானின் முதல் தகவல் தொழில் நுட்ப தொழில்முறை பட்டதாரிப் பள்ளி

# கேசிஜிஅய்: தி கியோட்டோ காலேஜ் ஆஃப் கிராஜுயேட் ஸ்டடீஸ் ஃபார் இன்ஃபர்மேட்டிக்ஸ்

ஜப்பானின் கியோட்டோவில் மேம்பட்ட
நவீன தகவல் தொழில் நுட்பத்தைப் பயிலுங்கள்



முதலிடத்திலுள்ளது மற்றும் ஒன்றே ஒன்றாக உள்ளது! 京都情報大学院大学 kcg.edu



# தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர்மட்ட நிலையிலான நிபுணர்களை பயிற்றுவித்து உருவாக்க

*சமீபத்திய ஆண்டுகளில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், குறிப்பிடத்தக்க தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் தீவிர பொருளாதார மாற்றங்களில் ஏற்பட்ட (பல்வகைப்படுத்தல், அதிகரிக்கும் சிக்கல்கள், அதிகரிக்கும் நுட்பங்கள், உலக மயமாக்கல், மற்றும் கணினி முறைக்காலங்களின் வருகை போன்றவை) முன்னேற்றங்கள் மூலம் ஜப்பான் மற்றும் சர்வதேச அளவில் உயர்ந்த அளவிலான ஐ.டி. தொழில் வல்லுநர்களின் கல்விக்கான எதிர்பார்ப்புகள் விரைவாக அதிகரித்து வருகின்றன.*

*எனினும், அத்தகைய தகவல் மற்றும் மேலாண்மை போன்ற சிறப்பு துறைகளின் தூணாக விளங்கும், தகவல் தொழில்நுட்பத்துறையில் பரவலாக உயர்ந்த அளவிலான ஐ.டி. தொழில் முறை வல்லுநர்களை உருவாக்குவதில் உள்ள சவால்களை சமாளிக்கும் கல்லூரிகள் மற்றும் பட்டதாரி பள்ளிகளின் எண்ணிக்கை இப்போது வரை கிட்டத்தட்ட பூஜ்ஜியம் எனும் அளவிலேயே உள்ளது. இந்த சூழ்நிலையில் இருந்து வெளியேறுவதற்காக, ஏப்ரல் 2004 இல் ஜப்பானின் முதல் மற்றும் ஒரே ஐ.டி. தொழில்முறை பட்டப்படிப்பு பள்ளியாக கியோட்டோ காலேஜ் ஆஃப் கிராஜுயேட் ஸ்டடீஸ் ஃபார் இன்ஃபர்மேட்டிக்ஸ் (KCGI), நிறுவப்பட்டது. ஜப்பானின் முதல் கணினி கல்வி நிறுவனமான கியோட்டோ கம்ப்யூட்டர் கயூனின் தொன்மைகள் மற்றும் சாதனைகளை KCGI மரபுரிமையாகப் பெற்றதுடன், இது 57 ஆண்டுகளுக்கு தொழில்துறை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தகவல் செயலாக்க பொறியியலாளர்களுக்கு பயிற்சியளித்துள்ளது. உலகெங்கிலும் இருந்து பல்கலைக்கழகங்களுடனான உலகளாவிய கல்வி கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட நவீன முன்னேற்றங்களுடனான ஐ.டி. பாடத்திட்டங்களையும் கூட சர்வதேச ரீதியில் KCGI செயல்படுத்துகிறது, இதில் ரோசெஸ்டர் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி உள்ளிட்டவை உள்ளன. மேலும், KCGI இன் பாடத்திட்டம் மேலாண்மை மற்றும் நிர்வாகக் கல்வியையும் பரிசீலிக்கிறது; உயர் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் குறிப்பாக CIO க்கள் (தலைமை தகவல் அலுவலர்கள்), பாரம்பரிய ஆராய்ச்சி சார்ந்த பட்டதாரி பள்ளிகளில் முறையான கல்வியைப் பெறுவது கடினம் என்பவற்றைப் பயன்படுத்துவது போன்ற ஐ.டி. துறைகளில் KCGI சிறந்த தலைவர்களை பயிற்றுவிக்கிறது.*



## பள்ளியின் தத்துவம்

•

எங்கள் பள்ளியின் நோக்கம் என்னவென்றால் தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறையினருக்கு பொறுப்பாக இருக்கவும் சமூகத்தின் கோரிக்கைகளைப் பூர்த்திசெய்யவும் உதவும் ஆக்கப்பூர்வமான புதுமையான மெய்க்கருத்துடன், திடமான கருத்தியல் பின்னணியுடன் மற்றும் தற்போதைய வணிக நடைமுறைகள் குறித்து வலுவான நடைமுறை அறிவுடன் உயர்வான தகுதி வாய்ந்த தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு பயிற்சியளித்தல்.

## கே.சி.ஜி.ஐ-இன் (KCGI) குறிக்கோள் மற்றும் நோக்கம்

•

நம்முடைய தகவல் தொழில்நுட்ப சமூகத்தில் உயர் மட்ட மற்றும் பல்வேறுவகையான மனித வளங்களின் தேவையைப் பூர்த்தி செய்தல் மேலும், கணினி எங்கும் நிறைந்த காலத்தில் சர்வதேச சிந்தனையுள்ள மற்றும் வழக்கமானதை விட விரிவான அறிவு மற்றும் உயர் மட்ட திறன்களைக் கொண்ட உயர் மட்ட தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களின் முன்னேற்பாடுகளின் வழியாக உயர் மட்ட தகவல் சமூகத்தை நடைமுறைப்படுத்தி பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்தல்.

எங்கள் நோக்கம் என்னவென்றால் தகவல் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பங்களின் வளர்ச்சிக்கு ஏற்ப உயர் மட்ட வல்லுநர்களுக்கு பயிறசியளிப்பதில் அறிவியல், தொழில்நுட்பம், மற்றும் வணிக நிர்வாகம் தொடர்பான கல்வித் துறைகளில் கோட்பாடு மற்றும் நடைமுறை தொழில்நுட்பம் குறித்து பயிற்றுவித்தல்.

kcg.edu
The Kyoto College of Graduate Studies for Informatics

## சேர்க்கை கொள்கைகள்

ஐ.டி/ஐ.சி.டி தொழில்துறை என்பது தகவல் தொடர்பான மற்றும் மேலாண்மை தொடர்பான துறைகள் இரண்டும் ஒருங்கிணைந்த துறையாகும், மேலும் அதனுடைய இலக்குகள் சிக்கலானவை பல்வேறுவகையானவை. இதன் விளைவாக, உறுதியளிக்கும் திறமையானவர்களுக்கான தகவல் தொழில்நுட்பத் துறையின் தேவை முன்பை விட அதிகமாக பல்வகைப்படுகிறது. இன்று வரை, பொறியியல் தொடர்பான ஆராய்ச்சி பட்டதாரி பள்ளிகளில் பொறியியல் இளங்கலை பட்டப்படிப்பு மாணவர்களை உருவாக்குவதில் மட்டுமே சார்ந்துள்ள, தற்போதைய ஜப்பானிய கல்வி முறையுடன் ஜப்பான தொழில்துறையின் பல்வேறுவகையான திறமையானவர்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. முன்னோக்கி நகர்வதில், ஜப்பானிய தொழில்துறை மற்றும் பொருளாதாரத்தை மேலும் மேம்படுத்தவதற்கு, ஐ.டி/ஐ.சி.டி தொழில்துறையில் எல்லா வகையிலும் மிகவு சிறப்பு வாய்ந்த வல்லுநர்களாக, பல்வேறுவகையான பின்னணியுடன் ஆட்களுக்கு பயிற்சியளிப்பது முக்கியமானது.

இந்தக் கண்ணோட்டங்களில், எங்கள் பள்ளியில் அவர்களின் இளங்கலை பட்டங்களைக் குறிப்பிடாமல் முடிந்தவரை பல்வேறுவையான பின்னணியுடன் இருக்கும் பல மாணவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கொள்கை உள்ளது.

1) எங்கள் பள்ளியில் சிறப்பு அறிவை கற்றுக்கொள்ள அடித்தள கல்வி திறன் கொண்டவர்கள்;

2) நிறுவப்பட்ட கருத்துக்களில் சிக்கிக்கொள்ளாமல் புதிய விஷயங்களைக் கற்றுக்கொண்டு, அவர்களாகவே தானே சிந்தித்து புதிதாக ஏதோ ஒன்றை உருவாக்க வேண்டும் என்று விரும்புபவர்கள்; மற்றும்

3) அவர்களைச் சுற்றியுள்ளவர்களுடன் ஒத்துழைத்து தகவல் தொடர்பு மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு காண விருப்பமுள்ளவர்கள்

# ஒரு KCGI கல்வி

திி கியோட்டோ காலேஜ் ஆஃப் கிராஜுயேட்
ஸ்டடீஸ் ஃபார் இன்ஃபர்மேட்டிக்ஸ்



தலைவர் மற்றும் பேராசிரியர்,
கியோட்டோ ஜோஹோ காகுன்

## Wataru Hasegawa 長谷川 亘

இளங்கலை-கலையியல், வாசெடா பல்கலைக்கழகம்

முதுகலை-கல்வியியல், முதுகலை-கலையியல், கொலம்பியா பல்கலைக்கழகம், யுஎஸ்ஏ

தலைவர், கியோட்டோ ப்ரீஃபெக்சர் இன்ஃபர்மேஷன் இண்டஸ்ட்ரீஸ் அசோசியேஷன்

அறங்காவலர் & தலைவர், அனைத்து நிப்பான் இன்ஃபர்மேஷன் இண்டஸ்ட்ரி அசோசியேஷன் ஃபெடரேஷன்

இயக்குனர் பிரதினிதி & முதன்மை துணைத் தலைவர், ஐடி சங்கங்களின் ஜப்பான் கூட்டமைப்பு

தாய்லாந்து இராஜ்ஜியம் கல்வி அமைச்சகம் துணை அமைச்சரின் விருது (இரண்டு முறை)

கானா குடியரசு கல்வி அமைச்சகத்தின் விருது

அமெரிக்காவின் நியூயார்க் மாநிலத்தில் கல்வி நிர்வாகியாக தகுதி பெற்றவர்

வருகைப் பேராசிரியர், டியாஞ்ஜின் யுனிவர்சிடி ஆஃப் சயன்ஸ் & டெக்னாலஜி, சீனா

கொள்கை ஆலோசனைக்குழு, ஜெடிசி, ஜேஜு ஃப்ரீ இண்டர்னேஷனல் சிடி டெவலப்மெண்ட் செண்டர்

பாடத்திட்டம் - தலைமைத்துவ கோட்பாடு, மாஸ்டர் திட்டம்

கியோட்டோ காலேஜ் ஆஃப் கிராஜுயேட் ஸ்டடீஸ் ஃபார் இன்ஃபர்மேட்டிக்ஸ் (கேசிஜிஅய்), ஜப்பானின் முதல் தகவல் தொழில்நுட்ப வல்லுனர் பட்டதாரிப் பள்ளியாகும். KCGI-ன் பெற்றோர் நிறுவனமான கியோட்டோ கம்ப்யூட்டர் கயூன் (KCG) ஜப்பானின் முதல் தனியார் கணினிக்கல்வி நிறுவனமாகும். ஷிகியோ ஹசேகவா மற்றும் யசூகோ ஹசேகாவா ஆகியோரால், அவர்களின் தனித்துவமான, முன்னோடி தத்துவத்தின் கீழ் ஒரு தனியார் பள்ளியாக KGG நிறுவப்பட்டது.

1963 இல் நிறுவப்பட்டதிலிருந்து 55 ஆண்டுகளுக்கும் மேலாக கணினி கல்வித்துறையில் KCG ஈடுபட்டுள்ளது. அந்த சமயத்தில் உயர்நிலைப்பள்ளி பட்டதாரிகள் மட்டுமின்றி, நான்கு வருட பல்கலைக்கழகங்களின் பற்பல பட்டதாரிகளும் கூட இதில் சேர்ந்து இதன் பாடத்திட்டங்களில் பட்டம் பெற்றனர். பள்ளி நிறுவப்பட்ட சமயத்தில், ஆய்வு சார்ந்த பட்டதாரிப் பள்ளிகள் மட்டுமே ஜப்பானில் இருந்தன.

பல்கலைக்கழகத்திலிருந்து பட்டப்படிப்பை முடித்த பல மாணவர்கள், கம்ப்யூட்டர் நடைமுறையுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ள உயர்கல்வி நிறுவனத்தைத் தேடித் தேடிப் பின்னர் KCG ஐ தேர்ந்தெடுத்தனர். தொழிற்கல்வி பள்ளி முறையின் கீழ் KCG ஒழுங்கமைக்கப்பட்டிருந்தாலும் கூட, அது பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கான ஒரு கல்வி நிறுவனமாக ஜப்பானிய சமூகத்தில் தனது பங்கினைக் கொண்டுள்ளது மற்றும் ஒரு வகையான தொழில்முறை மற்றும் நடைமுறை பட்டப்படிப்பு பள்ளியின் செயல்பாடுகளுக்கும் இது உதவுகிறது.

இந்த பிரச்சனைகள் மற்றும் வரலாற்றின் அடிப்படையில், 1998 ஆம் ஆண்டில் கே.சி.ஜி அமெரிக்காவில் உள்ள ரோசெஸ்டர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் பட்டதாரி பாடத்திட்டங்களுடன் (தகவல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், கம்ப்யூட்டர் சயின்ஸ் மற்றும் பிற உட்பட) இணைந்து ஒரு கூட்டுத் திட்டத்தை நிறுவியது. அதை நடைமுறைப் படுத்தியது முதல் நடைமுறைக் கற்றல் சார்ந்த ஒரு தொழில் வல்லுனர் பட்டதாரிப் பள்ளி பாடத்திட்டத்தை இது கொண்டு வந்தது. ஜப்பானிய தொழிற்கல்வி பள்ளி மற்றும் அமெரிக்க பட்டதாரி பள்ளி திட்டங்களுக்கிடையிலான இந்த ஒத்துழைப்பு ஜப்பான் மற்றும் முன்மாதிரி ஆகிய இரண்டிலும் முதலாவதாக இருந்தது.

இது போன்று கியோட்டோ கம்ப்யூட்டர் காகுயினிலிருந்து (கே.சி.ஜி) திறமையானவர்கள் தொழில்முறையான பட்டதாரி பள்ளியின் புதிய அமைப்பின் கீழ் தகவல் தொழில்நுட்பத்தை மையமாகக் கொண்ட கல்வி நிறுவனத்தை நிறுவுவார்கள் என்பது அநேகமாக தவிர்க்க முடியாதது. ரோசெஸ்டர் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி மற்றும் கொலம்பியா பல்கலைக்கழகத்திலுள்ள ஆசிரியர்கள் உட்பட, தி கியோட்டோ காலேஜ் ஆஃப் கிராஜுவேட் ஸ்டடீஸ் ஃபார் இன்ஃபர்மேடிக்ஸ் (கே.சி.ஜி.ஐ) நிதி மற்றும் கல்வித் துறைகளிலுள்ள தொடர்புடையவர்களின் பெருந்தன்மையான ஒப்புதல் மற்றும் ஒத்துழைப்புடன் நிறுவப்பட்டது. ஏப்ரல் 2004-ல், புதிய முறை ஏற்றுக்கொள்ளப்பட்ட முதல் ஆண்டு, கே.சி.ஜி.ஐ ஜப்பானின் முதல் மற்றும் ஒரே தகவல்தொழில்நுட்ப தொழில்முறை பட்டதாரி பள்ளியாக திறக்கப்பட்டது.

கே.சி.ஜி.ஐ-இன் அடித்தள தத்துவம் என்னவென்றால் "பயன்பாட்டு தகவல் தொழில்நுட்பத்தில் சமூகத்தன் தேவைகளைப் பூர்த்தி செய்து, தற்காலத்தை ஆதரித்து, மற்றும் நம்மை அடுத்த தலைமுறைக்கு வழிநடத்தும் ஆக்கப்பூர்வமான மற்றும் உயர் மட்ட நடைமுறையிலான திறன்களைக் கொண்ட நிபுணர்களை உருவாக்குதல்." தகவல் தொழில்நுட்பக் கல்வியை சர்வதேச வணிக கல்வியுடன் இணைத்து, கே.சி.ஜி.ஐ அசோசேஷன் ஃபார் கம்ப்யூட்டிங் மிஷினரியின் (ஏ.சி.எம்) இன்ஃபர்மெஷன் சிஸ்டம் (ஐ.எஸ்) முதுகலைப் பாடத்திட்டத்தின் திருத்தப்பட்ட பதிப்பின் அடிப்படையில், வலை வணிகத்தில் (மின்-வணிகம்) சிறப்பாக தேர்ச்சி பெறும் பொறியாளர்கள் மற்றும் குறிப்பா சி.ஐ.ஓ-களை (CIO) உருவாக்க ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. கே.சி.ஜி.ஐ-இன் குறிக்கோள் மற்றும் நோக்கம் என்னவென்றால் விதிவிலக்கான திறன் நிலைகளைக் கொண்ட உயர்வான அறிவுள்ள, சர்வதேச சிந்தனையுள்ளவர்களின் ஏற்பாட்டிற்கு ஆதரவளித்தல். பொருளாதார வளர்ச்சி மற்றும் ஒரு மேம்பட்ட தகவல் தொழில்நுட்ப சமூகத்தை நடைமுறைப்படுத்த; தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பங்களை ஏற்க உதவுதல்; மற்றும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் வணிக மேலாண்மை தொடர்பான கல்வித் துறைகளில் கோட்பாடு மற்றும் நடைமுறை தொழில்நுட்பம் குறித்து கல்வியை ஊக்குவிக்க இந்த முயற்சிகள் பங்களிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்தச் சாதனைகள் மேலும் உயர் திறமையான வல்லுநர்களின் அடுத்த தலைமுறையை உருவாக்க வழிவகுக்கும் என்று நாங்கள் மேலும் நம்புகிறோம்.

கே.சி.ஜி.ஐ நிறுவப்படும் வரை, இளங்கலை மற்றும் பட்டதாரி பள்ளி மட்டத்தில் வலை வணிகம் (மின்-வணிகம்) தொடர்பான முக்கிய திட்டங்கள் கிட்டத்தட்ட ஜப்பானில் இல்லை. வணிக மேலாண்மை, தொழில்துறை பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பான சிறப்பு பாடங்கள் போன்ற பாரம்பரியமான முக்கிய திட்டங்களில் சிறப்பு பாடங்கள் ஒரு துணை துறையாக மட்டுமே கருதப்பட்டன. சிறப்பு பாடங்கள் முறையான மற்றும் விரிவான சிறப்பு பாடத்தின் பகுதியாக அல்லது முக்கியமான துறையின் பகுதியாக மட்டுமே ஆராய்ச்சி செய்து கற்பிக்கப்பட்டன.

கே.சி.ஜி.ஐ-யை வேறுபடுத்துவது என்னவென்றால், தகவல் தொழில்நுட்பத்தின் பரந்த அர்த்தத்தில் ஒரு தகவல் தொழில்நுட்ப தொழில்முறையான பட்டதாரி பள்ளியாக, தலைமைத்துவ திறன்களை வளர்ப்பதிலும் கவனம் செலுத்தக்கூடிய உலகத் தரம் வாய்ந்த தொழில்முறை பள்ளியாக இருக்க வேண்டும் என்பது எங்களுடைய நோக்கம். பல பல்கலைக்கழகங்களைப் போலல்லாமல், நாங்கள் "செங்குத்தாக பிரிக்கப்பட்ட ஒற்றை துறையுள்ள" கணினி அறிவியல் பட்டதாரி பள்ளியும் இல்லை, நாங்கள் தகவலியல் மற்றும் கணிதவியல் பட்டதாரி பள்ளியும் இல்லை. அந்த நிறுவனங்களுடன் நாங்கள் பல ஒற்றுமைகளைப் பகிர்ந்து கொள்ளும் போதிலும், நாங்கள் பட்டதாரி பள்ளியின் வித்தியாசமான வகை. வழிகாட்டி அடிப்படையிலான பாடத்திட்ட வடிவமைப்புகள் மற்றும் ஆலோசனை ஆசிரியர் அமைப்புடன் கூடுதலாக, கே.சி.ஜி.ஐ ஜப்பானிய பல்கலைக்கழகங்களில் அரிதாகவே காணப்படும் பரந்த அளவிலான பகுதிகள் மற்றும் கொள்கைகளை ஒருங்கிணைத்து அனைத்து அம்சங்களிலும் நன்றாக வளர்ச்சியடைந்த கல்வி முறை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. இவைகளில் கற்பவர் சார்ந்த அறிவுறுத்தல் வடிவமைப்பு, வெளிப்படையான கிடைமட்டமான பணியாட்கள் பிரிவுடன் கல்வி முறை, மற்றும் அவ்வப்போது கற்றல் விளைவுகளின் மதிப்பீடு அடங்கும்.

மேலும், கே.சி.ஜி.ஐ ஆசியா மற்றும் உலகம் முழுவதும் திறமையுடன் பணியாற்றக்கூடிய, தகவல் தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை திறன்கள் இரண்டையும் கொண்ட சர்வதேச தலைவர்களையும் வணிகர்களையும் உருவாக்குவதிலும் கவனம் செலுத்துகிறது. கே.சி.ஜி.ஐ-இல், எங்கள் நிறுவனம் ஆசியாவில் முதலிடத்திலுள்ள தகவல் தொழில்நுட்ப தொழில்முறையான பள்ளியாக இருக்க வேண்டும் என்ற எங்கள் நோக்கத்தின் பகுதியாக, நாங்கள் உலகெங்கிலும் உள்ள மாணவர்களை முனைப்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

இன்று நம்முடைய அன்றாட வாழ்க்கையிலும் தொழில்துறையிலும் தகவல் தொழில்நுட்பம் இன்றியமையாதது. எண்ணற்ற தொடர்புடைய துறைகளில் பல்வகைப்படுத்தப்பட்டுள்ளது, தகவல் தொழில்நுட்பம் பரந்த அளவிலான சமூக தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. கே.சி.ஜி.ஐ அதனுடைய பட்டதாரிகளுக்கு தகவல் தொழில்நுட்பத்தில் பொதுவான அடிப்படை, அந்த அடிப்படையில் பட்டதாரிகள் தேர்ந்தெடுக்கும் துறைகளில் முக்கிய பங்கு வகிக்கும் திறன்கள் மற்றும் தொழில்துறை உலகில் பயன்படுத்தக்கூடிய நடைமுறை திறன்களை வழங்க தொடர்ந்து அதனுடைய பாடத்திட்டத்தை திருத்தி மேம்படுத்துகிறது. 2018 கல்வியாண்டில், கே.சி.ஜி.ஐ மூன்று பாடக்கோப்பு பதிவு மாதிரிகளின் தொகுப்பை தொடங்கியது. கவனம் செலுத்த வேண்டிய துறைகள் குறிப்பிட்ட துறையில், அடிப்படைகள் முதல் பயன்பாட்டு நுட்பங்கள் வரை. தொழில்முறையான அறிவை மாணவர்களுக்கு வழங்குகின்றன. தொழில்துறை பாடக்கோப்புகள் தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் தொழில்துறையின் ஒவ்வொரு துறையிலும் பயனுள்ள திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு திறன்களைக் கற்பிக்கின்றன. இறுதியாக, மாணவர்களின் பல்வேறுவகையான ஆய்வு நோக்கங்களுக்கு பதிலளிக்கும் வகையில், பெஸ்போக் பாடத்திட்டம் ஒரு குறிப்பிட்ட துறையுடன் தொடர்புடைய பல்வேறு வகையான பாடக்கோப்புகளைத் தேர்ந்தெடுக்க மாணவர்களுக்கு உதவுகிறது.

கே.சி.ஜி.ஐ-இல் அவர்களுக்கு கிடைக்கும் நடைமுறை திறன்கள் மற்றும் பரந்த கண்ணோட்டத்துடன், எங்கள் பட்டதாரிகள் ஜப்பானிலும் சர்வதேச அளவிலும் பரந்த அளவிலான துறைகளில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

கே.சி.ஜி.ஐ சப்போரோ மற்றும் டோக்கியோவில் செயற்கைக்கோள் வளாகங்களையும் நிறுவியுள்ளது. இந்தச் செயற்கைக்கோள் வளாகங்கள் கியோட்டோவிலுள்ள முக்கிய பள்ளியுடன் மின்-கற்றல் முறையின் மூலம் இணைக்கப்பட்டுள்ளன, செயற்கைக்கோள் வளாகத்தில் படிக்கும் போதே மாணவர்களுக்கு அதிநவீன தகவல் தொழில்நுட்ப தொழில்முறையான கல்வியைப் பெற உதவுகிறது.

பாடக்கோப்புகளை நிகழ்நேரத்தில் எடுப்பது, கேமரா மூலம் பேராசிரியர்களிடம் மாணவர்கள் கேள்விகள் கேட்க உதவுகிறது. இந்தப் பாடக்கோப்புகள் பதிவு செய்யப்படுகின்றன, எனவே மாணவர்கள் வீட்டிலிருந்தே எங்கள் சேவையங்களில் சேமிக்கப்பட்டுள்ள பாடக்கோப்புகளைப் பார்க்கலாம். இடம் மற்றும் நேரத்தின் எல்லைகளை மீறி, மாணவர்கள் எங்கும், எந்த நேரத்திலும் அதிநவீன தொழில்முறையான கல்வியைப் பெறலாம். கூடுதலாக, கே.சி.ஜி.ஐ அமெரிக்கா, சீனா மற்றும் தென் கொரியா உள்ளிட்ட உலகெங்கிலும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களுடன் அதை இணைக்கும் ஒரு உறுதியான வலையமைப்பையும் கொண்டுள்ளது. கே.சி.ஜி.ஐ இந்த சர்வதேச வலையமைப்பை மேலும் விரிவுபடுத்துகையில் அதனுடைய கல்வி செயல்பாடுகளையும் முனைப்புடன் வளர்த்து வருகிறது.

இன்று உலகில் ஏற்படும் மோசமான மாற்றங்களுக்கிடையே, எங்கள் அடித்தள தத்துவம் மற்றும் எங்கள் நிறுவப்பட்ட குறிக்கோள் மற்றும் நோக்கத்தின் மூலம் வழிகாட்டப்படும் அதிநவீன தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்க கே.சி.ஜி.ஐ கடுமையாக உழைக்கிறது. உங்களைப் போன்ற லட்சிய மாணவர்களின் வருகைக்காக நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்.

kcg.edu
The Kyoto College of Graduate Studies for Informatics

# புதிய சகாப்தத்தின் திருப்புமுனை

## தலைவரிடமிருந்தான செய்தி



பயன்பாட்டு தகவல் தொழில்நுட்ப பள்ளியின் தலைமை அதிகாரி மற்றும் தலைவர்,
தி கியோட்டோ காலேஜ் ஆ்ப் கிராஜுவேட் ஸ்டடீஸ் ்பார் இன்்பர்மேடிக்ஸ்

**Toshihide Ibaraki** 茨木 俊秀

பொறியியல் இளங்கலை, கியோட்டோ பல்கலைக்கழகம்;
பொறியியல் டாக்டர், கியோட்டோ பல்கலைக்கழகம் (முதன்மைப் பாடம் மின்னணு பொறியியல்);
பேராசிரியர் எமரிடஸ், கியோட்டோ பல்கலைக்கழகம்;
கியோட்டோ பல்கலைக்கழகத்தின் இன்்பார்மேட்டிக்ஸ் பட்டதாரி பள்ளியின் முன்னாள் டீன்;
முன்னாள் பேராசிரியர், க்வான்செயி ககுயின் பல்கலைக்கழகம்;
முன்னாள் பேராசிரியர், கௌரவ பேராசிரியர், இல்லினாய்ஸ் மற்றும் இதர பல்கலைக்கழகம்.
்பெல்லோ ஆ்ப் ஏ.சி.எம்., ஜப்பான் தகவல் நடைமுறைச் சங்கம்;
மற்றும் ஜப்பான் தொழில் மற்றும் பயன்பாட்டு கணித சங்கம்.

**பாடங்கள்**: சிஸ்டம்ஸ் தியரியில் மேம்பட்ட தலைப்புகள், மாஸ்டர் திட்டம்

*18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 19 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில் துறை புரட்சி, நீராவி இயந்திரமாக அறியப்பட்ட ஒரு புதிய வகை ஆற்றல் உருவாக்கத்திற்கு நன்றி, தொடங்கியது. 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், மனித உற்பத்தித் திறன் தேவையான அளவை விட தாண்டியது, இந்த செயல்திறன் மின்சாரத்தையும் பெட்ரோலியத்தையும் பயன்படுத்துவதன் மூலம் அதிகரித்தது. இதன் விளைவு, அளவிலிருந்து தரத்திற்கு மாற்றத்தை குறிப்பிட்டு, பெரிய உற்பத்தி முறைகளை முரண்பாடாகவும், பெரிய அளவிலான வயது, சிறிய அளவு உற்பத்திக்கு மாற்றுவதற்கும் வழிவகுத்தது. இந்த அதிரடி மாற்றங்களின் மத்தியில், உலகின் தொழில் துறை அமைப்பு ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு உட்பட்டு, ஒரு புதிய சமூக ஒழுங்கிற்கு வழிவகுத்தது.*

*தகவல் உலகிலும் இதே நிகழ்வு நடக்கிறது. அதன் வேகம், எனினும், மிகவும் அதிகமாக உள்ளது. முதல் கணினிகளின் உற்பத்தி தொடங்கி 70 ஆண்டுகள் கழிந்த போதிலும், அவற்றின் செயல்திறன் வேகம் மற்றும் நினைவக திறன் நினைத்துப் பார்க்க முடியாத அளவு, வேகமாக முன்னேற்றம் அடைந்துள்ளது. உண்மையான வானிலை நிகழ்வுகளை விட வேகமாக வளிமண்டல மாற்றங்களை விவரிக்கும் பகுதி வேறுபாடு சமன்பாடுகளை தீர்க்க கணினிகள் திறன் சாத்தியமான எண் வானிலை கணிப்பை சாத்தியமாக்குவதில் தீர்க்கமான காரணியாகும். குரல் பகுப்பாய்வு மற்றும் அறிந்துணர்தல் மனித உரையின் வேகத்தை சமாளிக்க வேகமாக போதுமானதாகி விட்டது. நினைவக திறன் தடைகளை கிட்டத்தட்ட இல்லாததாகிவிட்டது மற்றும் டிஜிட்டல் தரவில் முழு உலகில் உள்ள ஒவ்வொரு புத்தகத்தையும் சேமிப்பது இப்போது சாத்தியம். மனிதர்களின் கண்கள் மற்றும் காதுகளின் மூலம் வாழ்நாள் முழுவதிலும் கிரஹிக்கப்படும் ஒவ்வொரு தரவையும் கணினிகளுக்கு பதிவு செய்யக்கூடிய திறன் உள்ளது. இந்த தகவல் சக்தி அதிகரிப்பு நமது வாழ்க்கை மற்றும் கலாச்சாரம் தரத்தை மாற்ற போதுமான அளவு அடைந்தது என்பதில் சந்தேகம் இல்லை. உண்மையில், 21 ஆம் நூற்றாண்டில் நுழைந்ததில் இருந்து நாம் அதிகரிக்கும் வகையில் ஒரு பண்பு ரீதியான மாற்றத்தின் அறிகுறிகளைக் காண்கிறோம். வசதியான அம்சங்கள் மற்றும் குறைந்த அளவைச் செயல்படுத்துவதன் மூலம், செல்போன்கள் மற்றும் ஸ்மார்ட் ஃபோன்கள் மக்களுடைய பாக்கெட்டுகளில் இடம் பிடித்துள்ளன, குறிப்பாக இளைஞர்களின் வாழ்க்கை முறையை மாற்றியமைத்துள்ளன. இண்டர்நெட் மூலம் சிக்னல்கள் இப்போது உடனடியாக எழுத்துக்கள் மட்டுமல்ல, ஃபைபர் ஆப்டிக் கேபிள் வழியாக படங்கள் மற்றும் வீடியோ தரவையும் பரிமாறிக் கொள்ள முடியும். தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) உள்கட்டமைப்பாக நிதி மற்றும் வியாபாரத்தை பூகோள மயமாக்குவதுடன், உலகெங்கிலும் உள்ள மக்களை நேரடியாக தொடர்பு கொள்வதன் மூலம் நாடுகளும் சமூகங்களின் இயல்புகளிலும் ஒரு குறிப்பிடத்தக்க ஆதிக்கத்தை செலுத்துகிறது.*

*சொல்லப்போனால், இந்த மாற்றங்கள் அனைத்துமே நேர்மறையான திசையில் இல்லை. கூடுதலாக, கணினி குற்றம் போன்ற எதிர்மறை அம்சங்களை புறக்கணிக்க முடியாது. அந்த வகையில், நாம் உண்மையிலேயே இந்த மாற்றத்தின் நடுவே இருக்கிறோம், மனிதகுலத்தின் வருங்காலத்தில் நாம் ஒரு திருப்பு முனையை நோக்கி வருகிறோம் என்று சொல்ல முடியும்.*

*கியோட்டோ கம்ப்யூட்டர் கயூன் (கேசிஜி), கியோட்டோ காலேஜ் ஆஃப் கிராஜூயேட் ஸ்டடிஸ் ஃபார் இன்ஃபர்மேட்டிக்ஸ் (கேசிஜிஐ) இன் தாய் நிறுவனம் 1963 ஆம் ஆண்டில் கணினிகள் துவக்க நிலையில் இருக்கும் போதே ஆரம்பிக்கப்பட்டது. ஜப்பானின் முதல் கணினி கல்வி நிறுவனமாக கணினிகள் வளர்ச்சியுடன் கேசிஜி வளர்ந்ததுடன், உலகிற்கு பல உறுதியளிக்கும் பட்டதாரிகளை கொடுத்துள்ளது. இந்த முடிவுகளின் மரபு மற்றும் வரலாற்றின் வழியை பின்பற்றி, கியோட்டோ காலேஜ் ஆஃப் கிராஜூயேட் ஸ்டடிஸ் ஃபார் இன்ஃபர்மேட்டிக்ஸ் ஜப்பானின் முதல் தொழில்முறை பட்டதாரி பள்ளியாக கருதப்பட்டது, நவம்பர் 2003 இல் அதன் நிறுவலை அறிவித்து 2004 ஏப்ரல் மாதம் அதன் முதல் மாணவர்களை வரவேற்றது. இந்த திருப்பு முனையில், உண்மையிலேயே எங்கள் பயணம் தொடங்கிவிட்டது என்று கூறலாம். கேசிஜி, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் பற்றிய மேலும் ஆய்வுக்கு தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் அதே வேளையில், சமுதாயத்தில் இதன் பாதிப்பை முழுமையாக புரிந்துகொண்டு சரியான திசையில் வழிகாட்டும் மனித வளங்களை வளர்க்க முனைகிறது. உங்களுக்கு திட மனமிருந்தால் வயது, தனிப்பட்ட வரலாறு, தேசியவாதத்தை பொருட்படுத்தாமல் அல்லது நீங்கள் மனித நேயம் அல்லது விஞ்ஞானங்களிலிருந்து வருகிறீர்களோ இல்லையோ உங்களுக்காக கதவுகள் திறக்கப்படும். இளங்கலை பட்டங்களை முடித்தவர்கள் மட்டுமல்லாமல், நிஜ உலகில் ஏற்கனவே வெற்றிகரமாக இருக்கும், தங்கள் வேலையில் முன்னேற்றமடையத் துடிக்கும் பெரியவர்கள் மற்றும் ஜப்பானில் படிக்க ஆர்வமுள்ளவர்களையும் இரு கரங்களையும் விரித்து வரவேற்கிறோம்.*



# KCG பேட்ஜ்

## kcg.edu

கே.சி.ஜி.ஐ குரூப் என்பது உலகளாவிய கல்வி நிறுவனங்களின் பேரவை. ராகுஹோகு கேம்பஸ், கமோகாவா கேம்பஸ் மற்றும் கியோட்டோ எக்கிமே கேம்பஸ், கியோட்டோ ஆட்டோமொபைல் காலேஜ்; கியோட்டோ ஜப்பானிய லாங்குவேஜ் டிரெய்னிங் சென்டர் மற்றும் கே.சி.ஜி கேரியர் உட்பட, இதில் கியோட்டோ காலேஜ் ஆ்ப் கிராஜுவேட் ஸ்டடீஸ் ்பார் இன்்பர்மேடிக்ஸ் (கே.சி.ஜி.ஐ); கியோட்டோ கம்ப்யூட்டர் காகுயின் (கே.சி.ஜி) அடங்கும்.
கே.சி.ஜி குரூப்பின் சிறப்படையாளம், "kcg.edu," சிறப்படையாளம் 1995-இல் வாங்கிய இணைய டொமைன் பெயரிலிருந்து (www.kcg.edu) பெறப்பட்டது. இது 2003-இல் கே.சி.ஜ குரூப்பின் தலைமை நிர்வாக அதிகாரி, வட்டாரு ஹெசகாவா அவர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது.
"கே.சி.ஜி" என்ற டொமைன் பெயர் ஜப்பானில் முதல் கணினி கல்வி நிறுவனத்தின் பெயர், "கியோட்டோ கம்ப்யூட்டர் காகுயின் என்பதைக் குறிக்கிறது, ".edu" என்பது ஒரு பொதுவான உயர்மட்ட டொமைன் (gTLD: உயர்மட்ட இணைய டொமைன்களில் ஒன்றாகும்), இது அமெரிக்க அங்கீகாரமளிக்கும் அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்கள் மட்டுமே பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது. ஆறு அமெரிக்க உயர் கல்வி நிறுவனங்கள் - கொலம்பியா பல்கலைக்கழகம், கார்னகி மெலன் பல்கலைக்கழகம், பர்டூ பல்கலைக்கழகம், ரைஸ் பல்கலைக்கழகம் கலிபோர்னியா பல்கலைக்கழகம், பெர்க்லி மற்றும் கலிபோர்னியா பல்கலைக்கழகம், லாஸ் ஏஞ்சல்ஸ் ஆகியவை - gTLD பெற்ற போது, ஏப்ரல் 1985-இல் ".edu"-இன் கீழ் கல்வி நிறுவனங்களின் முதல் பதிவு நடைபெற்றது. மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் (எம்.ஐ.டி), ஹார்வர்ட் பல்கலைக்கழகம் மற்றும் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம் உட்பட, மற்ற புகழ்பெற்ற அமெரிக்க பல்கலைக்கழகங்கள் அதன்பிறகு விரைவில் பின்தொடர்ந்தன.
1989-இல் கே.சி.ஜி குரூப் அமெரிக்காவில் எம்.ஐ.டி மற்றும் பிற பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்களுடன் வெளிநாட்டு பயிற்சி மற்றும் மாணவர் பரிமாற்றத்திற்கான மையமாக, பாஸ்டன் வளாகத்தை நிறுவியது. இந்த முயற்சிகளின் விளைவாக, கே.சி.ஜி குரூப் நம்பகமான கணினி பள்ளியாக மற்றும் ".edu" என்ற பெயருக்கு ஏற்ற உயர் கல்வி நிறுவனமாக அமெரிக்க கணினி உருவாக்குபவர்களாலும் இணைய யுகத்தின் முன்னோடிகளாலும் அங்கீகரிக்கப்பட்டது. ஜப்பானில் இந்த gTLD வழங்கப்பட்ட முதல் கல்வி நிறுவனம் இந்தக் குரூப் தான். பின்னர், gTLD ".edu" அமெரிக்காவிலுள்ள கல்வி நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டது. இன்று வரை கே.சி.ஜி குரூப் ஜப்பானில் ".edu" பெயரைக் கொண்ட ஒரே கல்வி நிறுவனமாக உள்ளது.
கே.சி.ஜி குரூப் டொமைன் "kdg.edu" வைத்திருப்பது கே.சி.ஜி மற்றும் கே.சி.ஜி.ஐ அமெரிக்காவிலும் ஜப்பானிலும் உயர் கல்வி நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றன. எங்கள் ".edu" டொமைன் இன்று எங்கள் முன்முயற்சியின் அடையாளமாக நிற்கிறது. "kcg.edu" என்ற சிறப்படையாளம் மேம்பட்ட தகவல் சமூகத்தில் முன்னோடியான மெயக்கருத்திற்கு தொடர்ந்து மதிப்பளிக்கும் கல்வி நிறுவனமாக கே.சி.ஜி குரூப்பின் வலுவான மெய்க்கருத்தை கைப்பற்றுகிறது மற்றும் காலத்தின் திசையை வடிவமைக்கக்கூடிய எங்கள் பயிற்சி பணியாளர்களின் கல்வி லட்சியத்தைக் குறிக்கிறது.

## KCG குழுமத்தின் நிறம்

The Kyoto College of Graduate Studies for Informatics

### KCG சிவப்பு
(கியோட்டோ காலேஜ் ஆ்ப் கிராஜுயேட் ஸ்டடிஸ் ்பார் இன்்பர்மேட்டிக்ஸ் (KCGI))

பாடசாலை நிர்வாகத்திற்கு அப்பால், KCG குழுமத்தை நிறுவிய ஹிஜியோ ஹஸேகவா அவர்கள், இளமையாக இருந்த போது கிடைக்காமல் போன கல்விக்குச் சவால் விடுக்கும் வண்ணமாக தனது பிந்தைய நாட்களில் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் மறுபடியும் கல்வி பயின்றார். அவர் பாஸ்டனில் ஒரு அப்பார்ட்மெண்டை வாடகைக்கு எடுத்து, இளம் மாணவர்களோடு இலக்கியம் மற்றும் தத்துவ வகுப்புகளில் கலந்து கொண்டார். நிறுவனர் கல்விகற்ற ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் பாடசாலை நிறமான அடர் செந்நிறத்தின் அடிப்படையில், KCGI-யின் பாடசாலை நிறத்தை, KCG நீலத்திற்கு எதிராக இருக்கும் வகையில் KCG சிவப்பு என ஆக்கினார். இது, வயது அல்லது பாலினத்தைப் பொருட்படுத்தாமல், சவால் விடுக்கவும், தொழில்முனையும் திறத்தோடு புதிய காரியத்தை கற்றுக் கொள்ளவுமான மனப்பாங்கை வெளிக்காட்டுகிறது.

Kyoto Computer Gakuin

### KCG நீலம்
(கியோட்டோ கம்ப்யூட்டர் கயூன் நிறுவனம் (KCG) மற்றும் KCG குழுமப் பாடசாலை நிறம்)

ஏனென்றால் KCG நிறுவன ஸ்தாபனத்தில் இருக்கிற அதன் அசல் உறுப்பினர்கள் அனைவரும் பட்டதாரிகளும், கியோட்டோ பல்கலைக்கழகத்தின் பட்டதாரி மாணவர்களுமாவர், KCG மற்றும் KCG குழுமத்தின் நிறத்தை, கியோட்டோ பல்கலைக்கழகத்தின் நிறமான அடர் நீலத்தின் அடிப்படையிலேயே தேர்தெடுத்துள்ளார்கள். இந்நிறத்தை 1970 ஆம் ஆண்டிலிருந்தே உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள், நாங்கள் 1998 ஆம் ஆண்டில் அதன் 35 ஆம் ஆண்டு விழாவில், இந்நிறத்தை "KCG நீலம்" என்றே குறிப்பிட்டோம்.

Kyoto Computer Gakuin Automobile School

### KCG ஆரஞ்சு
(கியோட்டோ கம்ப்யூட்டர் கயூன் ஆட்டோமொபைல் ஸ்கூல் (KCGM) பாடசாலை நிறம்)

கியோட்டோ கம்ப்யூட்டர் கயூன் ஆட்டோமொமைப் ஸ்கூல், அடுத்த தலைமுறை ஆடோட்டோமோட்டிவ் தொழில்நுட்பத்திற்குப் பொருந்துகிற IT மற்றும் நெட்வொர்க்கிங்கில் உள்ள அதிநவீன யுக்திகள் மற்றும் அறிவைக் கொண்டு, ஆட்டோமோட்டிவ் மெஷின்களைப் பிணைக்கிறது. KCGM-ஐப் பொருத்த வரையில், 2013 ஆம் ஆண்டில் சேர்கிற KCG குழுமத்தின் புதிய உறுப்பினராக, KCG குழுமத்திற்குக் கொண்டுவந்துள்ள அதன் புதிய வலுவை வெளிப்படுத்தும் விதமாக அதன் பாடசாலை நிறத்தை நாங்கள் ஆரஞ்சாக நியமித்தோம்.

Kyoto Japanese Language Training Center

### KCG பச்சை
(கியோட்டோ ஜப்பானீஸ் லேங்குவேஜ் டிரெய்னிங் செண்டர் (KJLTC) பாடசாலை நிறம்)

சர்வதேச மாணவர்களைப் பொருத்த வரையில், இந்த மையம் தான் KCG குழுமத்தின் முதல் நுழைவு வாயிலாகும். இம்மையம், நீதித்துறை அமைச்சர் அறிவித்த ஜப்பானிய மொழிக் கல்வி மையமும், கல்வி, கலாச்சாரம், விளையாட்டுக்கள், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் நியமித்த ஆரம்பகட்ட கல்விச் சூழலும் ஆகும். ஏழு கண்டங்களைக் கொண்ட பசுமைப் புவியின் படத்திலிருந்து, KCG நீலம் மற்றும் KCG சிவப்பிற்கு எதிராக இருக்கும் வகையில், பாடசாலை நிறமாக பச்சை நிறத்தைத் தேர்ந்தெடுத்தோம்.

# கேசிஜிஐ-இன் அம்சங்கள்

## சமூகத்தில் உதவும் நடைமுறை திறன்களை சிறப்பாக கற்றல்.

**■ தகவல் தொழில்நுட்பத்திலுள்ள மேம்பாடுகள் மற்றும் தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப பாடத்திட்ட வடிவமைப்பு**

*கேசிஜிஐ இல், பாடத்திட்டங்கள், பாடநூல் வடிவமைப்புகள் மற்றும் அறிவுறுத்தல் வடிவமைப்புகள் ஆகியவை தொழில் துறையின் தேவைகளை கல்விக்கு ஏற்ப விளம்பரப் படுத்த பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள நிபுணர்களிடமிருந்து ஆலோசனையுடன் உருவாக்கப் படுகின்றன. கூடுதலாக, உலகத்தரமான, தற்போதைய தகவல் தொழில்நுட்ப பாடத்திட்டங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன, மேலும் அமெரிக்காவின் ரோச்செஸ்டர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியின் இணைப்பின் அடிப்படையில் இது உருவாக்கப் பட்டிருக்கிறது.*

**■ முற்றிலும் பயிற்சி அடிப்படையிலான பாடத்திட்ட அமைப்பு**

*ஐடி (ஐ.சி.டி) மற்றும் மேலாண்மை திறன் ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும் மனித வளங்களை வளர்ப்பதற்கு, கேசிஜிஐ., ஐ.டி துறையில் மட்டுமல்ல, மேலாண்மை மற்றும் பொருளாதாரம் போன்ற வியாபார சம்பந்தமான பாடங்களைக் கொண்ட பல வகுப்புகளை எடுத்துக் கொள்ளும் மாணவர்களின் இயலுமையைக் கருதுகிறது. தங்கள் இறுதி ஆண்டில், கேசிஜிஐ திட்டத்தில் மாணவர்கள் ஒரு மாஸ்டர் ஆய்வின் இடத்தில் ஒரு செயல் திட்டத்தை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி, தங்கள் தொழில் வாழ்க்கையைத் தொடங்குவதற்கு தேவையான உயர் மட்ட திறன்களைப் பெறுவார்கள்.*

**■ இ-கற்றல் மற்றும் நேரடி வகுப்புகள் ஆகியவற்றின் மூலம் திறமையான கல்வி முறைகளை ஏற்றுக்கொள்ளல்**

*அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழக பேராசிரியர்களின் ஆதரவுடன், கேசிஜிஐ, உலகத்தரம் வாய்ந்த, உயர் நிலை IT கல்வியை அறிந்துணர்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வகுப்புகள் கற்பிக்கப்படும் விதத்தில் கூட நெகிழ்வுத் தன்மையை வலியுறுத்தி, பாடநெறி நடைமுறைக்கேற்ப, மாறுபட்ட கலவையில் இருக்கும். இதில் வழக்கு ஆய்வுகள், களப்பணி, குழு வேலை மற்றும் விவாதங்கள் ஆகியவையும் அடங்கும். கூடுதலாக, கேசிஜிஐ ஆனது ஒரு முழு-புலமுடனான இ கற்றல் ஸ்டூடியோவை நிறுவியுள்ளது மற்றும் இ- கற்றல் மற்றும் நேரடி வகுப்புகள் ஆகியவற்றின் மூலம் பயனுள்ள கல்விகளை செயல்படுத்துகிறது.*

## ஐடி (ICT) மற்றும் நிர்வாகத்தினை நல்ல சமநிலையில் படிக்கவும்.

**■ தகவல் தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை போன்ற துறைகளில் செயல்படக்கூடிய வல்லுநர்களை உருவாக்குதல்**

*இணைய தொழில்நுட்பம் முக்கியமாக கொண்ட, (மேலாண்மை யுக்தி உருவாக்கம் போன்ற) ஐடி (ஐ.சி.டி.) இரண்டு திறன்களையும் கொண்ட திறமையான நபர்கள், நவீன வியாபார சூழலில் தேவைப்படுகிறார்கள். தகவல் மற்றும் மேலாண்மை போன்ற சிறப்புத் துறையை அறிந்த நிபுணர்களை கேசிஜிஐ பயிற்றுவிக்கிறது. பாடத்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன, இதனால் மாணவர்கள் தங்கள் தனிப்பட்ட பின்னணியில் பொருந்தக்கூடிய தகவல்கள் மற்றும் மேலாண்மை பாடதிட்டங்களை நன்கு புரிந்து கொள்ள முடியும்.*

**■ பெருநிறவனம் மற்றும் தகவல் தொழில்நுட்ப செயல்திட்ட வளர்ச்சியில் நடைமுறை அனுபவமுள்ள எண்ணற்ற பயிற்றுநர்களை நியமிப்பது**

*நிபுணர்களை வளர்ப்பதற்கு, கேசிஜிஐ முக்கிய நிறுவனங்களில் சிஇஓ-க்களாக அனுபவம் வாய்ந்த பயிற்றுவிப்பாளர்களான பல நடைமுறை அனுபவமுள்ள ஆசிரியர்களை நியமிக்கிறது. எங்கள் ஆசிரிய ஊழியர்கள் மாணவர்களின் நடைமுறை திறன்களை அவர்களின் உண்மையான அனுபவத்தின் அடிப்படையில் படிப்படியாக வளர்க்கின்றனர். நடைமுறை பயன்பாடு தொடர்பான நேரடியாக இணைக்கப்பட்ட சமீபத்திய கோட்பாடுகள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பற்றிய புரிதலை அதிகரிக்கும் அதே வேளையில், மாணவர்கள் விரிவான தொழில்முறை திறன்களைப் பெறுகின்றனர்.*

## தொழில்துறை பாதைகளை மாற்றி ஐடி துறையில் வளம் பெறுங்கள்.

**■ மானுடவியலில் இருந்தாலும், அறிவியலில் இருந்தாலும் பரவலான துறைகளிலிருந்தும் மாணவர்கள் சேரலாம்.**

*கே.சி.ஜி.ஐ-இன் நோக்கங்களில் ஒன்று பரந்த அளவிலான பின்னணியுடன் மேம்பட்ட தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்குதல். அவர்கள் இதில் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் துறைகள் அல்லது சிறப்பு பகுதிகளை மட்டுப்படுத்தாமல், அறிவியலுடன் மானுடவியலில் உள்ள எண்ணற்ற துறைகளிலிருந்தும் நாங்கள் பல்வேறு வகையான நுழைவுதாரர்களைச் சேர்க்கிறோம். கே.சி.ஜி.ஐ மாணவர்களின் தற்போதைய அறிவு, திறன்கள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப, தேர்ந்தெடுப்புக்குரிய பாடக்கோப்புகளை வழங்கி, பல்வேறு பின்னணியில் உள்ள மாணவர்களை ஆதரிக்கிறது. பணிப்புரியும் போதே தொடர்ந்து படிக்க வேலை செய்யும் பெரியவர்களுக்கு உதவ, கே.சி.ஜி.ஐ பல்வேறு வகையான கற்றல் விருப்பத்தேர்வுகளுடன் ஆதரவளிக்கிறது. ஜப்பானிலுள்ள பட்டதாரி பள்ளிகளால் பாரம்பரியமாக வழங்கப்படாத, வாழ்க்கைத்தொழில் பாதைகளை மாற்றுவதற்கான வாய்ப்புகளை நாங்கள் பெருமையுடன் உருவாக்குகிறோம்.*

**■ கேசிஜிஐ-க்கு நீங்கள் எடுத்து வரும் அறிவுக்குத் தக்க வகுப்புகளை எடுக்கவும்**

*கணினி பற்றி கிட்டத்தட்ட எதுவும் அறியாத மானுடவியல் பட்டதாரிகளிலிருந்து தகவல் தொழில்நுட்பத் துறையில் SE-களாக பணிப்புரியும் பெரியவர்கள் வரை, கே.சி.ஜி.ஐ-இல் தகவல் தொழில்நுட்ப படிப்பில் மாணவர்கள் திறன் மட்டங்களில் வேறுபடுகிறார்கள். எதிர்கால குறிக்கோள்களில் அவர்களின் தற்போதைய திறமைகளை அடிப்படையாகக் கொண்ட ஒவ்வொரு தனி மாணவருக்குமான சிறந்த படிப்பை கேசிஜிஐ வழங்குகிறது. இது துறையில் ஒரு முன் பின்னணி இல்லாத மாணவர்கள் கூட வசதியாக தங்கள் இலக்குகளை நிலைகளில் அடைவதை இது சாத்தியமாக்குகிறது. ஏற்கனவே துறையில் அடிப்படை அறிவு கொண்டிருக்கும் மாணவர்கள் பிரத்யேக பாடங்கள் மூலம் தங்கள் படிப்பைத் தொடங்கலாம், இதன் மூலம் திறம்பட வளரவும், தங்கள் திறன்களை விரிவாக்கவும் முடியும்.*

## நாங்கள் உலக அரங்கில் தீவிரமாக பங்கு வகிப்பதை நோக்கமாக கொண்டுள்ளோம்.

**■ உலகெங்கிலும் உள்ள ஐ.டி. துறையில் உள்ள தலைவர்கள் நடத்தும் பாடதிட்டங்கள்**

*ஐடி வணிகம் உலகளாவிய ரீதியிலும் தேசிய எல்லைகளைத் தாண்டியும் வளர்ந்து வரும் ஒரு துறை ஆகும். வடகிழக்கு மற்றும் ஆசியா உட்பட உலகெங்கிலும் இருந்து உயர் ரகப் பேராசிரியர்களை கேசிஜிஐ மாணவர்களுக்கு சர்வதேச கண்ணோட்டம் தர அழைக்கிறது. அமெரிக்காவின் ரோசெஸ்டர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி மற்றும் கொரியா யுனிவர்சிட்டியில் கிராஜூவேட் ஸ்கூல் ஆஃப் இன்ஃபர்மேஷனல் செக்யூரிட்டி உட்பட உலகெங்கிலும் பல்கலைக் கழகங்களுடனான அறிவார்ந்த உடன்படிக்கைகள் மற்றும் வணிக ஒத்துழைப்புகளை கேசிஜிஐ முடிக்கிறது. இது தகவல் பாதுகாப்புத்துறையின் சிறந்த நிகழ்ச்சிகளில் ஒன்றாகும், கேசிஜிஐ சர்வதேச உறவுகளின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்துகிறது, இதில் கூட்டு ஆராய்ச்சி மற்றும் சர்வதேச மாநாடுகளில் ஈடுபட்டிருக்கிறது.*

## நாங்கள் ஆங்கில முறையில் வகுப்புகளின் ஒரு முழுமையான பட்டியலின் மூலம் உலகளாவிய வீரர்களாக மாற மாணவர்களுக்கு பயிற்சியளிக்கிறோம்.

*கே.சி.ஜி.ஐ பல வகுப்புகளை ஆங்கில முறையில் வழங்கி, மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் மட்டுமே படிப்பதன் மூலம் அவர்களின் பாடக்கோப்புகளை முடிக்கவும் முதுகலை பட்டங்களைப் பெறவும் உதவுகிறது. இந்தப் பாடக்கோப்புகளில் பல வெளிநாட்டிலிருந்து மிகவும் புகழ்பெற்ற பேராசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. 17-க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள், இளங்கலை மற்றும் பட்டதாரி மாணவர்கள் உட்பட, கே.சி.ஜி.ஐ-ல் படிக்கிறார்கள். பலர் ஆங்கிலத்தில் கற்பிக்கப்படும் பாடக்கோப்புகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஜப்பானிய மாணவர்களும் தேவையான ஆங்கில தேர்ச்சி நிலைகளைப் பூர்த்தி செய்தால், ஆங்கில முறையில் படிக்கலாம். இந்தப் பரந்த நோக்குடைய சூழலின் நலன்களின் உதவியுடன், இந்த மாணவர்கள் தகவல் தொழில்நுட்பம் படிக்கும் போது அவர்களின் ஆங்கிலத்தை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் சர்வதேச மனநிலையையும் பெறுகிறார்கள்.*



Premathilaka Shashikala Nimanthi (S)

Student enrolled in KCGI in April 2018, Graduate of Rajarata University



Koichi Hasegawa (H)

Professor of KCGI

*Student Interview*

Professor Hasegawa (H): Hi, how are you?

Premathilaka Shashikala Nimanthi (S): I'm very fine, thank you.

H : OK, let's talk about your life at KCGI. First, please relax (ha-ha).

S : Thank you.

H : How is your life in Japan?

S : Before I came to Japan, I really admired Japanese culture and life. I especially liked the self-discipline and self-control of Japanese people. The only difficult thing is Japanese language.

H : I see. How did you learn about our graduate school?

S : I wanted to do my Master's degree outside of Sri Lanka. So, I searched many universities. At that time, a Sri Lanka agency introduced me to KCGI. I learned that KCGI has Master courses that can be taken in English and Japanese. Then, I searched the KCGI's online website, where I found details about the school, courses and especially about job focus areas. I was really happy because I could come to Japan.

H : So, you are interested in Information Technology....

S : Yes, my undergraduate degree was in Information and Communication.

H : How are your studies going so far?

S : I am really enjoying my studies here. I have learned so much interesting and useful things across many IT fields. And the KCGI professors are teaching me a lot. They have much knowledge and experience to share. I have learned a lot of things from them, and also have done self-study using the class materials. It's been a really good experience.

H : What is your concentration?

S : My concentration is ERP.

H : Do you have any favorite courses?

S : Yes, I enjoy all courses especially, "International Accounting" and "Computer Organization Theory".

H : In the future, do you want to take a job related to ERP?

S : Yes, after I graduate, I want to start my career as an ERP consultant. Before I came to Japan, I worked as a project manager. While I am here, I wish to pursue a job as an ERP consultant.

H : Are you planning to take the test for ERP qualification?

S : Yes, my professor always recommends me to take extra examinations. I will register for the SAP ERP examinations soon.

H : After you graduate from KCGI, do you want to stay in Japan and find a job?

S : Yes, I would prefer to find a job here in Japan. I want to work in a company which has branches all over the world so I can get more work experience in different environments. One day I would like to return to Sri Lanka and give back to my country. That is my target. I have been given so many things from my country so I feel it is my responsibility to give back my knowledge.

H : I see. Thank you for your time and cooperation.

## சமுதாயத்தில் செழிக்க உங்கள் படிப்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**■ முழுமையான தனிப்பட்ட வழிகாட்டுதலுடன் உங்கள் இலட்சிய வேலைகளை நிஜமாக்குதல்**

*கே.சி.ஜி.ஐ அனைத்து மாணவர்களுக்கும் பட்டம் பெற்றவுடன் வேலைகள் தேட உதவுவதை நோக்கமாக கொண்டுள்ளது. பொறுப்பிலுள்ள பயிற்றுநர்கள் தொழில்துறை மற்றும் பிற சமூகங்களில் மாணவர்களின் சார்பாக அவர்களின் அனுபவத்தையும் தனிப்பட்ட வலையமைப்பையும் பயன்படுத்தி ஆதரவளிக்கிறார்கள். மாணவர்களுடன் ஒருவருக்கொருவர் கலந்தாலோசிப்பதன் வழியாக, பயிற்றுநர்கள் மாணவர்களுக்கு அவர்களின் கனவான வாழ்க்கைத்தொழிலை கண்டுபிடிக்க உதவுகிறார்கள். கூடுதலாக, கேசிஜிஐ, தங்கள் சொந்த நிறுவனத்தைத் துவங்குவதற்குத் தேவையான மாணவர்களுக்கு பலவிதமான ஆதரவை வழங்குகிறது, (ஒரு வணிகத்தை தொடங்குவது, நிர்வகிப்பது மற்றும் செயல்படுத்துதல் போன்றவை)*

**■ பட்டதாரிகளிடையே வணிக வலையமைப்புகளை உருவாக்குதல்**

*ஒவ்வொரு வருடமும் கேசிஜிஐ எண்ணிலடங்கா மற்றும் பலவிதமான பட்டதாரிகளை தயாரிக்கிறது, மேலும் கேசிஜிஐ இந்த பட்டதாரிகளால் உருவாக்கப்பட்ட வணிக நெட்வொர்க்கை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. கேசிஜிஐ மாணவர்களின் காலக்கட்டத்தில் குழுவில் பணிபுரியும் பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகிறது, இதன் மூலம் மாணவர்கள் பட்டம் பெற்ற பின்னர் ஒருவருக்கொருவர் மற்றவரின் தனித்துவமான திறமைகளை பயன்படுத்திக் கொள்வர் மற்றும் வணிக வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகியவற்றில் ஒத்துழைப்புடன் பணியாற்றுவர்.*



# சூழல்

உலகத் தரம் வாய்ந்த வர்த்தக அமைப்புகள் உள்ளிட்ட நடைமுறை கல்வி சூழல்

## கல்வி எஸ் ஏ பி அமைப்பு

**■ எஸ் ஏ பி இன் ஈ.ஆர்.பி பேக்கேஜ் மூலமாக உண்மையிலேயே நடைமுறை திறமையை வளர்ப்பது**

பாரம்பரிய பல்கலைக் கழகங்களிலும் பட்டதாரி பள்ளிகளிலும் ஐ.டி. கல்வியிலும் "வியாபாரத்தில் இது எவ்வாறு பயன்படுத்தப்படலாம்?" என்ற கண்ணோட்டம் இல்லை. குறிப்பாக, வணிக மற்றும் துறை ஒருங்கிணைப்பு போன்ற உண்மையான வியாபார நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட நிஜ உலக ஐடி யில் பயன்படுத்தும் வகையில் கல்வியைத் தொடர இதுவரையில் எந்த விதமான சூழலும் இல்லை.

ஜெர்மனியின் எஸ்ஏபி ஏஜி-யின் ஈ.ஆர்.பி (நிறுவன மூலாதார திட்டமிடல்) மென்பொருளை கேசிஜிஐ பயன்படுத்துகிறது, உலகின் முன்னணி ஈ.ஆர்.பி பேக்கேஜ் விற்பனையாளர்களில் ஒருவராகவும், கல்விக்காகவும், IT துறையில் உயர்மட்ட நடைமுறை மனித வளங்களை வளர்ப்பதற்காக ஒரு நடைமுறை ஆய்வு மற்றும் ஆராய்ச்சி சூழலை வழங்குகிறது. இந்த நிறுவ வள திட்டமிடல் (ஈ.ஆர்.பி) அமைப்பு அதனுடைய புற மென்பொருளை ஏற்றுக்கொள்வது உட்பட, சுமார் 437,000 நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகிறது (மார்ச் 2020 நிலவரப்படி SAP புள்ளிவிவரங்கள்). முக்கியமான நிறுவனங்களில், ஃபோர்ப்ஸ் குளோபல் 2000 இல் உள்ள 92% நிறுவனங்கள் SAP ERP-ஐப் பயன்படுத்துகின்றன.

வழக்கமாக இந்த முறை வணிக நிர்வாகம் மற்றும் தகவல் மேலாண்மை கல்வி வழங்குவதற்காக மற்ற கல்வி நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்டது. கேசிஜிஐ-இன் சிறப்பம்சங்களில் ஒன்றான இது, கேசிஜிஐ, ஜப்பானிய முதல் ஐடி தொழில்முறை பட்டதாரி பள்ளியான கேசிஜிஐ, ஜப்பானில் இந்த மென்பொருளை உண்மையான ஈ.ஆர்.பி தொழில்முறை கல்வியை வழங்குவதற்கு பயன்படுகிறது.

# மின்-கற்றல் அமைப்பு

விரிவுரைகளை நிகழ்நேரத்தில் ஒளிபரப்பி விரிவான தொலைநிலை கற்றல் சூழலுடன் மாணவர்களுக்கு ஆதரவளிக்க, கே.சி.ஜி.ஐ கியோட்டோவில் உள்ள முக்கிய வளாகத்தை செயற்கைக்கோள் வளாகங்கள் மற்றும் பிற இடங்களுடன் இணைக்க அடுத்த தலைமுறையின் மின்-கற்றல் அமைப்பை பயன்படுத்துகிறது.

கேசிஜிஐ சமீபத்திய மின்-கற்றல் முறையைப் பயன்படுத்தி க்யோட்டோவுடன் சப்போரா மற்றும் டோக்யோவை இணைக்கும் நிகழ் நேர பாட திட்டங்களை வழங்குகிறது (ஒத்திசைக்கப்பட்ட மின்-கற்றல்). ஆன்லைனில் எந்த நேரத்திலும், எங்கும் படிக்கவும் மதிப்பாய்வு செய்யவும் உதவ KING-LMS-இல் இணைக்கப்பட்டுள்ள பாட உள்ளடக்கத்தையும் நாங்கள் பயன்படுத்துகிறோம். இந்தப் புதுமைகளுடன், கே.சி.ஜி.ஐ ஆன்லைனில் முழுமையாக எடுக்கக்கூடிய பல படிப்புகளை வழங்குகிறது (ஒத்திசையாத மின்- கற்றல்).

*KING-LMS (கேசிஜி- இன்ஃபர்மேஷன் நெட்வொர்க் கேலக்ஸி-லேர்னிங் மேனேஜ்மென்ட் சிஸ்டம்): கேசிஜி- இன் தனியுரிமை ஆய்வு மேலாண்மை மற்றும் ஆதரவு அமைப்பு முறையானது விரும்பிய உள்ளடக்கத்தை சுதந்திரமாகப் படிப்பதை சாத்தியமாக்குகிறது.

**■ நேரமில்லாமல் பணிப்புரியும் பெரியவர்கள் கற்க ஆதரவளித்தல்**

சமீபத்திய ஆண்டுகளில் தங்கள் திறமைகளை மேம்படுத்துவதும், தொழில் வாழ்க்கையில் மாற்றத்தையும் தேடும் பணிபுரியும் பெரியவர்கள், பட்டதாரி பள்ளிகளில் படித்துக்கொண்டே வேலை செய்வது அதிகரித்து வருகிறது. மேம்பட்ட தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களாக மாறுவதை நோக்கமாகக் கொண்டு, பணிப்புரியும் போதே படிக்க விரும்பும் இந்த வேலை செய்யும் பெரியவர்களுக்கு கே.சி.ஜி.ஐ ஆதரவு அளிக்கிறது.






# செயலூக்கம் உடைய புலன்கள்

ஐடி (ஐ.சி.டி.) இன் அறிமுகம் ஐடி (குறிப்பாக வலை வணிக தொழில்நுட்பத்தின் பரவலாக) அதிகரித்து வரும் நுட்பத்துடன் இணக்கமாக பாரம்பரிய ஐ.டி.யுடன் ஒப்பிடுகையில், தற்போது தொழில் உலகம் எதிர்கொள்ளும் சவாலாக உள்ளது. குறிப்பாக, ஐடி (ஐ.சி.டி.) வணிகத்தை மேம்படுத்துவதற்கு மட்டும் பயன்படுத்தாமல், உயர் தொழில் நுட்ப வேலைத் திட்டங்களை உருவாக்குவதற்கும் ஒரு இயக்கம் உள்ளது. இது வணிக மேலாண்மையின் மேல் மட்டத்தில் ஐடி-ஐ அறிமுகப்படுத்தப் படுவதாகும்; இதில் சம்பந்தப்பட்ட மனித வளங்களுக்கு உயர் மட்ட அறிவு மற்றும் திறமை மற்றும் அதே நேரத்தில் உயர்மட்ட மேலாண்மை உணர்வு ஆகியவையும் தேவைப்படும். கேசிஜிஐ ஆனது தொழில்துறைக்கு தேவைப்படும் உயர் தொழில் நுட்ப திறமைகளை வளர்ப்பதற்கு வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டங்களை உருவாக்கியுள்ளது. கேசிஜிஐ-இன் பட்டதாரிகள் ஐடி தொடர்பான பின் வரும் வேலைகளில் பணிபுரிய எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

### சிஐஓ (தலைமை தகவல் அலுவலர்)

நிறுவனங்களில் ஐடி செயல்படுத்துவது அதிகரித்து வருவதால் மற்றும் வணிக மேலாண்மை அடிப்படையை ஐடி அதிகமாக ஆதரிப்பதால், நிறுவனங்கள் ஐடி உத்திகளை தயாரிக்கும் மற்றும் நிறுவன மேலாண்மையில் பங்கு வகிக்கும் சிஐஓ-க்களைத் தேடுகின்றன. நிறுவனத்தின் மேலாண்மை உத்திகள் வடிவமைப்பில் பங்கெடுத்துக் கொள்ளும் உயர் மட்ட தொழில் நிபுணர்கள், நிர்வாகத்தின் மூலோபாயங்களை அறிந்துணர உதவும் சுற்றுச்சூழல்களை உருவாக்குவதன் நோக்கத்தை வளர்த்து, நிறுவனம் பெற்றிருக்கும் பல்வேறு வரிசை மேலாண்மை செய்நுட்ப அறிவை திறமையான தகவல் அமைப்பாக மாற்றுபவர்கள் தான் சி ஐ ஓ க்கள்.

### செயல்திட்ட மேலாளர்

IT அறிமுகத்தை ஊக்குவிக்கும் திட்டங்களின் தலைவராக, திட்ட மேலாளரின் பங்கு முக்கியமானது. திட்ட மேலாண்மை மேலாளர்கள், உள் மேலாண்மை வளங்களை திறம்பட பயன்படுத்துவதை கருத்தில் கொண்டுள்ள உயர் தொழில் வல்லுநர்கள், முழுமையான முறையில் நிர்வகிக்க மற்றும் மேம்படுத்துவதற்கான திறனைக் கொண்டு மற்றும் சமீபத்திய தகவல் தொழில்நுட்பத்தை பொருத்தமான முறையில் அறிமுகப்படுத்துகின்றனர். எனவே, திட்ட மேலாளர்கள் IT மற்றும் வணிக மேலாண்மை ஆகிய இரண்டையும் பற்றி விரிவான அறிவை கொண்டிருக்க வேண்டும். கூடுதலாக, திட்ட மேலாளர்கள் பல்வேறு நிலைகளில் உள்ள பலர் சம்பந்தப்பட்ட குறுக்கு-துறை திட்டங்களில் பங்கேற்பதால், உயர் மட்ட தொடர்பு மற்றும் தலைமை திறன்கள் தேவைப்படுகிறது.

### மூத்த எஸ் ஈ, வலை அமைப்பு கட்டமைப்பாளர்கள்

மூத்த எஸ் ஈ-கள் திட்ட மேலாளர்களுக்கு உதவுவதோடு, தங்கள் சொந்த திட்டங்களை நிர்வகிக்கும் பொறியாளர்களாகவும் உள்ளனர். தொழில் நுட்பம் மட்டுமல்ல, செலவுகள் மற்றும் பணி போன்ற மேலாண்மை காரணிகள் பற்றியும் ஒரு ஆழமான புரிந்துணர்வு எஸ் ஈ க்கு இருக்க வேண்டும். வலைத் தொழில்நுட்பக் கட்டமைப்பாளர்கள், திட்ட மேலாளர்கள் மற்றும் மூத்த எஸ் ஈ களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, அமைப்பின் உண்மையான வளர்ச்சியில் ஈடுபடுவதன் மூலம், சமீபத்திய ஐ.டி திறன்களைப் பயன்படுத்துகின்றனர்.

### அமைப்பு ஒருங்கிணைப்பு ஆலோசகர்

உள்ளகத்தில் IT திறமை இல்லாத காரணத்தால், ஜப்பானிய நிறுவனங்களில் ஐடி அறிமுகப்படுத்துவதில் வெளிநாட்டு ஆலோசகர்களின் தேவை வளர்ந்து வருகின்றது. அமைப்பு ஒருங்கிணைப்பு ஆலோசகர்கள் வாடிக்கையாளர் நிறுவனத்தின் மேலாண்மை உத்திகளுக்கு இணங்க வணிக அமைப்பு திட்டத்தைப் பற்றி ஆலோசனைகளை வழங்குவதுடன், இன்றைய கடுமையான போட்டி சூழ்ந்த சர்வதேச வணிகச் சூழலில் வெற்றி பெற நிறுவனங்களுக்கிடையேயான இணைப்புகளை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான திறன்களைக் கொண்டிருப்பவர்கள். அமைப்பு ஒருங்கிணைப்பு ஆலோசகர்கள் வாடிக்கையாளர் தேவைகளை புரிந்து கொண்டு அதற்கு தகுந்தவாறு பதிலளிக்க வேண்டும், அவர்கள் வலுவான IT, மேலாண்மை மற்றும் தொடர்பு திறன்களை கொண்டிருக்க வேண்டும்.

### வலை சந்தைப்படுத்தல் வல்லுநர்கள்

வலை சந்தைப்படுத்தல் வல்லுநர்கள், இ-வணிகத்தை செயல்படுத்தும், இ-வணிகத் தளங்களை உருவாக்கும் இணையத் திறன்கள் கொண்டர்வர்கள், மற்றும் இணையத்தளம் மூலம் சேவைகள் வழங்குவதற்கான உத்திகளைத் தயாரிக்கும் திறன் மற்றும் வாடிக்கையாளரின் இணைய நடத்தையை புரிந்து கொள்வதற்கான மார்க்கெட்டிங் நுட்பங்களை உருவாக்கக் கூடிய உயர் தொழில் வல்லுநர்கள். வலை சந்தைப்படுத்தல் வல்லுநர்கள், தொழில் வியாபார பரிவர்த்தனைகள் மற்றும் விநியோக அமைப்புகள் மற்றும் இணைய பாதுகாப்பு போன்ற நெட்வொர்க்குகள் பற்றிய மேம்பட்ட அறிவு மற்றும் திறமைகளைப் பற்றிய அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.

### அமைப்பு கட்டமைப்பாளர்கள்

அமைப்பு கட்டமைப்பாளர்கள், நிறுவனங்களின் IT உத்திகள் சம்பந்தப்பட்ட சிக்கல்களைப் பகுப்பாய்வு செய்கின்ற, தீர்வுகளை வடிவமைப்பதற்கான கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் சிக்கலான தற்போதைய அமைப்புடன் ஒருங்கிணைக்கும் புதிய அமைப்பு கட்டமைப்பை வடிவமைத்தல் ஆகியவற்றை செய்யும் உயர் நிலை வல்லுநர்கள். அமைப்பு கட்டமைப்பாளர்கள் உண்மையான அமைப்பு வளர்ச்சியுடனான நிறுவனங்களின் உத்தி வரைவுகளை இணைக்கும் முக்கிய பாத்திரத்தை வகிக்கிறார்கள். அவர்களுக்கு IT திறமைகள் மட்டுமல்லாமல் வணிக, நிர்வாகம், மற்றும் மேலாண்மை பற்றிய விரிவான அறிவும் வேண்டும்.

### தகவல் பாதுகாப்பு ஆலோசகர்

தகவல் நெட்வொர்க்குகள் இ-காமர்ஸ் மற்றும் ஒரு ஐஓடி யை உண்மையாக்க அவசியமான உள்கட்டமைப்புகள் ஆகும். எனினும், இந்த நெட்வொர்க்குகளுக்கு பாதுகாப்பு அபாயங்கள் தொடர்ந்து விரிவடைந்து வருகின்றன. ஒரு தகவல் பாதுகாப்பு ஆலோசகர் வாடிக்கையாளர்களுக்கு தகவல் பாதுகாப்பு கொள்கைகளை உருவாக்கி தகவல் சொத்துக்களைப் பாதுகாப்பதில் ஆலோசனை வழங்குகிறார். வாடிக்கையாளர் எதிர்கொள்ளும் நிலைமைகளைப் புரிந்து கொள்ளவும், அதற்கான சரியான பதிலைத் தரவும், ஒரு தகவல் பாதுகாப்பு ஆலோசகருக்கு மேலாண்மை மற்றும் தகவல் தொடர்பு திறமைகள் தேவைப்படுகின்றன.

### உள்ளடக்க தயாரிப்பு மேலாளர்கள்

உள்ளடக்க தயாரிப்பு மேலாளர்கள், திரைப்படங்கள், அனிமேஷன் மற்றும் விளையாட்டு மென்பொருள் போன்ற ஊடக உள்ளடக்கங்களை தயாரிக்கும் திட்ட அணிகளை மேற்பார்வை செய்கின்றனர். முதலாவதாக, ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, பின்னர் தயாரிப்பு பேச்சு வார்த்தைகள் குழுவின் ஒத்துழைப்புடன் நிறுவனத்துடன் தொடங்குகின்றன, மேலும் உறுதியான வரவு செலவுத் திட்டம் போடப்படுகிறது. மேலும், உள்ளடக்க தயாரிப்பு மேலாளர்கள் இந்த நிதியை எவ்வாறு முடிந்த தயாரிப்பின் மூலம் மீட்டெடுப்பது என்பதைத் திட்டமிட்டு, இந்த திட்டத்தை இயக்க வேண்டும். இதற்கு கடந்த திட்ட செயல்திறன் மற்றும் நடப்பு சந்தை நிலைமைகள் மற்றும் உங்கள் திட்டத்தை நிறைவேற்ற ஒரு குழுவை ஒழுங்கமைக்க தலைமைகளை ஆராயும் திறன் தேவை.

### தரவு ஆய்வாளர்

தரவு ஆய்வாளர்கள் வணிக நடவடிக்கைகளின் மூலம் பெறப்பட்ட வாடிக்கையாளர்கள் மற்றும தயாரிப்புகள் பற்றிய பரந்த அளவிலான தகவல்களைச் சேகரித்து தகவல்களிலுள்ள தன்மைகளையும் போக்குகளையும் கண்டுபிடிக்க புறநிலையாக அவற்றை ஆய்வு செய்கிறாரகள். பின்னர் அவர்கள் மேலாண்மை மற்றும் அமைப்பு வளர்ச்சியிலுள்ள பிரச்சனைகளுக்கு முன்மொழியப்பட்ட தீர்வுகளைப் பட்டியலிடுகிறார்கள். விவசாயம் மற்றும் மருத்துவம் போன்ற துறைகளில் பெரிய தகவல்களின் பயன்பாடு சமீபத்திய ஆண்டுகளில் மேம்பட்டு வருகிறது, மற்றும் அது பயன்படுத்தப்படும் துறைகளின் வரம்பும் தொடர்ந்து விரிவடைந்து வருகிறது. தரவு ஆய்வாளர் புள்ளிவிவர பகுப்பாய்வு மற்றும் தரவுச் செயலாக்கம், மற்றும் கருதுகோள்ளை உருவாக்குதல் மற்றும் சோதனை செய்வதின் அடிப்படையில் தர்க்கரீதியான் சிந்தனை போன்ற தகவல் தொழில்நுட்ப திறன்களுடன், சந்தைப்படுத்துதல் மற்றும் மேலாண்மை பற்றி அறிந்திருக்க வேண்டும்.

# கல்வி இலக்குகள்

எங்கள் பள்ளி மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதில் அதனுடைய குறிக்கோள் மற்றும் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய, நாங்கள் கீழே குறிப்பிட்டுள்ளபடி எங்கள் வணிக தொழில்நுட்ப சிறப்பு பாடத்திற்கு எங்கள் கல்வி இலக்குகளை நிர்ணயிக்கிறோம்.

### 1) அடிப்படை கல்வியறிவைப் பெறுதல்

வணிகத்தை ஊக்குவிக்க அடித்தளமாக செயல்படும் சமூக மற்றும் தகவல் தொடர்பு திறன்களைக் கற்க வேண்டும் என்று மாணவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். மாணவர்கள் ஐ.டி/ஐ.சி.டி-யை கட்டமைக்கும் மென்பொருள் மற்றும் வன்பொருள் வலையமைப்புகள் போன்ற அடிப்படை தொழில்நுட்பங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

### 2) திட்டமிடல் மற்றும் வடிவமைக்கும் திறனை மேம்படுத்துதல்

மாணவர்கள் திறன்களை வளர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது: 1) வணிகம் மற்றும் அதனுடைய ஆதரவளிக்கும் ஐ.டி/ஐ.சி.டி-இன் தற்போதைய மற்றும் எதிர்கால போக்குகளை பரவலாக ஆய்வு செய்து பகுப்பாய்வு செய்வதற்கு; மற்றும் 2) அழுத்தமான பெருநிறுவன மற்றும் சமூக மாற்றங்களுக்கு தர்க்கரீதியான அணுகுமுறையை திட்டமிட்டு முன்மொழிவதற்கு. மேலும், மாணவர்கள் முன்மொழியப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்தக்கூடிய பல்வேறு அமைப்புகள் மற்றும் உள்ளடக்கங்களை வடிவமைக்க திறன்களை வளர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

### 3) வளர்ச்சி மேம்பாடு மற்றும் நடைமுறைப்படுத்தும் திறன்

மென்பொருள் செயலாக்கத்தின் வழியாக திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்ட அமைப்புகள் மற்றும் உள்ளடக்கங்களை மாணவர்கள் தனிப்பட்ட முறையில் பயன்படுத்தக்கூடிய திறனை வளர்க்க வேண்டும் அல்லது இறுதி பயனர்களுக்கு அவற்றை வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். செயல்முறையில், இந்த அமைப்புகள் மற்றும் உள்ளடக்கங்களை உருவாக்க மற்றும் செயல்படுத்த தேவையான பல்வேறு கருவிகள் மற்றும் குறியீடு விதிகள் தொடர்பான அவர்களின் நடைமுறை அறிவை மாணவர்கள் ஆழமாக வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

### 4) தொழில்முறை விழிப்புணர்வு மற்றும் நெறிமுறைகளை வளர்ப்பது

மாணவர்கள் வணிக செயல்முறைகளின் பொறுப்பை எடுத்துக்கொள்ளும் திறனை வளர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். வணிக செயல்முறைகளை தொடர்ந்து மேம்படுத்த, அவர்கள் உயர்வான தொழில்முறை விழிப்புணர்வு மற்றும் நெறிமுறை கண்ணோட்டங்களை வளர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். இந்த இரண்டு விஷயங்களும் ஒன்றிணைந்த நிலையில், நிறுவனங்களை நிர்வகிப்பதற்கான நடைமுறை தலைமைத்துவ திறன்களையும் முறைகளையும் மாணவர்கள் பெற வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

# பாடத்திட்டத்தின் கொள்கைகள்

எங்கள் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கு இணங்க, ஐ.டி / ஐ.சி.டி மேலாண்மை திறன் இரண்டையும் கொண்டு அவர்கள் தேர்ந்தெடுத்த தகவல் தொழில்நுட்ப வணிகத் துறையை தீவிரமாக உருவாக்கக்கூடிய மிகவும் சிறப்பான வல்லுநர்களுக்கு பயிற்சியளிக்க ஒரு பாடத்திட்டத்தை நாங்கள் வழங்குகிறோம்.

### 1. பாடத்திட்டத்தின் பாடக்கோப்புகள் பின்வரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன:

• கவனம் செலுத்த வேண்டிய துறைகள் – படிப்பின் குறிப்பிட்ட பகுதிகள் குறித்து அறிவை ஆழப்படுத்த முறையாக தொகுக்கப்பட்ட பாடக்கோப்புகள்.
• தொழில்துறை – விடய ஆய்வுகள் மற்றும் திட்ட அடிப்படையிலான கற்றல் பயன்படுத்தி வணிகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் குறிப்பிட்ட தொழில்துறையில் தொழில்நுட்பம் மற்றும் திறன்களின் நடைமுறை பயன்பாட்டில் கவனம் செலுத்தும் பாடக்கோப்புகள்
• ஆதரவளிக்கும் தேர்ந்தெடுப்புக்குரிய பாடக்கோப்புகள் – தொழில்நுட்ப போக்குகள், உயர் அளவிலான கருத்தியல் பாடக்கோப்புகளுடன் கவனம் செலுத்துதல் மற்றும் தொழில்துறை பகுதிகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஆதரவளிக்கும் திறன் பாடக்கோப்புகளை உள்ளடக்கும் பாடக்கோப்புகள்

### 2. பாடக்கோப்பு பதிவு மாதிரிகள் மற்றும் முறைகளை நிறுவுதல்

அவர்களின் கற்றல் நோக்கங்கள் மற்றும் முன்னுரிமைகளுக்கு ஏற்ப, மாணவர்கள் அடிப்படை அடித்தள அறிவிலிருந்து பரந்த அளவிலான அறிவுடன் குறிப்பிட்ட தகவல் தொழில்நுட்ப தொடர்புடைய துறையில் பயன்பாடு மற்றும் நடைமுறை வரை பரந்த மற்றும் ஆழமான நிபுணத்துவத்தை வலியுறுத்தும் ஒரு "கவனம் செலுத்த வேண்டிய", பாடக்கோப்புகளின் தொகுப்பை தேர்ந்தெடுக்கிறார்கள். கூடுதலாக, பெஸ்போக் பாடத்திட்டம் மாணவர்களின் பல்வேறு வகையான தேவைகள் மற்றும் அவர்களின் தனிப்பட்ட ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக்கான இலக்குகளுடன் ஒத்திசைந்திருக்கும் பாடக்கோப்புகளைத் தேர்ந்தெடுக்க மாணவர்களை அனுமதிக்கிறது.
அவர்களின் கற்றலை தொழில்முறையான பயன்பாட்டில் விரிவுபடுத்த, பரந்த அளவிலான தொழில்துறை துறைகளில் தொழில்நுட்பத்தின் நடைமுறை பயன்பாட்டை வலியுறுத்தும் தொழில்துறை படாக்கோப்புகளையும் பாடத்திட்டம் வழங்குகிறது. மாணவர்கள் அவர்களின் அறிவை குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கு பயன்படுத்துவதோடு பல்வேறு தொழில்துறைகளில் வடிவமைப்புகளையும் திட்டங்களையும் உருவாக்கவும் பயன்படுத்துகிறார்கள். தொழில்துறை பாடக்கோப்புகள் மாணவர்களின் முக்கியமான கவனம் செலுத்த வேண்டிய பாடக்கோப்புகளைப் பூர்த்தி செய்வதற்காக உள்ளன.

### 3. மாஸ்டர் திட்டம்

பாடக்கோப்பு பணிகளுடன் சேர்ந்து, எங்கள் பாடத்திட்டம் ஆசிரியர்களின் வழிகாட்டுதலின் கீழ் ஒரு மாஸ்டர் திட்டத்தை நிறைவு செய்வதன் மூலம் அவர்களின் சொந்த ஆர்வத்தை தொடர்வதன் மூலம் மாணவர்களின் நடைமுறை மற்றும் பயன்பாட்டு திறனை வளர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 4. மாற்றங்களை ஏற்றுக்கொள்தல்

எங்கள் பாடத்திட்டம் ஐ.டி / ஐ.சி.டி துறையில் விரைவான மாற்றங்களை ஏற்றுக்கொள்கிறது. ஜப்பான் மற்றும் வெளிநாடுகளில் இருக்கும் மிகவும் திறமையான வல்லுநர்களுக்கு தேவைப்படும் தொழில்துறை மற்றும் சமூக மாற்றங்களுக்கு ஏற்ப பாடத்திட்டத்தை பள்ளி தொடர்ந்து மதிப்பாய்வு செய்து மாற்றியமைக்கிறது.

# டிப்ளோமா கொள்கைகள்

பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வர்களுக்கு பள்ளி முதுகலை பட்டம் வழங்குகிறது.

**1) ஒதுக்கப்பட்ட காலத்திற்குள் முன்பே தீர்மானிக்கப்பட்ட பாடக்கோப்பு பணிகளை முழுமையாக முடிப்பது (எ.கா. 4 செமஸ்டர்கள்)**
**2) பட்டப்படிப்புக்கான முன்பே தீர்மானிக்கப்பட்ட கிரெடிட்களை முழுமையாக நிறைவு செய்தல்**

மாணவர்கள் பின்வரும் பண்புகளுடன் இருக்க வேண்டும் என்று பள்ளி விரும்புகிறது:

**a. அவர்களின் வாழக்கைத்தொழிலில் பங்களிப்பாளர்களாக மாறுவதற்கு அடித்தள அறிவை பெற்று விரிவாக்க வேண்டும்.**
**b. இந்த அறிவை மாணவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட துறையில் உயர் திறமையான நிபுணர்களாக மாறுவதற்கு பயன்படுத்த வேண்டும்.**

அவர்களின் வாழக்கைத்தொழிலில் மதிப்பிற்குரிய உறுப்பினர்களாக ஆவதற்கு உயர்வான நெறிமுறையுடன் நடந்து கொள்ள வேண்டும்.



# உயர் தகுதி வாய்ந்த தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களின் வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டங்கள்

கே.சி.ஜி.ஐ-இன் பள்ளி தத்துவத்தின் இலக்குகளில் ஒன்று என்னவென்றால் உயர் தகுதி வாய்ந்த தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களின் வளர்ச்சி மற்றும் பட்டப்படிப்பு. இந்த இலக்கை அடைய, மாணவர்களால் இயக்கப்படும் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளுடன் மாணவர்களின் மாறுபட்ட கல்வி நோக்கங்களைப் பூர்த்தி செய்ய வரம்பிலான பாடக்கோப்பு பதிவு மாதிரிகளை இணைத்து, கே.சி.ஜி.ஐ ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தை நிறுவுகிறது.




### ■ சிறப்புடை நியமம் பெறுதல்

உயர் தகுதி வாய்ந்த தகவல் தொழில்நுட்ப வல்லுநராக, தகவல் தொழில்நுட்பத்தைப் பற்றிய பரந்த அளவிலான அறிவை உள்ளடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நம்பத்தகாதது. மாணவர்கள் நிபுணத்துவம் அடைய உதவ, கே.சி.ஜி.ஐ பல குறிப்பிட்ட துறைகளை அடையாளம் கண்டு அந்த துறைகளுக்கான பாடத்திட்டங்களை உருவாக்குகிறது. இந்த கவனம் செலுத்த வேண்டிய துறைகள் அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகள் பற்றி, அதனுடைய அடிப்படையிலிருந்து பயன்பாட்டு தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறை திறன்கள் வரை பரந்த ஆழமான அறிவைப் பெற மாணவர்களுக்கு உதவுகின்றன.

### ■ சமூகத்தின் தேவைகளுக்கு பதிலளித்தல்

நவீன தொழில்துறைகளின் வரம்பு முழுவதும், செயல்திறனை உயர்த்தி, அறிவை வளர்த்து மற்றப்படி பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவதற்கான பயன்பாட்டு தொழில்நுட்பத்தின் தேவை படிப்படியாக அதிகரித்து வருகிறது. கே.சி.ஜி.ஐ விடய ஆய்வுகள் மூலம் கற்றுக்கொண்டு பிரச்சனைகளைக் கையாளுவதன் மூலம், ஒரு தொழில்துறையைத் தேர்ந்தெடுத்து அந்த துறையில் தகவல் தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்த மாணவர்களுக்கு உதவக்கூடிய தொழில்துறை பாடக்கோப்புகளை ஏற்பாடு செய்வதன் மூலம் இந்த தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

### ■ ஆக்கப்பூர்வமான மற்றும் நடைமுறை திறன்களை நிரூபித்தல்

மிகவும் உயர் தகுதி வாய்ந்த தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களால் ஒவ்வொரு பாடத்திலும் அவர்களுக்கு கிடைக்கும் அறிவை நடைமுறை பயன்பாடுகளுக்கும் உண்மையான பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் பயன்படுத்த முடிய வேண்டும். அவர்களால் அவர்களின் சொந்த முயற்சியில் எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு வடிவமைத்து அந்த தீர்வுகளின் நலன்களை மற்றவங்களுக்கு திருப்பிக் கொடுக்க முடிய வேண்டும். மாணவர்கள் அவர்களுக்கு தேவையான அறிவைப் பெறுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்த, மாணவர்கள் திட்ட ஆதரவாளரின் வழிகாட்டுதலின் கீழ், ஆராய்ச்சி திட்டங்கள்/சுயாதீனமான ஆய்வுடன் எந்தவொரு பரந்த அளவிலான கருத்துக்களிலும் மாஸ்டர் திட்டம் இருக்கும் ஒரு பாடத்திட்டத்தைப் பின்பற்றுகிறார்கள்.

### ■ தொழில்முறை நோக்கு நிலை

மிகவும் உயர் தகுதி வாய்ந்த தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் உண்மையான தொழில்துறை களங்களில் உண்மையான பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு நடைமுறை தீர்வுகளை வழங்கும் திறனுடைய உயர் பயிற்சி பெற்ற வல்லுநர்களாக அவர்களின் பொறுப்புகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். இதற்கு கேசிஜிஐ, மாணவர்கள் பயிற்சி பெற விண்ணப்பிக்க ஊக்குவிக்கிறது. பயிற்சிகள் மாணவர்களின் திறன்களை வளர்த்து, அவர்களின் சிக்கலைத் தீர்ப்பதற்கான திறன்களை கூர்மைப்படுத்துவதற்கான அனுபவங்களை வழங்குகிறது.

ஒரு வழிகாட்டல் மாதிரியின் தேர்வு மற்றும் திட்டங்களின் ஒதுக்கீடு போன்றவை அனைத்து மாணவர்கள் மீதும் ஒரே மாதிரியாக சுமத்தப்படவில்லை. மாறாக, மாணவர்கள் தங்கள் நலன்கள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப அவர்களின் படிப்பின் ஆழத்துடன் ஒரு பரந்த தேர்வு வரம்பினை இணைக்க முடியும். கே.சி.ஜி.ஐ மிகவும் உயர் தகுதி வாய்ந்த தகவல் தொழில்நுட்ப வல்லுநருக்கு தேவையான பொருத்தமான அறிவு மற்றும் நுட்பங்களை அவர்கள் கண்டுபிடிப்பதை உறுதிப்படுத்தும் போது அவர்களின் விருப்பப்படி படிப்புகளைத் தொடர மாணவர்களின் சுதந்திரத்திக்கு மதிப்பளிக்கக்கூடிய பாடத்திட்டத்தை வடிவமைக்கிறது.







# கே.சி.ஜி.ஐ-இல் பாடத்திட்ட அமைப்பு

ஐ.சி.டி துறையில் மாணவர்களுக்கு தேவைப்படும் அடிப்படை நுட்பங்கள் மற்றும் அறிவை வழங்கும் பாடத்திட்டத்தை கே.சி.ஜி.ஐ ஒருங்கிணைக்கிறது. கட்டாய பாடக்கோப்புகளில் வணிகர்களுக்கு தேவைப்படும் அடிப்படை திறன்களுடன் தொழில்முறையான துறைகளில் பயன்படுத்துவதற்கான நடைமுறை திறன்களையும் கற்பிக்கும் பாடக்கோப்புகள் உள்ளடங்கும். கவனம் செலுத்த வேண்டிய பாடக்கோப்புகள் என்பது குறிப்பிட்ட தொழில்முறையான துறையைப் பற்றி பல்வேறுவகையான உள்ளடக்கங்களையும் கொண்ட பாடக்கோப்புகள். தொழில்துறை கோப்புகளில் அதிக தேவை இருக்கும் முக்கிய துறைகளுடன் தொடர்புடைய பாடக்கோப்புகள் உள்ளன. ஐ.சி.டி மிகவும் வேகமாக வளர்ந்து வருவதால், எனினும், சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் வழக்கத்திற்கு மாறான வழிகளில் பாடத்திட்டங்களை உருவாக்கி படிக்க வேண்டும். இந்த தேவையைப் பூர்த்தி செய்ய, மாணவர்கள் அவர்களின் பயிற்றுநர்களுடன் கலந்தாலோசித்து, அவர்களின் தனிப்பட்ட கல்வி இலக்குகளுக்கு ஏற்ற கட்டாயமற்ற பாடக்கோப்புகளிலிருந்து தேர்ந்தெடுப்பதன் மூலம் அவர்களின் சொந்த பாடத்திட்டத்தை உருவாக்கலாம். அத்தகைய பாடத்திட்டம் பெஸ்போக் பாடத்திட்டம் என்று அழைக்கப்படுகிறது.

**பதிவு செய்தல்**

**கட்டாய பாடக்கோப்புகள்**
- ICT தொழிற்துறையில் நிபுணத்துவ தகவல் தொடர்புகள்
- தலைமைத்துவ கோட்பாடு
- திட்டத்தின் அடிப்படைகள்

**கவனம் செலுத்த வேண்டிய பாடக்கோப்புகள்**
- ஈ.ஆர்.பி
- நெட்வொர்க் நிர்வாகம்
- வணிக தரவு பகுப்பாய்வு
- ஐ டி மாங்கா மற்றும் அனிம்
- உலகளாவிய தொழில்முனைவு
- ஐ.டி சுற்றுலா
- வலை அமைப்புகள் மேம்பாடு
- செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ)

மேலுள்ள கவனம் செலுத்த வேண்டிய துறைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்

அல்லது

**தொழில்துறை பாடக்கோப்புகள்**
- ஃபின்டெக்
- கடல் சார் துறை
- உள்ளடக்க சந்தைப்படுத்துதல்
- விவசாயம்
- சுகாதாரம் மற்றும் மருத்துவம்
- கல்வி

**ஆதரவளிக்கும் விருப்பப் பாடக்கோப்புகள்**

**பெஸ்போக பாடத்திட்டம்**

உங்கள் சொந்த கல்வி இலக்குகளுக்கு ஏற்ற கட்டாயமற்ற பாடக்கோப்புகளிலிருந்து தேர்ந்தெடுத்து, உங்கள் சொந்த பாடத்திட்டத்தை உருவாக்கவும்.

**மாஸ்டர் திட்டம்**

**தகவல் தொழில்நுட்பத்தின் முதுநிலை அறிவியல் (தொழில்முறைக்கான பட்டம்)**

## ◆ கட்டாய பாடக்கோப்புகள்

கேசிஜிஐ பட்டதாரி படிப்பின் முக்கிய படிப்பை கருத்தில் கொள்ளாமல் எந்தவொரு பின்னணியிலிருந்தும் மாணவர்களை ஏற்றுக் கொள்கிறது. இந்த திறந்த மனப்பான்மை, முடிந்த வரை பல மக்களுக்கு சவாலான தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு சமூகத்தில் எமது பணியை நிறைவேற்ற ஒரு வழி. இது போன்று, கே.சி.ஜி.ஐ-இல் இருக்கும் கட்டாய பாடக்கோப்புகள் ஒவ்வொரு மாணவரின் சிறப்புத் துறையைப் பொருட்படுத்தாமல், உயர் மட்ட வல்லுநர்களிடம் எதிர்பார்க்கப்படும் பயனுள்ள மற்றும் பகுத்தறிவான தகவல் தொடர்புக்கான முக்கிய திறன்களை அறிவுறுத்துகிறது.

**தேவையானவை**
- ICT தொழிற்துறையில் நிபுணத்துவ தகவல் தொடர்புகள்
- தலைமைத்துவ கோட்பாடு
- திட்டத்தின் அடிப்படைகள்

## ◆ ஆராய்ச்சி திட்டங்கள்/சுயாதீனமான ஆய்வு

ஆராய்ச்சி திட்டங்கள்/சுயாதீனமான ஆய்வு என்பது ஒரு கல்வி ஆலோசகரின் வழிகாட்டுதலின் கீழ், மாணவர்கள் கே.சி.ஜி.ஐ-ல் வழங்கப்படும் பாடக்கோப்புகளின் வரையறைகளால் கட்டுப்படுத்த முடியாத, அவர்களின் சொந்த முயற்சியின் கீழ் ஆராய்ச்சியைத் தொடரும் ஒரு அமைப்பாகும். இந்தக் கட்டமைப்பில், மாணவர்கள் வாய்வழியாக வழங்கக்கூடிய, அவர்களின் ஆராய்ச்சி முடிவுகளை ஒரு ஆராய்ச்சி அறிக்கையில் தொகுக்கிறார்கள். வழங்கப்பட்ட முடிவுகள் போதுமான அளவில் உறுதியாக இருந்தால், மாணவர்களுக்கு கிரெடிட்கள் வழங்கப்படுகின்றன. சில வகையான மாஸ்டர் திட்டங்கள் ஆராய்ச்சி திட்டங்கள் அல்லது சுயாதீனமான ஆய்வுடன் இணைக்கப்படலாம்.

## ◆ உங்கள் படிப்புகளைத் தேர்ந்தெடுப்பது

கல்வி ஒருங்கிணைப்பாளருடன் கலந்தாலோசித்து, மாணவர்கள் அவர்களின் சொந்த படிப்பு திட்டங்களைத் திட்டமிட ஒவ்வொரு கல்வி காலத்திலும் அவர்கள் படிக்க வேண்டிய பாடக்கோப்புகளை கவனம் செலுத்த வேண்டிய, தொழில்துறை மற்றும் ஆதரவளிக்கும் தேர்ந்தெடுப்புக்குரிய பாடக்கோப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கிறார்கள்.

இந்தப் பாடக்கோப்புகள் அடிப்படை பாடக்கோப்புகளாக பிரிக்கப்படுகின்றன, இவை அறிதல் குறித்து முன்நிபந்தனைகள் எதுவும் இல்லாதவை, மற்றும் குறிப்பிட்ட அளவிலான முன்நிபந்தனை அறிதல் எதுவும் கேட்காத, பயன்பாட்டு பாடக்கோப்புகள். மாணவர்கள் போதுமான கல்வி முடிவுகளை அடைய முடியும் என்பதை உறுதிப்படுத்த, ஒரு பாடக்கோப்பு பாதை (பரிந்துரைக்கப்படும் படிப்பு முறை) குறிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில், ஒரு மாணவரால் ஒரு காலத்திற்கு முடிக்கக்கூடிய பாடக்கோப்பு பிரிவுகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட படிப்புக்கு போதுமான நேரம் கிடைக்கக்கூடிய படிப்பு திட்டத்தை மாணவர்களால் உருவாக்க முடியும் என்பதை இந்த விதி உறுதிப்படுத்துகிறது.

## ◆ இன்டர்ன்ஷிப்-உள்ளகப்பயிற்சி

கேசிஜிஐ, படிப்பு பகுதிகள் தொடர்பான ஒரு வியாபார நிறுவனத்தில் ஒரு குறிப்பிட்ட காலம் வேலை அனுபவம் பெற கேசிஜிஐ, மாணவர்களுக்கு உதவும் வேலைவாய்ப்பு திட்டம் ஒன்றை வழங்குகிறது. மாணவர்கள் உண்மையான உலக-பணிச் சூழலில் கே.சி.ஜி.ஐ-ல் அவர்களுக்கு கிடைத்த தொழில்முறை அறிவு மற்றும் தகவல் தொடர்பு திறன்களைப் பயன்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள், இதன் மூலம் அவர்கள் கற்றுக்கொண்டதை நடைமுறை பயன்பாட்டிற்கு கொண்டு வருகிறார்கள். அவர்கள் பயிற்சிப் பணிகளை முடித்த பின், மாணவர்கள் பங்கேற்பு அறிக்கையை சமர்ப்பித்து, கிரெடிட்களைப் பெற வாய்வழியாக விளக்கவுரை வழங்குகிறார்கள்.

## மாஸ்டர் திட்டம்

பல கே.சி.ஜி.ஐ பயிற்றுநர்களுக்கு கியோட்டோ பல்கலைக்கழகம் மற்றும் பிற புகழ்பெற்ற ஜப்பானிய பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குவதில் விரிவான அனுபவமுள்ளது, அல்லது உலகளவில் வணிகத்தின் முன்னணியில் செயல்படுகிறார்கள். கே.சி.ஜி.ஐ மாணவர்கள் அவர்களின் மாஸ்டர் திட்டங்கள் குறித்து இந்தப் பயிற்றுநர்களிடமிருந்து நேரடியாக வழிகாட்டுதலைப் பெறலாம்.

### ◆ கண்ணோட்டம்

கே.சி.ஜி.ஐ-ல் இருக்கும் மாஸ்டர் திட்டங்களுக்கு பிரச்சனைகள் பற்றிய மாணவர்களின் சொந்த விழிப்புணர்வின் அடிப்படையில் அமைப்பதில், பகுப்பாய்வு செய்வதில் மற்றும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவதில் அவர்களை வழிநடத்தும் நோக்கத்துடன், ஐ.டி-இல் பயன்பாட்டிலுள்ள நடைமுறை பயன்பாடுகள் மற்றும் தொழில்நுட்பத்தில் கவனம் செலுத்தக்கூடிய பாடக்கோப்புகள் தேவைப்படுகின்றன. அக்செண்ட் ஆராய்ச்சி செய்யும் பாரம்பரிய பல்கலைக்கழக முதுகலைப் பட்டத் திட்டங்களுடன் ஒப்பிடுகையில், கே.சி.ஜி.ஐ மாஸ்டர் திட்டங்கள் புதிய கண்டுபிடிப்புகளை வழங்குவதோடு கூடுதலாக நடைமுறையிலுள்ள கருவிகள், கட்டமைப்பு மற்றும் பலவற்றைப் பயன்படுத்தி சமூகம் அல்லது தனிநபர்களுக்கான வாழ்க்கையை மேம்படுத்த மாணவர்களுக்கு வாய்ப்புகள் உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளன.

### ◆ நோக்கங்கள்

கே.சி.ஜி.ஐ மாஸ்டர் திட்டங்களில், துறைகள் மற்றும் தொழில்துறைகளில் மாணவர்கள் அவர்களின் படிப்புகளில் பெற்றுள்ள நிபுணத்துவமான அறிவின் அடிப்படையில், குறிப்பிட்ட கருவிகளில் (தளங்கள், மென்பொருள், சேவைகள், கட்டமைப்புகள் மற்றும் வணிக மாதிரிகள் உட்பட) கவனம் செலுத்துவதன் மூலம் பிரச்சனைகளை ஆய்வு செய்து தீர்வுகளை வழங்குகிறார்கள்.









### ◆ நடைமுறைப்படுத்தும் முறைகள்

மாணவர் திட்ட ஆதரவாளரின் (மாஸ்டர் திட்டத்தின் பொறுப்பிலுள்ள பயிற்றுவிப்பாளர்) வழிகாட்டுதலின் கீழ், அவருடைய அல்லது அவளுடைய சொந்த முயற்சியில் மாஸ்டர் திட்டத்தை தொடர்கிறார். ஒவ்வொரு செமஸ்டரிலும் எடுக்கப்பட்ட வழிமுறைகள் பின்வருமாறு. கல்வித் துறையில் உலகத் தலைவரான கொலம்பியா பல்கலைக்கழகத்தின் நெகிழ்வான அணுகுமுறை மாதிரியை கே.சி.ஜி.ஐ பின்பற்றுகிறது. படிப்பின் காலம் மற்றும் உள்ளடக்கத்தைப் பொறுத்து, ஒவ்வொரு மாணவரும் பின்வரும் நான்கு வகைகளில் ஒன்றைத் தேர்வு செய்கிறார்கள்: 1) மாஸ்டர் அறிக்கை 2) மாஸ்டர் திட்டம் 3) ஹானர்ஸ் மாஸ்டர் திட்டம் 4) ஹானர்ஸ் மாஸ்டர் ஆய்வறிக்கை

*மாஸ்டர் திட்டத்தில் நிகழ்வுகளின் செயல்வழி உதாரணம் (கண்ணோட்டம்)*

#### 2வது செமஸ்டர்

மாணவர்கள் மாஸ்டர் திட்டத்திற்கான திட்ட அடிப்படைகளில் (கட்டாய பாடக்கோப்புகள்) கலந்து கொண்டு திட்ட அமைப்பு மற்றும் செயல்படுத்தும் முறை பற்றி பொதுவாக அறிந்து கொள்கிறார்கள். மாஸ்டர் ப்ராஜக்ட் செய்வதற்கு திட்டமிடும் மாணவர்கள் இதற்காக ஒரு ஆராய்ச்சி திட்டத்தினை தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

#### 3வது மற்றும் 4வது செமஸ்டர்

ப்ராஜக்ட் பற்றிய செயல்முறைகள் மற்றும் முடிவுகளை மாணவர்கள், அவன் அல்லது அவளுடைய ப்ராஜக்ட் ஸ்பான்ஸரிடம் தவறாமல் தினமும் தெரிவிக்க வேண்டும். முடிப்பதற்கு முன், மாணவர்கள் ஆய்வறிக்கை போன்றவற்றை சமர்ப்பிக்கிறார்கள் மற்றும் வாய்வழி விளக்கவுரை மூலம் பயிற்றுநர்களால் நேர்முகத்தேர்வு நடத்தப்படுகிறது.

## ஐ.டி சுற்றுலா

*கேசிஜிஐ இத்தாலியில் சர்வதேச மொழிகள் மற்றும் ஊடக (ஐயுஎல்எம்) சர்வதேச பல்கலைக்கழகமான கௌரவமிகு பல்கலைக்கழகத்தில் சுற்றுலா கல்வியை படிக்க வாய்ப்பை வழங்குகிறது.*

கேசிஜிஐ இத்தாலியில் மிலன் நகரிலுள்ள கௌரவமிகு பல்கலைக்கழகமான சர்வதேச மொழிகள் மற்றும் ஊடக பல்கலைக்கழகத்துடன் கூட்டு சேர்ந்துள்ளது. ஐயுஎல்எம் பட்டதாரி திட்டத்தில் இரட்டை முதுநிலை பட்டத்தை படிக்க நாங்கள் உங்களுக்கு வாய்ப்பை வழங்குகிறோம்.

ஐயுஎல்எம் 1968 இல் மிலனில் நிறுவப்பட்ட ஒரு தனியார் பல்கலைக்கழகமாகும். இதில் நான்கு பாடப்பிரிவுகள் உள்ளன: கலை மற்றும் பண்பாட்டு பாரம்பரியம், சுற்றுலா, மொழி வடிவம், மற்றும் தகவல் தொடர்பு, பிஆர் மற்றும் விளம்பரம். தற்போது இதில் மொத்தம் 6,300 இளங்கலை பட்டதாரி மற்றும் பட்டதாரி மாணவர்கள் பயில்கின்றனர். ஐயுஎல்எம் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட அணுகு முறையை ஏற்றுள்ளது மேலும் வணிக நோக்கம் கொண்ட நடைமுறை கல்வியில் முன்னோடியாகப் பார்க்கப்படுகிறது. ஐயுஎல்எம் தற்போதைய தேவைகளை எதிர்கொள்ள தொடர்ந்து சவால் விட்டு அதே சமயத்தில் யுனெஸ்கோவின் ஆய்வுக் கழகம் மற்றும் உலகெங்கிலுமுள்ள இதர கல்வி சங்கங்களுடன் உறவை உருவாக்கி வருகிறது. குறுகிய கால சுற்றுலா மற்றும் பயிற்சி வகுப்பும் அளிக்கப்படுகிறது. அதில் கேசிஜிஐ மாணவர்கள் இரண்டு வாரங்களுக்கு வெளிநாட்டு பல்கலைகழகத்தில் படிக்கின்றனர்.

**International University of Languages and Media** https://www.iulm.it/en/home

IULM UNIVERSITY



# உங்கள் பாடக்கோப்புகளை உருவாக்குதல்

கே.சி.ஜி.ஐ-இல் தகவல் தொழில்நுட்பத்தில் அறிவியலின் முதுகலை பட்டத்தைப் (ஐ.டி-இல் எம்.எஸ்) பெற, அனைத்து மாணவர்களும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கிரெடிட்களை வெற்றிகரமாக பெற்று ஒரு மாஸ்டர் திட்டத்தையும் முடிக்க வேண்டும். கே.சி.ஜி.ஐ-இல் வழங்கப்படும் பாடக்கோப்புகள் பின்வரும் மூன்றாகப் பிரிக்கப்படுகின்றன: கவனம் செலுத்த வேண்டிய துறை, தொழில்துறை பாடக்கோப்புகள் மற்றும் ஆதரவளிக்கும் தேர்ந்தெடுப்புக்குரிய பாடக்கோப்புகள். வலை அடிப்படையிலான வணிகம் தொடர்பான பரந்த அளவிலான பாடக்கோப்புகளில், வலுவாக தொழில்துறை கவனத்தை ஈர்க்கும் மற்றும் தொடர்புடைய அறிவு மற்றும் திறன்களுக்கான தேவை அதிகமாக இருக்கும் பாடக்கோப்புகளை கே.சி.ஜி.ஐ தேர்ந்தெடுக்கிறது. மாணவர்கள் அவர்களின் படிப்புகளில் திறம்பட கவனம் செலுத்த உதவுவதற்கு, நாங்கள் இந்தப் பாடக்கோப்புகளைப் பாடத்திட்டங்களாக தொகுக்கிறோம். மாணவர்கள் அவர்களின் சொந்த வழியில் சுதந்திரமாக படிக்க, ஒரு குறிப்பிட்ட துறையுடன் தொடர்பில்லாத பாடக்கோப்புகளைத் தேர்ந்தெடுக்க பாடத்திட்டத்தின் வடிவமைப்பு அனுமதிக்கிறது.

| கவனம் செலுத்த வேண்டிய துறைகள் | மாணவர்கள் ஐடி தொடர்பான அறிவில் ஒரு குறிப்பிட்ட விசேஷமான துறையை மாணவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த வாய்ப்புக்குள் தங்களுடைய அறிவை ஆழமாக வளர்த்துக் கொள்கின்றனர். மாணவர்களுக்கு தனிச்சிறப்பான அதே சமயம் போதுமான அளவு விரிவான அடிப்படை அறிவைப் பெறுவதில் உதவுவதுடன், பல்வேறு துறைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. |
|---|---|
| ஈ.ஆர்.பி | நிறுவன வளத் திட்டமிடுதல் முறைகளை (ஈ.ஆர்.பி) மாணவர்கள் கற்கின்றனர். இது நிறுவனங்கள் மக்கள், சரக்கு மற்றும் பண மேலாண்மை செய்ய பயன்படுகிறது. மேலும் வர்த்தக முடிவுகளை எடுப்பதற்கு ஆதரவாக இது இருக்கிறது என்பதைப் பற்றி படிக்கிறார்கள். |
| வணிக தரவு பகுப்பாய்வு | மாணவர்கள் க்ளவுட் மற்றும் தரவு தளங்களில் சேகரிக்கப்பட்டிருக்கும் தகவல்களை பகுப்பாய்வு செய்யவும் மேலும் அவர்களுடைய பகுப்பாய்வை திறன் வாய்ந்த முடிவுகளை எடுப்பதற்காக பயன்படுத்துகிறார்கள். |
| உலகளாவிய தொழில்முனைவு | இந்த பாடத்திட்டம் ஐடி வணிகத்தில் ஒரு தொழில் முனைவோராக வெற்றி பெற தேவையான அறிவையும் திறன்களையும் கற்றுக் கொடுக்கிறது. தொழில் முனைவோருக்கான மனநிலை, தலைமைத்துவம் மேலும் தரவு பகுப்பாய்வு முறைகள் மற்றும் பயன்பாடு ஆகியவை இதில் அடங்கும் . |
| வலை அமைப்புகள் மேம்பாடு | மாணவர்கள் இந்தப் பாடத்திட்டத்தில் தரவுத் தளங்கள் மற்றும் கிளவுட் சேவைகள் போன்ற ஆதாரங்களை இணைக்கும் இணையதளங்களை எப்படி திட்டமிட்டு வடிவமைப்பது என்றும் அத்துடன் தனி கணினி மற்றும் ஸ்மார்ட் போனுக்கு தேவையான இணைய செயலிகளை உருவாக்குவது எப்படி என்றும் கற்றுக் கொள்கின்றனர். |
| நெட்வொர்க் நிர்வாகம் | இந்தப் பாடக்கோப்பின் மாணவர்கள் அவர்கள் திட்டமிடும் பயன்பாட்டிற்கு ஏற்ப வலையமைப்புகளைப் எப்படி உருவாக்க வேண்டும் என்று கற்றுக்கொள்கிறார்கள், கிளவுட் கம்ப்யூட்டிங் மற்றும் பாதுகாப்பு நிர்வாகத்தைப் படிக்கிறார்கள், மற்றும் பல்வேறு கிளையன்ட் / சர்வர் அமைப்புகளைப் எப்படி உருவாக்கி செயல்படுத்த வேண்டும் என்பதை அறிந்து கொள்கிறார்கள். |
| ஐ டி மாங்கா மற்றும் அனிம் | இந்த பாடத்திட்டம் மாணவர்களுக்கு அனிமேஷன் மற்றும் இதர காட்சி உள்ளடக்கங்களை திட்டமிட்டு தயாரிக்க டிஜிட்டல் கருவிகளை எப்படி பயன்படுத்துவது அத்துடன் அத்தகைய உள்ளடக்கத்தை எப்படி ஒருவருடைய வியாபாரத்தில் இணைப்பது என்பதை பற்றி கற்றுக் கொடுக்கிறது. |
| ஐ.டி சுற்றுலா | இந்தப் பாடத்திட்டத்தில், சுற்றுலாவில் ஐ.சி.டி பயன்பாடுகள், சுற்றுலா வணிகத்தில் ஐ.டி-யை நடைமுறைப்படுத்துதல், சுற்றுலா, தங்குமிடம் மற்றும் பிற தகவல்களின் மேலாண்மை மற்றும் சுற்றுலா உள்ளடக்கத்தை திட்டமிட்டு வடிவமைப்பது பற்றி மாணவர்கள் அறிந்து கொள்கிறார்கள். |
| செயற்கை நுண்ணறிவு | இந்தப் பாடக்கோப்பில் மாணவர்கள் பல்வேறு துறைகளில் நிஜ-உலகின் நிகழ்வு ஆய்வுகள் பற்றி எடுத்துக்காட்டி, செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பங்களின் அடிப்படைக் கோட்பாடு மற்றும் பயன்பாட்டைக் கற்றுக்கொள்கிறார்கள். பங்கேற்பாளர்கள் ஏ.ஐ தொடர்பான மென்பொருள்களில் தேர்ச்சி பெற்று பல்வேறு ஏ.ஐ துறைகளில் அதைப் எப்படி பயன்படுத்த வேண்டும் என்று கற்றுக்கொள்கிறார்கள். |

| தொழில்துறை பாடக்கோப்புகள் | இந்தப் பாடக்கோப்புகள் குறிப்பிட்ட துறைகளில் தொழில்முறையான அறிவு மற்றும் தொழில்நுட்பத்தின் நடைமுறை பயன்பாட்டில் கவனம் செலுத்துகின்றன.பாடக்கோப்புகள் ஒவ்வொரு தொழில்துறைக்கும் தனிச்சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொழில்துறையின் முன்னணிலும் செயல்படும் மாஸ்டர்யானவர்களால் விரிவுரைகள் வழங்கப்படுகின்றன. இவை மற்றும் பிற டக்கோப்புகள் படிக்கும் ஒவ்வொரு தொழில்துறையிலும் அதிநவீன போக்குகளைப் பிரதிபலிக்க தொடர்ந்து புதுப்பிக்கப்படுகின்றன. |
|---|---|
| ஃபின்டெக் | ஃபின் டெக் என்பது நிதித் துறையில் செயல்படும் ஐடி பயன்பாடு. இந்த பாடத்திட்டங்கள் வங்கிகளில் முக்கிய செயல்பாடுகளையும் மின்னணு பணத்தின் தற்போதைய நிலையையும் மெய்நிகர் நாணயங்களையும் மற்றும் இதர நிதி தொழில் நுட்பங்களையும் ஆரம்பிக்கின்றது. |
| விவசாயம் | மாணவர்கள் வேளாண்மையில் ஐடி எப்படி பயன்படுத்தப்படுகிறது என கற்றுக் கொள்கிறார்கள். இதில் உள்ளடங்கிய தலைப்புகள் சாகுபடி சூழலை கட்டுப்படுத்துவதில் ஐடி பயன்பாடு மற்றும் உற்பத்தி விநியோகத்தில் புரட்சி ஆகியவையாகும். |
| கடல் சார் துறை | இப்பாடத்திட்டம் கப்பல் கட்டுமானம் மற்றும் கடல் பயண போக்குவரத்தில் ஐடி பயன்பாட்டை கருத்தில் கொள்கிறது. மாணவர்கள் கப்பல் பயண கட்டுப்பாடுகள் மற்றும் கடல் மீன் வளர்ப்பு சுற்றுச்சூழல் கட்டுப்பாடுகளை பற்றி படிக்கிறார்கள். |
| சுகாதாரம் மற்றும் மருத்துவம் | மாணவர்கள் மருத்துவத் துறையில் ஐடி பயன்பாடுகளைப் பற்றி கற்றுக் கொள்கிறார்கள். மின்னணு மருத்துவ பதிவுகளின் தரவு மேலாண்மை மற்றும் ஏ ஐ மற்றும் தரவு காட்சிப்படுத்தலை பயன்படுத்தி நோய் கண்டறியும் ஆதரவு ஆகிய தலைப்புகள் இதில் அடங்கும். |
| உள்ளடக்க சந்தைப்படுத்துதல் | மாணவர்கள் மாங்கா, அனிமி, வீடியோ, இசை மற்றும் இதர ஊடகங்களிலுள்ள ஐடி பயன்பாட்டை கற்றுக்கொள்கிறார்கள். இதில் உற்பத்தி செயல் முறையில் டிஜிட்டலாக்கம், அறிவுசார் சொத்துரிமை மற்றும் மேலாண்மை மற்றும் ஊக்குவிப்பு உத்திகள் ஆகிய தலைப்புகள் கையாளப்படுகின்றன. |
| கல்வி | இப்பாடத்திட்டத்தில் மாணவர்கள் கல்வித் துறையில் ஐடி பயன்பாட்டை கற்றுக் கொள்கிறார்கள். இதில் மின்னணு கற்றலை வடிவமைத்து தயாரித்தல், பரந்த அளவிலான தகவல் தொடர்பு அமைப்புகள் ஆகியவை இதில் உள்ளடங்கும். |

| ஆதரவளிக்கும் விருப்பப் பாடக்கோப்புகள் | இந்தப் பாடத்திட்டத்தில் தொழில்துறை அல்லது கவனம் செலுத்த வேண்டிய துறையைப் பொருட்படுத்தாமல், முன்னணியிலுள்ள ஐ.சி.டி பயன்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப போக்குகளின் விடய ஆய்வுகள் உள்ளடங்கிய பாடக்கோப்புகளுடன் தகவல் தொடர்பு மற்றும் மேலாண்மை போன்று மாணவர்களுக்கு தேவைப்படும் அடிப்படை திறன்களைக் கற்பிக்கும் பாடக்கோப்புகள் உள்ளன. ஏனெனில் இது அடிப்படை முதல் பயன்பாட்டு வரை பரந்த அளவிலான கண்ணோட்டங்களிலிருந்து பாடக்கோப்புகளை ஒன்றாக கொண்டுவருகிறது, இந்தப் பாடத்திட்டம் மாணவர்கள் ஆழமாக கற்றுக்கொள்வதை மேம்படுத்துகிறது. |
|---|---|
| தகவல் தொடர்பு | மாணவர்கள் இந்தப் பாடத்தில் ஐடி மற்றும் வணிகத் துறையில் தர்க்கரீதியாகவும், தெளிவாகவும் தகவல் தொடர்பு கொள்வது எப்படி? உரையாடலில் திறன்களை வளர்த்துக் கொள்ளுதல் மற்றும் சுய வெளிப்பாடு ஆகியவற்றை கற்றுக் கொள்கிறார்கள். |
| மேலாண்மை | மாணவர்கள் ஒரு நிறுவனச் சூழலில் தேவையான நிர்வாகத்திற்கான பொதுவான அணுகுமுறைகளைப் புரிந்து கொண்டு அவற்றை பயன்படுத்துவதற்கான திறனைப் பெறுகிறார்கள். |
| உற்பத்தி | இந்த பாடத் திட்டங்களில் தயாரிப்புகளில் புதிய கண்டுபிடிப்புகளுக்கு தரம் மற்றும் சட்டக வேலைகளை மேம்படுத்தும் முயற்சிகள் பற்றி விரிவான நிகழாய்வுகள் ஆராயப்பட்டிருக்கிறது. |
| ஐடி துறையில் மேம்படுத்தப்பட்ட செயலிகள் மற்றும் தொழில் நுட்ப போக்குகள் | இந்தப் பாடத் திட்டத்தில் மாணவர்கள் ஐடி-ன் மேம்படுத்தப்பட்ட செயலிகளில் நிகழாய்வுகள் மற்றும் தொழில்நுட்ப போக்குகளின் விரிவான நிகழாய்வு பற்றி படிக்கின்றனர். |



## கவனம் செலுத்த வேண்டிய துறைகள்

### ஈ.ஆர்.பி (நிறுவன வளத் திட்டமிடல்)

நிறுவன வளத் திட்டமிடல் (ஈ.ஆர்.பி) என்பது ஐ.டி பயன்படுத்தி நிறுவனத்தின் வளங்கள் - மக்கள், பொருட்கள், இயந்திரங்கள், பணம் மற்றும் தகவல் ஆகியவற்றின் விரிவான நிர்வாகத்திற்கான ஒரு அணுகுமுறை. இந்த அணுகுமுறையை உணரக்கூடிய நிறுவன வளத் திட்டமிடல் அமைப்புகளைப் (ஈ.ஆர்.பி அமைப்புகள்) புரிந்து கொள்ளுதல் ஈ.ஆர்.பி அமைப்பை நடைமுறைப்படுத்துவதின் முதல் வழிமுறையாகும், இது நிறுவனத்தின் வணிக செயல்முறையை மேம்படுத்தலாம். இந்தச் செறிவில், வணிக ஒருங்கிணைப்பு, நிதிக் கணக்கியல் முறை, விற்பனை மற்றும் விநியோக முறை உட்பட, மாணவர்கள் SAP ஈ.ஆர்.பி கல்வி முறைகளைப் (SAP S/4 HANA) பயன்படுத்துவதன் மூலம் நடைமுறை ஆய்வில் ஈடுபடுகிறார்கள். மாணவர்கள் வரம்பிலான நிறுவனங்களில் பிரச்சனை பகுப்பாய்வு மற்றும் ஈ.ஆர்.பி நடைமுறைப்படுத்துதலின் நிகழ்வு ஆய்வுகளையும் மதிப்பாய்வு செய்கிறார்கள். கூடுதலாக, மாணவர்கள் இன்-மெமரி தரவுத்தளங்கள் மற்றும் IoT போன்ற சமீபத்திய நிறுவன உள்கட்டமைப்புடன் ஈ.ஆர்.பி-ஐ இணைப்பது குறித்து ஆராய்ச்சி நடத்துகிறார்கள்.

| பாடக்கோப்புகள் | | |
|---|---|---|
| தரவுத் தொழில் நுட்பத்தின் அடிப்படை | கணினி ஒருங்கிணைப்பு மற்றும் மின் வணிகம் | பொருள் மேலாண்மை அமைப்பு மேம்பாடு |
| தகவல் தொழில்நுட்பத்திற்கான புள்ளிவிவரங்கள் | சர்வதேச கணக்கியல் | மனித வள மேலாண்மை அமைப்பு மேம்பாடு |
| பயன்பாட்டு தகவலுக்கான அடிப்படை கணிதம் | நிதி கணக்கியல் அமைப்பு மேம்பாடு 1,2 | ஈ.ஆர்.பி வணிக பயன்பாட்டு மேம்பாடு |
| வலை நிரலாக்கம் 1,2 | விற்பனை மற்றும் விநியோக முறை மேம்பாடு 1,2 | ஈ.ஆர்.பி கலந்தாய்வில் மேம்பட்ட தலைப்புகள் |
| நிறுவனங்களுக்கான தகவல் அமைப்புகள் | உற்பத்தி கட்டுப்பாட்டு அமைப்பு மேம்பாடு | பொருள் சார்ந்த நிரலாக்கம் |

### வணிக தரவு பகுப்பாய்வு

வணிக தரவு பகுப்பாய்வு என்பது சமீபத்திய ஆண்டுகளில் பல தொழில்துறைகளின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கும் ஒரு வணிக நுட்பமாகும். வணிக தரவு பகுப்பாய்வின் முக்கியமான நோக்கம் என்னவென்றால் நிறுவனங்களுக்கு அவர்களின் வணிகத்தை வளரச்செய்ய அவர்களுக்கு தேவையான முடிவுகளைத் திறம்பட எடுக்க உதவுதல்.
நிறுவனங்கள் பரந்த அளவிலான தகவல்களைச் சேர்ப்பதால், தகவல் மேலாண்மை மிகவும் சிக்கலாகிறது, பரந்த அளவிலான கடினமான பிரச்சனைகளை நிறுவனங்கள் எதிர்கொள்கிறது. இந்தப் பிரச்சனைகளுக்கான தீர்வுகளைக் கண்டறியும் வழிகளைப் பற்றிய புரிதலை மாணவர்களிடையே வளர்ப்பதே இந்தச் செறிவின் நோக்கம். மாணவர்கள் தகவல்களைப் பகுப்பாய்வு செய்து செயல்முறைப்படுத்தி நிறுவனப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண அந்தப் பகுப்பாய்வுகளைப் பயன்படுத்த கற்றுக்கொள்கிறார்கள். சந்தைப்படுத்தல் மற்றும் புள்ளிவிவர பகுப்பாய்வு முறைகளைப் புரிந்துகொள்வதன் அடிப்படையில், முக்கியத்துவம் வாய்ந்த வாடிக்கையாளர் தொடர்பு மேலாண்மை (சி.ஆர்.எம்); மற்றும் தளவாட உள்கட்டமைப்பு மற்றும் கொள்முதல் சம்பந்தப்பட்ட வணிக மாதிரிகளைக் கையாள பயன்படுத்தப்படும் விநியோக தொடர் மேலாண்மை (எஸ்.சி.எம்) போன்ற முக்கியமான கருத்துக்களையும் படிக்கிறார்கள்.

| பாடக்கோப்புகள் | | |
|---|---|---|
| தரவுத் தொழில் நுட்பத்தின் அடிப்படை | AI 1, 2-க்கான சாப்ட்வேர் அப்ளிகேஷன்ஸ் | டேட்டா மைனிங் கோட்பாடுகள் |
| தகவல் தொழில்நுட்பத்திற்கான புள்ளிவிவரங்கள் | கம்ப்யூட்டர் புரோகிராமிங் (பைதான்) | இயந்திர கற்றல் மற்றும் அதன் பயன்பாடு |
| பயன்பாட்டு தகவலுக்கான அடிப்படை கணிதம் | வலை வணிகம் அறிமுகம் | தரவுத்தள தொழில்நுட்பத்தில் மேம்பட்ட தலைப்புகள் |
| கணினி அமைப்பு கோட்பாடு | தரவு அறிவியல் | சுற்றுச்சூழல் தகவல் அமைப்பு |
| வலை நிரலாக்கம் 1,2 | பண்பு சார் தரவு: பகுப்பாய்வு மற்றும் மாற்றம் | வடிவமைப்பு சிந்தனை |
| AI-க்கான கணிதம் | கண்டுபிடிப்பு தரவு பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல் | இணைய வர்த்தக உத்திகள் மற்றும் சந்தைப்படுத்தல் |

### உலகளாவிய தொழில்முனைவு

உலகளாவிய தொழில்முனைவோர் தங்களுக்கு சொந்தமான மற்றும் மற்றவர்களின் துணிகர வணிகங்களைத் தொடங்கி, மேம்படுத்தி நிர்வகிக்கிறார்கள் மற்றும் பிற தொழில்துறைகளில் வணிகங்களின் வளர்ச்சியை ஆதரிக்க அவர்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்துகிறார்கள். இந்தச் செறிவின் நோக்கம் என்னவென்றால் உலகளாவிய வணிகத் துறையில் ஒரு நிறுவனத்தைத் தொடங்க தேவையான அறிவு மற்றும் திறன்களை வழங்கும் போது மாணவர்களிடையே தொழில் முனைவோர் மனநிலையையும் தலைமைத்துவத்தையும் வளர்ப்பதே. மின்-வணிகம் மற்றும் இணையை அடிப்படையிலான வணிகம் உட்பட, உலகளாவிய வணிகத்தில் கவனம் செலுத்துகையில், மாணவர்கள் நிதி, சந்தைப்படுத்தல் மற்றும் நிர்வாகத்தின் அடிப்படைக் கருத்துகளைப் படிக்கிறார்கள்.

| பாடக்கோப்புகள் | | |
|---|---|---|
| தகவல் தொழில்நுட்பத்திற்கான புள்ளிவிவரங்கள் | அறிவுசார் சொத்துரிமை சட்டம் | IT வர்த்தக பேச்சுவார்த்தை |
| பயன்பாட்டு தகவலுக்கான அடிப்படை கணிதம் | வணிக நிர்வாகத்தில் மேம்பட்ட தலைப்புகள் | விளையாட்டு கோட்பாடு மற்றும் பேச்சுவார்த்தை |
| வலை நிரலாக்கம் 1 | வணிக மேலாண்மைக்கான நடைமுறை ஆய்வுகள் | வடிவமைப்பு சிந்தனை |
| நிலையான வளர்ச்சிக்காக அர்த்தமுள்ள முன்னிலை | ஐ.டி துறையில் தற்போதைய சிக்கல்கள் | நடைமுறை கிளவுட் கம்ப்யூட்டிங் |
| நிறுவன நடத்தை | பிராண்ட் வடிவமைப்பு மற்றும் வணிக மேலாண்மை | தொழில்முனைவோருக்கான புதிய சட்டங்கள் |
| தகவல் நெறியில் மேம்பட்ட தலைப்புகள் | இணைய வர்த்தக உத்திகள் மற்றும் சந்தைப்படுத்தல் | திட்ட மேலாண்மை |
| வலை வணிகம் அறிமுகம் | மின் வணிக முறைகள் | உலகளாவிய மனித வள மேம்பாடு |
| வணிக பொருளியல் 1,2 | உலகளாவிய தொழில்முனைவு மற்றும் வணிக மாதிரிகள் | |







## வலை அமைப்புகள் மேம்பாடு

*வலை அமைப்புகளை உருவாக்குவதில் விதியாக நிறுவனத்தின் உள் பயன்பாட்டிற்கான உள்ளடங்களைக் கொண்டிருக்கும் கார்ப்பரேட் இன்ட்ராநெட்களில் வலைத்தளங்களை உருவாக்குதல், மற்றும் இணையத்தில் வெளிப்புற பயன்பாட்டிற்காக வெளியிடப்படும் வலைத்தளங்களை உருவாக்குதல் இரண்டும் அடங்கும். பொதுவாக, வலை அமைப்பு உருவாக்குபவர்கள் HTML5 போன்ற நிரலாக்க மொழிகள் மற்றும் மார்க்அப் மொழிகளைப் பயன்படுத்தி வலைத்தளங்களைக் குறியிடுகிறார்கள். எனினும், அவர்களின் பொறுப்புகளில் உள்ளடக்க மேலாண்மை அமைப்புகளின் (சி.எம்.எஸ்) பயன்பாடும் அடங்கும். இந்தச் செறிவில், மாணவர்கள் வலை அமைப்புகளைப் எப்படி நிரலாக்கம் செய்து குறியிட வேண்டும் என்பதை கற்றுக்கொண்டு வலையமைப்புகளின் அடிப்படைகளைப் படிக்கிறார்கள்.*

**பாடக்கோப்புகள்**

| | | |
|---|---|---|
| தரவுத் தொழில் நுட்பத்தின் அடிப்படை | வலை வணிகம் அறிமுகம் | வலை நிரலாக்கம் 3 |
| தகவல் தொழில்நுட்பத்திற்கான புள்ளிவிவரங்கள் | தரவுத்தள தொழில்நுட்பத்தில் மேம்பட்ட தலைப்புகள் | பொருள் சார்ந்த நிரலாக்கம் |
| கம்ப்யூட்டர் புரோகிராமிங் (பைதான்) | கணினி அமைப்பு கோட்பாடு | பொருள் சார்ந்த அமைப்புகள் வடிவமைப்பு |
| பயன்பாட்டு தகவலுக்கான அடிப்படை கணிதம் | நெட்வொர்க்கிங் அடிப்படைகள் | மென்பொருள் பொறியியல் |
| வலை நிரலாக்கம் 1,2 | வலை தொழில்நுட்ப அறிமுகம் | வடிவமைப்பு சிந்தனை |
| AI 1-க்கான சாப்ட்வேர் அப்ளிகேஷன்ஸ் | வலை சேவைகள் மேம்பாடு | மொபைல் பயன்பாட்டு மேம்பாடு |

## நெட்வொர்க் நிர்வாகம்

*நெட்வொர்க் சேவைகள் இன்றைய தகவல் அமைப்புகளின் முக்கியமான பகுதியாகும். நெட்வொர்க் நிர்வாகிகள் நெட்வொர்க் மற்றும் சர்வர் அமைப்புகளை உருவாக்கி, தடைகளைச் சரிசெய்து இந்த நெட்வொர்க் மற்றும் அமைப்புகளை நிர்வகித்து ஆதரிக்கிறார்கள். நெட்வொர்க்கில் பிரச்சனை ஏற்படும் போது, நெட்வொர்க் நிர்வாகி பிரச்சனைக்கு தீர்வு கண்டு நெட்வொர்க்கில் தகவல்களைப் பராமரிக்கிறார். இந்தச் செறிவில், மாணவர்கள் நெட்வொர்க் அமைப்புகளின் செயல்பாடு மற்றும் தகவல் பாதுகாப்பு பற்றி அறிந்து கொள்கிறார்கள்.*

**பாடக்கோப்புகள்**

| | | |
|---|---|---|
| தரவுத் தொழில் நுட்பத்தின் அடிப்படை | AI 1-க்கான சாப்ட்வேர் அப்ளிகேஷன்ஸ் | தகவல் பாதுகாப்பு |
| தகவல் தொழில்நுட்பத்திற்கான புள்ளிவிவரங்கள் | கணினி நிர்வாகம் | ரூட்டிங் மற்றும் சுவிட்சிங் |
| பயன்பாட்டு தகவலுக்கான அடிப்படை கணிதம் | தொழில்முனைவோருக்கான புதிய சட்டங்கள் | நெட்வொர்க்கிங்கில் மேம்பட்ட ஆய்வுகள் |
| வலை நிரலாக்கம் 1 | மேம்பட்ட ரூட்டிங் மற்றும் சுவிட்சிங் | வலை தொழில்நுட்ப அறிமுகம் |
| கணினி அமைப்பு கோட்பாடு | கிளவுட் நெட்வொர்க்கிங் மற்றும் மெய்நிகராக்கம் | வலை சேவைகள் மேம்பாடு |
| கம்ப்யூட்டர் புரோகிராமிங் (பைதான்) | IoT மற்றும் வயர்லெஸ் நெட்வொர்க்குகள் | சைபர் பாதுகாப்பு |
| நெட்வொர்க்கிங் அடிப்படைகள் | IoT பயன்பாட்டு அமைப்புகள் | தகவல் நெறியில் மேம்பட்ட தலைப்புகள் |

## ஐ டி மாங்கா மற்றும் அனிம்

*மங்கா மற்றும் அனிம் தலைமையில் வழிநடத்தப்படும் ஜப்பானின் உள்ளடக்க-படைப்பாற்றல் தொழில்துறைகள் உலகளாவிய கவனத்தை ஈர்க்கிறது. கே.சி.ஜி.ஐ-ல், உள்ளடக்க-படைப்பாற்றல் தொழில்துறைகளில் பழைய வணிக மாதிரிகள் பற்றிய ஆராய்ச்சியின் அடிப்படையில் புதிய வணிக மாதிரிகளை உருவாக்குதல் மற்றும் அனிமேஷன் குறித்து திட்டமிட்டு தயாரிப்பதை பயிற்சி செய்தல் போன்ற படைப்பாற்றல் தொழில்துறைகளில் எதிர்கொள்ளும் பரந்த அளவிலான சூழ்நிலைகளை மாணவர்கள் அனுபவிக்கிறார்கள். இந்தப் பாடத்திட்டம் உள்ளடக்கம் உருவாக்குவதில் எதிர்கொள்ளும் தனிப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவதற்கான பயிற்சியை மாணவர்களுக்கு வழங்குகிறது. உள்ளடக்கம் மற்றும் படைப்பாற்றல் தொழில்துறைகளில் ஐ.சி.டி-இன் சக்தி இன்றியமையாதது, எனவே மாணவர்கள் டிஜிட்டல் கருவிகளில் தேர்ச்சி பெற கற்றுக்கொள்கிறார்கள். பாடத்திட்டம் பல விதமான சூழ்நிலைகளில் பயன்படுத்த தீர்வுகளை வகுக்கும் திறன்களையும் உருவாக்குகிறது.*

**பாடக்கோப்புகள்**

| | | |
|---|---|---|
| பயன்பாட்டு தகவலுக்கான அடிப்படை கணிதம் | டிஜிட்டல் ஆடியோ தயாரிப்பு | விஷுவல் ஸ்டோரி டெல்லிங் மற்றும் கம்யூனிகேஷன் |
| கணினி அமைப்பு கோட்பாடு | மேம்பட்ட சிறப்பு காட்சி விளைவுகள் | அனிமேஷன், திட்டமிடல், உற்பத்தி மற்றும் ஊக்குவிப்பில் சிறப்புத் தலைப்புகள் |
| அனிமேஷன் வரைதல் அடிப்படைகள் ஏ, பி | உள்ளடக்கத் தொழில்துறையில் சிறப்பு தலைப்புகள் | கணினி வரைவியல் |
| வலை நிரலாக்கம் 1 | டிஜிட்டல் அனிமேஷன் உருவாக்கம் | நடைமுறையான அனிமேஷன் உற்பத்தி |
| சிறப்பு விஷுவல் எஃபெக்ட்ஸ் | கதைக்காட்சி எழுதுதல் மற்றும் ஸ்டோரிபோர்டிங் | IT இல் பொழுதுபோக்கு |
| காட்சி பட செயலாக்கம் | ரிச் மீடியா உள்ளடக்க மேம்பாடு | பிராண்ட் வடிவமைப்பு மற்றும் வணிக மேலாண்மை |

## ஐ.டி சுற்றுலா

*ஜப்பானிய அரசாங்கத்தின் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் சமீபத்திய ஆண்டுகளில் ஆழமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. ஜப்பானுக்கு வரும் வெளிநாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது, 2019 ஆம் ஆண்டில் எப்போதும் இல்லாத அளவிற்கு 31.88 மில்லியன் பார்வையாளர்கள் வந்துள்ளார்கள் (ஆதாரம்: ஜப்பான் தேசிய சுற்றுலா அமைப்பின் ஆய்வு). கே.சி.ஜி.ஐ-க்கு வளாகம் இருக்கும் ஒவ்வொரு நகரங்களும் - கியோட்டோ, சப்போரோ மற்றும் டோக்கியோ - சுற்றுலா பயணிகளிடையே மிகவும் பிரபலமாக உள்ளன, சுற்றுலா சேவைகளுடன் தொடர்புடைய தேவைகளையும் பிரச்சனைகளையும் தொடர்ந்து நினைவுபடுத்தும் சூழ்நிலையை உருவாக்குகிறது. குறிப்பாக மாணவர்களைப் பரிமாற்றிக் கொள்ள உதவும் இந்தச் செறிவு துறை, ஐ.டி பயன்படுத்தும் புதிய சுற்றுலா சேவைகள் மற்றும் வணிக மாதிரிகளை ஆய்வு செய்ய இந்த நன்மைகளைப் பயன்படுத்துகிறது. கே.சி.ஜி.ஐ பல மொழிகள் மற்றும் ஊடகம் மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் ஆகியவற்றில் சுற்றுலா தகவல்களை வழங்குதல், வாடிக்கையாளர் நடவடிக்கைகளை ஆய்வு செய்து முன்கணித்தல் போன்ற நடவடிக்கைகளின் வழியாக நிஜ-உலக பிரச்சனைகளுக்கு தீர்வு காண கற்றுக்கொடுக்கிறது.*

**பாடக்கோப்புகள்**

| | | |
|---|---|---|
| தகவல் தொழில்நுட்பத்திற்கான புள்ளிவிவரங்கள் | அனிமேஷன், திட்டமிடல், உற்பத்தி மற்றும் ஊக்குவிப்பில் சிறப்புத் தலைப்புகள் | ஜப்பானிய சமூகத்தைப் புரிந்து கொள்தல் |
| கம்ப்யூட்டர் புரோகிராமிங் (பைதான்) | தரவு அறிவியல் | சுற்றுலாவின் பயண இலக்கிற்கான மேலாண்மை |
| பயன்பாட்டு தகவலுக்கான அடிப்படை கணிதம் | வணிக பொருளியல் 1 | சுற்றுலாவை பற்றிய தகவலின் பகுப்பாய்வு |
| வலை நிரலாக்கம் 1,2 | பிராண்ட் வடிவமைப்பு மற்றும் வணிக மேலாண்மை | ஐ.டி சுற்றுலாவில் மேம்பட்ட தலைப்புகள் |
| பொருள் சார்ந்த அமைப்புகள் வடிவமைப்பு | ஊடக தொடர்பாடல் | சுற்றுலா வடிவமைப்பு |
| ரிச் மீடியா உள்ளடக்க மேம்பாடு | திட்ட மேலாண்மை | ஐ.டி சுற்றுலா பயிற்சிப்பணி |
| விஷுவல் ஸ்டோரி டெல்லிங் மற்றும் கம்யூனிகேஷன் | ஐ.டி சுற்றுலாவின் அடிப்படைகள் | உலகளாவிய மனித வள மேம்பாடு |
| சிறப்பு விஷுவல் எஃபெக்ட்ஸ் | சுற்றுலா வணிகத்தின் அடிப்படைகள் | மொபைல் பயன்பாட்டு மேம்பாடு |



## செயற்கை நுண்ணறிவு

*21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து, ஆழமாக கற்றுக்கொள்ளும் கோட்பாடு மிகவும் விரைவாக முன்னேறியதால், சமூகத்தை மாற்றுவதற்கான விதிக்கப்பட்ட அடிப்படை தொழில்நுட்பமாக ஏ.ஐ தோன்றியுள்ளது, இணையத்தைப் பயன்படுத்தி அதிக அளவிலான தகவல்களைப் பெறுதல் எளிதானது மற்றும் நுண்செயலிகளும் பிற கணினி அமைப்புகளும் வேகம் மற்றும் திறனில் மிகவும் மேம்பட்டுள்ளன. தற்போது இயந்திர மொழிபெயர்ப்பு, சுயமாக ஓட்டும் வாகனங்கள், மருத்துவ தகவல் செயலாக்கம், நர்சிங் பராமரிப்பு சேவைகள் மற்றும் மின்-விளையாட்டுகளுக்கு ரோபோக்கள் ஆகியவற்றுடன் பெருநிறுவன உத்திகளின் திட்ட அறிக்கை, விவசாய மேலாண்மை மற்றும் பிற வணிகங்களுக்கான புதிய அணுகுமுறைகளுடன் ஏ.ஐ-க்கான பயன்பாடுகளின் நோக்கம் கண்மூடித்தனமாக விரிவடைகிறது. ஏ.ஐ-ல் கே.சி.ஜி.ஐ-இன் அர்ப்பணிக்கப்பட்ட ஆய்வுகள் துறையில், மாணவர்கள் ஏ.ஐ கோட்பாட்டில் ஒரு அடிப்படை அடித்தளத்தைப் பெற்று அது பயன்படுத்தப்படும் துறைகளின் நிஜ உலக எடுத்துக்காட்டுகள் வழியாக கற்றுக்கொள்வதன் மூலம் தொடங்குகிறார்கள். பாடத்திட்டம் ஏ.ஐ-ஐப் பயன்படுத்தும் நிபுணர்களை உருவாக்கும் நோக்கத்துடன், எண்ணற்ற தொடர்புடைய மென்பொருள் நிரல்களை ஆய்வு செய்கிறது.*

**பாடக்கோப்புகள்**

| | | |
|---|---|---|
| தகவல் தொழில்நுட்பத்திற்கான புள்ளிவிவரங்கள் | இயந்திர கற்றல் மற்றும் அதன் பயன்பாடு | மருத்துவ எல்லைப்புற தகவலியல் |
| AI அறிமுகப்படுத்துதல் | கூட்டு உகப்பாக்கம் | ரோபாட்டிக்ஸ் மற்றும் AI |
| அல்காரிதம் அறிமுகப்படுத்துதல் | AI 1, 2-க்கான சாப்ட்வேர் அப்ளிகேஷன்ஸ் | தரவு அறிவியல் |
| கம்ப்யூட்டர் புரோகிராமிங் (பைதான்) | டேட்டா மைனிங் | சமூகம் மற்றும் AI 1, 2 |
| தரவுத் தொழில் நுட்பத்தின் அடிப்படை | தரவுத்தள தொழில்நுட்பத்தில் மேம்பட்ட தலைப்புகள் | கம்ப்யூட்டர் புரோகிராமிங் (ஜாவா) |
| கணினி அமைப்பு கோட்பாடு | விளையாட்டு மற்றும் AI | AI-க்கான கணிதம் |
| பயன்பாட்டு தகவலுக்கான அடிப்படை கணிதம் | இயற்கை மொழி புரிந்து கொள்ளுதல்/குரல் புரிந்து கொள்ளுதல் | |





## தொழில்துறை பாடக்கோப்புகள்

### ஃபின்டெக்

| |
|---|
| பணம் மற்றும் வங்கியியல் |
| ஃபின்டெக்-இன் அடிப்படைகள் |
| ஃபிண்டெக் சிஸ்டம்ஸ் வடிவமைப்பு |

### விவசாயம்

| |
|---|
| அடுத்த தலைமுறை வேளாண்மை தகவலியல் |
| வேளாண்மை பொருளாதாரம் |
| வேளாண்மை தகவல் அமைப்புகள் வடிவமைப்பு |

### கடல் சார் துறை

| |
|---|
| கடல் தொழில்துறையின் அடிப்படைகள் |
| கடல் தகவல் அமைப்புகள் வடிவமைப்பு |

### சுகாதாரம் மற்றும் மருத்துவம்

| |
|---|
| மருத்துவ தகவல் மற்றும் சட்டம் |
| மருத்துவ எல்லைப்புற தகவலியல் |
| மருத்துவ தகவல் அமைப்புகள் வடிவமைப்பு |

### உள்ளடக்க சந்தைப்படுத்துதல்

| |
|---|
| உள்ளடக்கத் தொழில்துறையில் சிறப்பு தலைப்புகள் |
| IT இல் இசை |
| IT இல் பொழுதுபோக்கு |
| உள்ளடக்க ஊக்குவிப்பு உத்திகள் |

இளங்கலை அறிவியல், க்விங்டாவோ பல்கலைக்கழகம். முதுகலைப் பட்டம் நிறைவு, குய்சோ பல்கலைக்கழகம் (கணிதம் (முக்கியப்பாடமாக)).   முனைவர் பட்டம் நிறைவு, தகவலியல் பட்டதாரிப் பள்ளி, கியோட்டோ பல்கலைக்கழகம்.   தகவலியல் பேராசிரியர்.   தகவலியலில் முன்னாள் வெளிநாட்டு-தேசிய ஒருங்கிணைப்பு ஆய்வாளர், தகவலியல் பட்டதாரிப் பள்ளி, கியோட்டோ பல்கலைக்கழகம்
முன்னாள் சிறப்பு ஆராய்ச்சியாளர், அறிவியல் மேம்பாட்டுக்கான ஜப்பானிய சங்கம்



## Hironori Sakamoto இணை பேராசிரியர்

டோக்கியோ இன்ஸ்டிடியூட் ஆஃ டெக்னாலஜியிலிருந்து பொறியியல் இளங்கலைப் பட்டம்,
டோக்கியோ கணிதவியல் அறிவியல்கள் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி கல்லூரியில் இருந்து கணிதவியல் அறிவியலில் முதுகலைப் பட்டம்
நிஹோன் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்தின் பணியாளர்



## Ryoko Takahashi இணை பேராசிரியர்

டோஷிஷா பல்கலைக்கழகத்தில் கலையில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டம்
கியோட்டோ கம்ப்யூட்டர் ககுயின் பட்டதாரி
கியோட்டோ காலேஜ் ஆப் கிராஜுவேட் ஸ்டடீஸ் ஃபார் இன்ஃபர்மேடிக்ஸ் நிறுவனத்திலிருந்து தகவல் தொழிநுட்பத்தில் முதுகலை அறிவியல் பட்டம்



## Akihiko Takeda இணை பேராசிரியர்

நிஹான் பல்கலைக்கழகத்தில் வேளாண்மைத் துறையில் இருந்து கால்நடை அறிவியலில் முதுகலை பட்டம்
ஹிட்டாச்சி கார்ப்பரேஷன் குழுவின் கால்நடை மருத்துவர் அமைப்பு பொறியாளர்
மின்-ஜப்பான் (மின்-அரசு) திட்ட உறுப்பினர்
கியோட்டோ கம்ப்யூட்டர் ககுயினில் உள்ள தகவல் அமைப்புப் பிரிவின் முதன்மை தலைவர்
இண்டலக்ட்-சப்ளை கோ.லிட். நிறுவன பிரதிநிதி இயக்குநர்



## Takao Nakaguchi இணை பேராசிரியர்

கியோட்டோ கம்ப்யூட்டர் ககுயினில் இருந்து பட்டதாரி. கியோட்டோ காலேஜ் ஆப் கிராஜுவேட் ஸ்டடீஸ் ஃபார் இன்ஃபர்மேடிக்ஸின் பயன்பாட்டு தகவலியலில் பட்டதாரிப் படிப்பு நிறைவுடன், தகவலியலில் (சிறப்பாளர்) முதுகலைப் பட்டத்துடன் முதலிடத் தேர்ச்சிப் பட்டதாரி.   கியோட்டோ பல்கலைக்கழகத்தின் தகவலியல் பட்டதாரிப் பள்ளியில் முனைவர் படிப்பு நிறைவுடன், தகவலியலில் முனைவர் பட்டதாரி.   முன்னாள் இயக்குநர் மற்றும் மேலாளர், கணினி மேம்பாட்டு துறை, ஆட்மேக்ஸ்; முன்னாள் கௌரவ ஆராய்ச்சித் தொழில்னுட்பாளர், மனித தகவல் திட்டம் (HIP), சர்வதேச மேம்பட்ட தொலைத்தொடர்பு ஆராய்ச்சி நிறுவனம் (ATRI); முன்னாள் தலைமை தொழில்நுட்ப அதிகாரி, அன்ட்ரண்ட் கார்ப்பரேஷன்; முன்னாள் தலைமை தொழில்நுட்ப அதிகாரி, @Izumi; முன்னாள் தலைமை ஆய்வாளர், NTT மேம்பட்ட தொழில்நுட்ப நிறுவனம்; முன்னாள் சிறப்பு ஆராய்ச்சியாளர், தகவலியல் பட்டதாரிப் பள்ளி, கியோட்டோ பல்கலைக்கழகம்   உறுப்பினர்: எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம், தகவல் மற்றும் தொடர்பு பொறியாளர்கள், மென்பொருள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான ஜப்பானிய சங்கம், மற்றும் ஜப்பான் தகவல் நடைமுறைச் சங்கம்



## Benjamin Nouvel இணை பேராசிரியர்

துலூஸ் பல்கலைக்கழகத்திலிருந்து கலையில் இளங்கலை பட்டம் துலூஸ் பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம், பாரிஸ் பல்கலைக்கழகத்தில் கலை வரலாற்றில் முதுகலை பட்டம் (தி சோர்போன்)
முன்னாள் ஜப்பான்-பிரான்ஸ் கூட்டு திட்ட ஒருங்கிணைப்பாளர், மல்டிமீடியா துறை, தி லூவ்ரே
முன்னாள் உள்ளடக்க திட்டமிடல் மேலாளர், ஜப்பான் எக்ஸ்போ



## Yuko Masuda இணை பேராசிரியர்

சமூகப் பணி பள்ளியிலிருந்து சமூகப் பணியில் முதுகலைப் பட்டம், கொலம்பியாபல்கலைக்கழகம் (நியூயார்க், அமெரிக்கா) மனநலத்திற்கான முதுகலை பட்டதாரி மையத்திலிருந்து உளப் பகுப்பாய்வு மற்றும் பகுப்பாய்வு உளவியல் மருத்துவத்தில் நான்கு ஆண்டு முதுகலை பட்டம் ஃபாகல்டி ஆஃப் ஃபாரின் ஸ்டடீஸிலிருந்து ஸ்பானிஷ் மொழி படிப்பில் கலையில் இளங்கலை பட்டம், சோபியா பல்கலைக்கழகம் (வெளிநாட்டு படிப்பு)



## Izu Matsuo இணை பேராசிரியர்

கியோட்டோ பல்கலைக்கழகத்தில் இருந்து இளங்கலைச் சட்டம், தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழக பட்டதாரி திட்டங்களிலிருந்து எம்.பீ.ஏ முன்னாள் மூத்த தயாரிப்பு சந்தைப்படுத்தல் மேலாளர், சோனி எலெக்ட்ரானிக்ஸ் இன்க். (அமெரிக்கா), முன்னாள் தயாரிப்பு சந்தைப்படுத்தல் மேலாளர், கார்ல் ஜெய்ஸ் விஷன் இன்க். (அமெரிக்கா), முன்னாள் மூத்த தயாரிப்பு மேலாளர், கியோசெரா இன்டர்நேஷனல், இன்க். (அமெரிக்கா), முன்னாள் மேற்கு ஜப்பான் பகுதி மேலாளர், எக்ஸ்பீடியா ஹோல்டிங்ஸ் கே.கே



## Julia Yonetani இணை பேராசிரியர்

சிட்னி பல்கலைக்கழகத்திலிருந்து (ஆஸ்திரேலியா) இளங்கலை கலை, டோக்கியோ பல்கலைக்கழக பட்டதாரி கலை மற்றும் அறிவியல் பள்ளியில் இருந்து கலை மற்றும் அறிவியல் முதுகலை (முக்கிய பாடமாக சர்வதேச சமூக அறிவியல்), ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் ஏ.என்.யூ காலேஜ் ஆஃப் ஆசியா மற்றும் பசிபிக்கில் வரலாற்றில் முனைவர் பட்டம் (முக்கிய பாடமாக வரலாறு)
தற்போது ஒரு சமகால கலைஞராக பணிபுரிகிறார், கியோட்டோ மாகாணம், நந்தனில் விவசாயியாக வேலை செய்யும் போது உலகளாவிய கண்காட்சிகளில் அழகியல் தாக்கத்தின் படைப்புகளை வெளிப்படுத்துகிறார்



மின்-கற்றல் ஸ்டுடியோ



பயிற்சி ஆய்வகம்



லவுஞ்ச்



நூலகம்



# வளாகங்கள்

**கியோட்டோ முதன்மை பள்ளி**

*கியோட்டோ முதன்மை பள்ளியில் இரண்டு வளாகங்கள் உள்ளன. இந்த வளாகங்களில் பல்வேறுவகைப்பட்ட மாணவர்கள் பயன்பாட்டு ஐ.டி துறையில் மிக உயர்ந்த கல்வி பட்டம், தகவல் தொழில்நுட்பத்தில் முதுகலைப் பட்டம் பெறுவதில் பரந்த ஆளவிலான ஆய்வு மற்றும் ஆராய்ச்சிகளை நடத்துகிறார்கள். இரண்டு வளாகங்களுக்கிடையே பயணம் செய்ய இலவச ஷட்டில் பஸ் உள்ளது.*

## ஹியாகுமன்பென் வளாகம், சாகியோ-கு, கியோட்டோ

பள்ளி அதனுடைய கதவுகளைத் திறந்த போது, 2004 ஆம் ஆண்டில் ஹியாகுமன்பென் வளாகம் கல்வி மற்றும் ஆராய்ச்சி வளாகமாக உருவானது. இந்தக் கட்டிடத்தில் பெரும்பாலான வகுப்புகள் நடைபெறுவதால், பொதுவாக அதிக எண்ணிக்கையிலான மாணவர்களும் ஆசிரியர்களும் இங்கு கூடுகிறார்கள். கியோட்டோவின் மையத்தில் கியோட்டோ பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள ஒரு மாணவர் பகுதியில் இந்த வளாகம் அமைந்திருப்பதால், இது கற்றல் மற்றும் சுதந்திரமான சிந்தனைக்கான தீவிரமான ஆர்வத்தின் சூழ்நிலையுடன் நிறைந்துள்ளது. ஒரு காலத்தில் வளாகம் கே.சி.ஜி-இன் பெரிய கணினி மையத்தின் இடமாக இருந்தது, இங்கு நிறுவப்பட்ட யுனிவாக் வான்கார்ட் கணினியைப் பயன்படுத்தி மாணவர்கள் கணினி பயிற்சி பெற்றார்கள்.






## கியோட்டோ எக்கிமே செயற்கைக்கோள், மினாமி-கு, கியோட்டோ

கியோட்டோ எக்கிமே செயற்கைக்கோள் 2005 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் முடிக்கப்பட்டது. ஏராளமான பயணிகள் பயணிக்கும் ஒரு பயண மையமாக, கியோட்டோ ஸ்டேஷனுக்கு அருகில் இருக்கும் இந்த வளாகம் அபூர்வமாக வசதியாக அமைந்துள்ளது. அதனுடைய பிரகாசம், திறந்த வெளிப்புறத்தால் கவனத்தை கவர்கிற, கியோட்டோ எக்கிமே செயற்கைக்கோள் ஒரு அதிநவீன மின் கற்றல் ஸ்டுடியோவுடன் அமைக்கப்பட்டுள்ளது, இந்த இடத்திலிருந்து பல விரிவுரைகளை சர்வதேச அளவில் வழங்க உதவுகிறது. கே.சி.ஜி-இன் அருகிலுள்ள கியோட்டோ எக்கிமே வளாகத்துடன் சேர்ந்து, கியோட்டோ எக்கிமே செயற்கைக்கோள் முன்னணி ஐ.டி கல்வியின் முக்கிய மையமாக செயல்படுகிறது.



**செயற்கைக்கோள் வளாகங்கள்**

*முக்கிய வளாகங்களைப் போன்று, செயற்கைக்கோள் வளாகங்கள் ஏற்கனவே வேலை செய்யும் உலகில் இருப்பவர்கள் உட்பட, பல்வேறுவகைப்பட்ட மாணவர்களை ஈர்க்கின்றன. செயற்கைக்கோள் வளாகங்கள் கியோட்டோ முதன்மை வளாகத்துடன் டெஸ்பேட்ச் வகுப்புகளால் (முதன்மை வளாகத்திலிருந்து வருகை தரும் பயிற்றுவிப்பாளர்கள் கற்பிக்கும் வகுப்புகள்) மட்டுமல்லாமல் நிகழ் நேரத்தில் முதன்மை வளாகத்துடன் இணைக்கப்பட்டுள்ள சமீபத்திய மின்-கற்றல் அமைப்புகளாலும் இணைக்கப்பட்டுள்ளன. முன்பே பதிவுசெய்யப்பட்ட வீடியோவைப் பயன்படுத்தி கற்பதும் வழங்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு செயற்கைக்கோளின் அர்ப்பணிக்கப்பட்ட பயிற்றுவிப்பாளர்களும் ஒவ்வொரு மாணவருக்கும் அவருடைய அல்லது அவளுடைய இலக்குகளை அடைய உதவ முக்கியமான படிப்பு பாதுகாப்பை வழங்குகிறார்கள்.*

## சப்போரோ செயற்கைக்கோள் dGIC இன்க் உள்ளே அமைந்துள்ளது

ஏப்ரல் 2012-ல் ஜப்பானின் ஹொக்கைடோவின் பரந்த வடக்கு மாகாணத்தின் மையத்தில், சப்போரோவில் சப்போரோ செயற்கைக்கோள் வளாகம் திறக்கப்பட்டது. இந்த வளாகம் தான் கியோட்டோவுக்கு வெளியே அமைந்துள்ள முதல் கே.சி.ஜி குழு வளாகம்.

சப்போரோ சேட்டிலைட் வளாகத்தில் அர்ப்பணிப்புள்ள பயிற்றுவிப்பாளர்கள் அனைவரும் தற்போது தகவல் தொழில்நுட்பத் துறையின் முன்னணியில் செயல்படுகிறார்கள். ஐ.டி துறையிலுள்ள தற்போதைய பிரச்சனைகளில், எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட்ப வணிகத்தில் தேவைப்படும் அறிவு, திறன்கள் மற்றும் தகவல்தொடர்பு திறன்களின் தெளிவான விளக்கங்களை வழங்கி பயிற்றுவிப்பாளர்கள் அவர்களின் சொந்த அனுபவங்களிலிருந்து கதைகளுடன் சமீபத்திய தொழில்துறை தகவல்களை இணைக்கிறார்கள். இந்தப் பாடக்கோப்பு ஹொக்கைடோவில் தகவல் தொழில்நுட்ப பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் கியோட்டோ முதன்மை வளாகத்திலுள்ள மாணவர்களையும் அறிவுபூர்வமாக தூண்டுகிறது.



## டோக்கியோ செயற்கைக்கோள் ஹிட்டோமீடியா, இன்க். உள்ளே அமைந்துள்ளது

டோக்கியோவின் மினாடோ நகரில் உள்ள ரோப்போங்கி ஹில்ஸுக்கு அருகில் டோக்கியோ செயற்கைக்கோள் அமைந்துள்ளது. டோக்கியோ செயற்கைக்கோள் சப்போரோ செயற்கைக்கோளைத் தொடர்ந்து இரண்டாவது இடமாக அக்டோபர் 2012-ல் திறக்கப்பட்டது.

டோக்கியோ செயற்கைக்கோளில் உள்ள பல பயிற்றுவிப்பாளர்கள் இன்றைய சமூகத்தின் விரைவான டிஜிட்டல்மயமாக்கலின் முன்னணியில் இருக்கும் செயல் வீரர்கள். இந்தக் காரணத்திற்காக, கியோட்டோ முதன்மை வளாகத்திலுள்ள மாணவர்கள் உட்பட, டோக்கியோ செயற்கைக்கோள் மூலம் பரப்பப்படும் ஐ.டி பயிற்சி மற்றும் தர்க்கரீதியான சிந்தனை பற்றிய வகுப்புகள் மாணவர்களின் வற்றாத விருப்பமாகும். டோக்கியோ செயற்கைக்கோளில் வழங்கப்படும் கல்வி உலக அரங்கில் முக்கிய பங்கு வகிக்கக்கூடிய பயன்பாட்டு ஐ.டி-ல் சிறந்த தலைவர்களை வளர்ப்பதற்கு பெரிதும் பங்களிக்கிறது.



### கணினி பயன்பாட்டு அமைப்பு

மாணவர்கள் தற்போது பயன்பாட்டில் இல்லாத பயிற்சி ஆய்வகங்களை அவர்களாகவே பயன்படுத்துவதன் மூலம் வகுப்பு நேரத்திற்கு வெளியேயும் கூட கணினி வளங்களைப் பயன்படுத்தலாம். முன்பதிவு அல்லது கூடுதல் கட்டணம் தேவையில்லை. இந்த அதிநவீன சாதனங்கள் நீங்கள் பயன்படுத்த கிடைக்கின்றன.

### மைக்ரோசாப்ட்

**கல்வி நிறுவனங்களுக்கான ஆபிஸ் 365 ப்ரோபிளஸ் உரிமத் திட்டம்**
**கல்வி நிறுவனங்களுக்கான OVS-ES உரிமத் திட்டம்**

கல்வி நிறுவனங்களுக்கான ஆபிஸ் 365 ப்ரோபிளஸ் உரிமம் மற்றும் OVS-ES உரிமத் திட்டத்தின் கீழ் மைக்ரோசாப்ட் கார்ப்பரேஷனிடமிருந்து கே.சி.ஜி உரிமம் பெற்றுள்ளது. இந்த உரிமத் திட்டங்கள் ஆபீஸ் அப்ளிகேஷன்ஸ், பல்வேறு மேம்பாட்டு டூல்ஸ் மற்றும் விண்டோஸ் OS ஆகியவற்றை தனிப்பட்ட சாதனங்களில் பயன்படுத்த நியாயமான விலைகளில் வாங்க உதவுகின்றன. (மாணவர் பயன்பாட்டு ஒப்புதல் ஒப்பந்தத்தை சமர்ப்பிக்க வேண்டும்.)

### வாங்க கிடைக்கும் மென்பொருள்

- மைக்ரோசாப்ட் ஆபிஸ் 365 ப்ரோபிளஸ்
- மைக்ரோசாப்ட் ஆபிஸ் ப்ரோஃபஷனல்
- மைக்ரோசாப்ட் விண்டோஸ் OS அப்கிரேடுகள்

குறிப்பு: விண்டோஸ் OS என்றால், அப்கிரேடுகள் மட்டுமே வழங்கப்படுகின்றன







ஆசிரியர் நேர்முகத் தேர்வு

# ஜப்பானிய அனிமேஷன் சம்பந்தப்பட்ட வணிக ஆய்வு


தலைமை நிர்வாக அதிகாரி, கெய்னக்ஸ் கியோட்டோ கோ, லிமிடெட்

ஜப்பானின் அறிவியல் புனைவு மற்றும் கனவுருப் புனைவாற்றல் எழுத்தாளர்கள் (SFWJ) மற்றும் ஜப்பானின் விண்வெளி ஆசிரியர்கள் கிளப்பின் உறுப்பினர் (SACJ)

கெய்னாக்ஸின் நிறுவனர். நாடியா, தி சிகரெட் ஆஃப் ப்ளூ வாட்டர் மற்றும் டெங்கென் டோப்பா குர்ரென் லகான் உட்பட, ஜப்பானின் பல பிரபலமான அனிமேஷன் படைப்புகளின் தயாரிப்பாளர்

பேராசிரியர் 武田 康廣

**Yasuhiro Takeda**














கே.சி.ஜி குரூப்பிற்கான 50வது ஆண்டு விழா கமர்ஷியல் (URL: kcg.ac.jp/gainax)

## ஜப்பானிய அனிமி மற்றும் ஐ சி டி.

ஐ.டி மேங்னா மற்றும் அனிமேஷனின் கவனம் செலுத்தும் துறையில், புதிய சந்தைகளையும் வணிக மாதிரிகளையும் உருவாக்க தேடலில் இந்த சேர்க்கைகளை கே.சி.ஜி.ஐ பயன்படுத்துகிறது. அனிமேஷன் திட்டமிடல், தயாரிப்பு மற்றும் விளம்பரத்தில் சிறப்பு தலைப்புகள் பேராசிரியர் யசுஹிரோ டகேடா அவர்களால் கற்பிக்கப்படுகின்றன. பேராசிரியர் டகேடா நாடியா, தி சிகரெட் ஆஃப் ப்ளூ வாட்டர் மற்றும் டெங்கன் டோப்பா குர்ரென் லகான் போன்ற படைப்புகளுக்கான புகழ்பெற்ற ஸ்டுடியோ, கெய்னாக்ஸின் நிறுவனர்களில் ஒருவர். கெய்னாக்ஸில் ஒரு அனிம் தயாரிப்பாளராக, பேராசிரியர் டகேடா நியான் ஜெனிசிஸ் எவாஞ்சலியன்: ஐயர்ன் மெய்டன் அண்ட் மேங்னா, ஏம் ஃபார் தி டாப் 2! டைபஸ்டர், மேஜிக்கல் ஷாப்பிங் ஆர்கேட் அபெனோபாஷி மற்றும் ஹனமாறு கிண்டர்கார்டென் போன்ற விளையாட்டுகள் உட்பட எண்ணற்ற படைப்புகளில் ஈடுபட்டுள்ளார். கெய்னாக்ஸுடன் இணைந்து, பேராசிரியர் டகேடா கே.சி.ஜி குரூப்பின் 50 வது ஆண்டு நிறைவு விழா நினைவாக ஒரு கமர்ஷியலைத் தயாரித்தார்.

## "எவ்வளவு வருவாய்?" எனும் கேள்வியே வணிகம் என்பதாகும்

**— அனிமை ஒரு வணிகமாக செய்யும் போது முக்கிய சொல்லாக நீங்கள் என்ன சொல்வீர்கள்?**

இப்போது வரை என்னுடைய முக்கியமான வேலை கெய்னாக்ஸில் அனிமேஷன் செய்யப்பட்ட படைப்புகளின் திட்டமிடல் மற்றும் தயாரிப்பு. நான் அனிமேஷன் திட்டங்களை உருவாக்கி, நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அதை ஒளிபரப்பும் இடங்களைத் தீர்மானிக்க, ஒரு குறிப்பிட்ட வரவு செலவு திட்டத்தை உறுதி செய்ய நாங்கள் விரும்புகிறோம். தயாரிப்பு பணிகள் முடிந்தவுடன், அது எவ்வளவு வருவாய் ஈட்டித்தரும் என்று சிந்திக்க வேண்டியது முக்கியம். அதை செயல்படுத்துவதே வணிகமாகும் என நீங்கள் கூறலாம் என்று நான் நினைக்கிறேன்.

**— நீங்கள் அனிமேஷனில் என்ன செய்தீர்கள் என்பதை தயவுசெய்து எங்களிடம் சொல்லுங்கள்.**

நான் திட்டமிட்ட படைப்புகளில் விஷ் அபான் தி பிளீயடெஸ் மற்றும் டெங்கன் டோப்பா குர்ரென் லகான் அடங்கும். நான் இப்போது பல புதிய அனிமேஷன் திட்டங்களில் பணிப்புரிகிறேன். ஆனால் இந்த வகை வேலையை செய்ய நான் திட்டமிடவில்லை. கல்லூரியில், நான் முற்றிலும் வேறுபட்ட ஒன்றைப் படித்தேன். இது எனக்குத் தெரிவதற்கு முன்பே, கல்லூரிகளில் நான் அனுபவித்து செய்த நிகழ்வுகளும் தனிப்பட்ட தயாரிப்புகளும் என் வேலையாக மாறியது. அதனால் தான் நான் இப்போதும் கூட சுவாரஸ்யமான விஷயங்களைச் செய்கிறேன் என்று உணர்கிறேன். நான் கற்றுக்குட்டியாக இருந்த ஆண்டுகளில் இருந்து "வேடிக்கை மற்றும் சுவாரஸ்யமான விஷயங்களில் முன்முயற்சி எடுப்பது" எனும் எனது யோசனையை ஒருபோதும் மறக்கக்கூடாது என முடிவு செய்துள்ளேன்.

**— அனிம் படிக்க விரும்பும் மாணவர்களுக்காக எங்களுக்கு ஒரு தகவலை அளியுங்கள்.**

அனிமை திட்டமிட்டு உருவாக்குவதற்கு நிறைய ஆற்றல் தேவைப்படுகிறது. கூடுதலாக, நிதி சேகரித்தல் மற்றும் அனிம் தயாரிப்பதானது அதனுடன் பொறுப்பையும் கொண்டு வருகிறது. உங்கள் வேலையை பார்த்து, நிறை குறைகளை பெற்று, நிதி சேகரித்து, உங்கள் நிறுவனத்தை இலாபமடையும் நிறுவனமாக கொண்டு வரும் செயலில் மக்கள் ஈடுபடுவதே தயாரிப்பாகும். அந்தளவுக்கு கொண்டு வர நினைப்பதே ஒரு திட்டத்தின் முடிந்த வடிவமாக நான் நினைக்கிறேன். ஒரு தயாரிப்பை முடிக்கும் வரை, நீங்கள் எல்லாம் சரியாக உள்ளதாக உணர்வதே தன்னிறைவு என்று நம்புகிறீர்கள். ஒரு தயாரிப்பானது அது விமர்சிக்கப்படும் போது மட்டுமே முழு நிறைவடைகிறது. விமர்சனம் என்பது உங்கள் தயாரிப்பில் மட்டுமின்றி, உங்கள் செயல்களையும் சொற்களையும் உள்ளடக்கிய உலகில் நீங்கள் வெளியிடும் எல்லாவற்றையும் இலக்காகக் கொள்ளலாம் என்பதாக இருக்கலாம். அதனால் தான், ஒருவர் பெறும் விமர்சனங்களை முழுதும் எதிர்கொள்ளத் தேவையான உத்வேகத்துடன் படிக்க வேண்டுமென, அனிம் படிப்பதில் விருப்பமுள்ள மாணவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.







ஆசிரியர் நேர்முகத் தேர்வு

## கிரிப்டான் ஃபியூச்சர் மீடியா இன்க். பிரதிநிதி இயக்குநர், ஹாட்சூன் மிக்குவின் தயாரிப்பாளர்

## பேராசிரியர்

# Hiroyuki Itoh

伊藤 博之



"மிராய் கரா கிட்டா ஹாஜிமெட்டே நோ ஓட்டோ" ("எதிர்காலத்திலிருந்து வருகிற முதல் வார்த்தை") என்ற ஜப்பானிய வார்த்தையிலிருந்து வருவித்ததோர் பெயரைக் கொண்டு உருவாக்கிய, ஹாட்சூன் மிக்கு, பயனர் ஒருவர் கணினி ஒன்றில் பாடல் வரிகளையும், மெல்லிசை ஒன்றையும் கொடுக்கும் போது, செயற்கை குரல் ஒன்றில் பாடும் ஒரு கற்பனை உருவமாகும். ஹாட்சூன் மிக்கு, ஜப்பானில் மட்டுமல்லாமல், அயல்நாட்டிலும் இசைக்கச்சேரிகளை நடத்தி, பெருந்திரளான இரசிகர்களின் இதயங்களைக் கவர்ந்திருக்கிறது. ஹிரோயுக்கி இட்டோ, இந்த உணர்விற்குக் காரணமாக இருந்த ஹாட்சூன் மிக்கு செயற்கைக் குரல் மென்பொருளை உருவாக்கிய நிறுவனமான, கிரிம்ப்டன் ஃபியூச்சர் மீடியா இன்க். நிறுவனத்தின் பிரதிநிதி இயக்குநர், பேராசிரியராக KCGI -யில் சேர்ந்திருக்கிறார். கணினிமய குரல்களை உருவாக்கிற மென்பொருளைத் தொடர்ந்து உருவாக்குகிற பேராசிரியர் இட்டோ, எதிர்கால IT தொழிலை முன்னின்று நடத்தும் இளயவர்களுக்குப் பின் வரும் செய்தியைத் தருகிறார். "நாம் பாதியளவே கடந்து வந்திருக்கிற தகவல் புரட்சியின் எல்லைக்கோடு வரம்பில்லாமல் மிகவும் பரந்ததாகும், அதோடு உங்களது எதிர்கால வாய்ப்புகள் உங்களுக்கு முன்பாகப் பரவிக்கிடக்கின்றது. இந்தக் கருத்தை மனதில் திடமாக வைத்துக் கொண்டு, உங்களது படிப்புகளில் நீங்கள் அற்பணிக்க வேண்டும் என்றே நான் கேட்டுக் கொள்கிறேன்."

### குரல் தொகுப்பில் புரட்சியை ஏற்படுத்திய, தி வெர்ல்டு ஆஃப் ஹட்சூன் மிகு

கிரிப்டான் ஃபியூச்சர் மீடியா என்பது ஒரு வீடியோ கேமோ அல்லது ஒரு அனீம் நிறுவனமோ அல்ல. நாங்கள் இசை அமைப்பதில் ஈடுபட்டிருந்தாலும் கூட, அவையும் ஒரு பாடல் பதிவு நிறுவனம் அல்ல. ஏனென்றால், நாங்கள் கணினி இசை என்ற பொழுதுபோக்கினை ஒரு வியாபாரமாக ஆக்கியிருக்கிறோம், நான் நம்மைக் குறித்து ஒரு "வலுவான விற்பனையாளர்" என்றே நினைக்கிறேன். ஹாட்சூன் மிக்கு-வை முதலில் 2007 ஆகஸ்ட் மாதத்தில் விற்பனைக்கு வெளியிட்டோம், ஆனால் அந்த மென்பொருள், கற்பனைகரமான செயல்களில் ஈடுபட மக்களுக்கு ஒரு வாய்ப்பாக ஆகிப்போனது என்றே நான் நம்புகிறேன்.

மனிதம், தனது கடந்த காலத்தில் மூன்று புரட்சிகளை பார்த்திருக்கிறது என்றே சொல்கிறார்கள். முதலாவது புரட்சி விவசாயப் புரட்சியாகும். இந்தப் புரட்சியின் காரணமாக, வேட்டையாடுவதைச் சார்ந்திருந்தததால் இடம் விட்டு இடம் செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருந்த மனித இனம், உணவை முறைப்படியாக உற்பத்தி செய்து, அதை இருப்பு வைக்க இயலும் நிலைக்கு வந்து, அவ்வாறு நிலையான இருப்பிடங்களில் வசிக்கும் நிலைக்கு வந்தது. இதன் காரணமாக, சமுதாயங்களும், மாநிலங்களும் உருவாகி, சொத்தில் ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கின. பொருளாதாரங்கள் தோன்றியதும், போருக்கான காரணமாக ஆகின எனவும் சொல்ல முடியும்.

இரண்டாவது புரட்சி தொழில் புரட்சியாகும். இயக்க ஆற்றலைக் கண்டுபிடித்தார்கள், அதோடு ஒரே தோற்றமுடைய உருப்படிகளைத் திறம்பட உருவாக்கும் திறன் போன்ற நவீன கண்டுபிடிப்புகள், திரளான உற்பத்திக்கும், திரளான நுகர்விற்கும் பிறப்பாக அமைந்தன. இது வர்த்தகம் மற்றும் வணிகத்தை பெருகிப் பரவச் செய்து, பெருமளவிலான சொத்துக்களைக் கொண்டுவர உதவியது. இந்தப் புரட்சி, ஒரு "மக்கட்தொகை பெருக்கத்தை" உண்டுபண்ணியது. தொழில் புரட்சிக்கு முந்தைய, அதிகப் பிறப்பு மற்றும் அதிக இறப்பு விகிதம் கொண்டுள்ள இந்தக் காலத்தில், மனித மக்கட்தொகை கற்பனைகரமாக நிலையாக இருக்கிறது, அதோடு சமுதாயத்தில் சொத்து ஏற்றத்தாழ்வுகளும் கொஞ்சமாகவே இருந்தன, ஆனால், தொழில்புரட்சி ஏற்பட்டதால், மனித மக்கட்தொகை துரிதமாக அதிகரித்தது.

அதோடு, மூன்றாம் புரட்சியானது, தகவல் புரட்சியாகும், இதை இண்டெர்நெட் பிரதிநிதியாக இருந்து IT மதிப்பு கொண்டுவந்தது. இண்டெர்நெட்டுக்கு முன்பு, தகவல் அலைபரப்பிகள் குறைவாகவும், ஏகாதிபத்தியமாகவும் இருந்தன. தகவல் மூலங்களில், செய்தித்தாள் நிறுவனங்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்கள், மற்றும் பிரசுரிப்பு நிறுவனங்கள் போன்ற ஊடகங்கள் இருந்தன, ஆனால், இக்குழுக்கள் தகவல்களை அனுப்பி வைக்கும் போது, அத்துடன் வசதிகள் மற்றும் மனித சக்தி எனும் வகையில் குறிப்பிடத்தக்க செலவும் ஆகத்தான் செய்தது. மேற்கொண்டும், இந்தச் சமயத்தில் தகவல்களும் குறைந்தளவும், ஒரே திசையில் அமைந்தவையுமாகவே இருந்தன. ஆயினும், இண்டெர்நெட்டின் தோற்றம், தகவலில் இந்தப் புரட்சியைக் கொண்டு வந்திருக்கிறது. தகவலை அனுப்பி வைத்த விதம் குறிப்பிடத்தக்க அளவில் மாறியிருக்கிறது.

இப்போது இண்டெர்நெட் மிகமிக நெருக்கமாக இருந்து கொண்டிருக்கிறது, நமது உள்ளங்கைகளில் இருக்கிறது, நமது மேசைகளில் இருக்கிறது, நமது சட்டைப் பைகளில் நுழைந்துள்ளது. செய்திகள், திரைப்படங்கள் மற்றும் இசை போன்ற டிஜிட்டலாக்க முடிகிற தகவல்களை, ஒட்டுமொத்தமாக தகவல் மயமாக்கி, அதை எளிதாக அலைபரப்பி, இண்டெர்நெட்டில் இருப்பு வைப்பதை சாத்தியமாக்கியுள்ளது. வாழ்க்கையும், பணியும் மிகமிக வசதிகரமாகவும், வேடிக்கையாகவும், சௌகரியமாகவும் ஆகியிருக்கிறதும்; ஒரு கணப்பொழுதில், நீங்கள் உங்களுக்குப் பிடித்தமான வீடியோவை வரவழைத்து, பார்த்து மகிழ்ந்து, ஊடகத்தை அலைபரப்பு செய்யலாம்.



கூடுதலாக, மிகமிகச் சிறிய செய்தித்துண்டுகள் உள்ளிட்ட, இந்தத் தகவல்களை, ஃபேஸ்புக், டிவிட்டர், மற்றும் பிளாக்குகள் வாயிலாக, உலகத்தோடு தாங்களே எளிதாகவும், கணப்பொழுதிலும் பகிர்ந்து கொள்வதை எவருக்கும் சாத்தியமானதாக ஆக்குகிறது.

ஆயினும், தகவல் புரட்சியின் காரணமாக ஏற்படும் மாற்றங்களின் ஒரு முன்னோட்டத்தை மட்டுமே நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்றே நான் நம்புகிறேன். விவசாய மற்றும் தொழில்துறைப் புரட்சிகள், மனிதர்கள் வாழ்கிற விதத்தில் கடுமையான மாற்றங்களைக் கொண்டுவந்தன. தகவல் புரட்சியின் காரணமாக ஏற்பட்ட மாற்றங்கள் இன்னமும் அந்த அளவை அடைந்திருக்கவில்லை. இது, வெறுமனே ஒரு நிலைமாற்றக் காலமேயாகும், அதோடு உள்ளபடியான மாற்றங்கள் இன்னமும் ஆரம்பித்திருக்கவில்லை. மக்களின் வாழ்க்கை முறைகளிலும், உலகிலும் இப்போதிருந்து 20 முதல் 30 ஆண்டுகளில் தலைகீழான மாற்றங்கள் ஏற்படுவதை நாம் பார்ப்போம் என்றே நான் நம்புகிறேன். ஆயினும், அவை என்னவிதமான மாற்றங்களாக இருக்கும் என்பது எனக்குத் தெரியாது. அவை எவ்விதமாக மாறும் என்பதை நம்மை நம்பி ஒப்படைத்திருக்கிறார்கள், அதோடு, இளைஞர்களே அடுத்த தலைமுறையைத் தோள் கொடுத்துத் தாங்குவார்கள்.




ஹாட்சூன் மிக்கு
விளக்கம் KEI
©Crypton Future Media, INC.

## அதிநவீன மேடை நிகழ்ச்சிகளை உருவாக்க தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

பேராசிரியர் ニッツァ・メラス

# Nitza Melas



### சர்க்யூ டு சோலைல் முக்கிய பாடகர்/பாடலாசிரியர்

**அவள் கனடாவின் மாண்ட்ரீலில் பிறந்த ஒரு பன்மொழி பாடகர் / பாடலாசிரியர் ஆவார், மேலும் உலகம் முழுவதும் மக்களை மகிழ்வித்துள்ளார். சர்க்கஸ் மற்றும் இசை என உலகம் முழுவதும் தொடர்ந்து நிகழ்த்தும் பொழுதுபோக்கு குழு, சர்க்யூ டு சோலையிலின் மூன்று முக்கிய பாடகர்களில் இவளும் ஒருத்தி. சர்க்யூ டு சோலைல் நிகழ்ச்சியில் அவள் இயற்றி இசையமைத்த ஒரு பாடலை அவள் மட்டுமே பாடினாள், நடைமுறையில் அவளை குழுவின் முதன்மையான பாடகியாக மாற்றியது. அவள் எந்த லேபிள்களையும் சேர்ந்தவள் அல்ல, மேலும் அவளே சொந்தமாக இயற்றி இசையமைப்பது மட்டுமல்லாமல் அவளே கிராஃபிக் டிசைன், விளம்பரம் மற்றும் விற்பனை செய்கிறாள்.**

### புதிய பொழுதுபோக்கு உலகம்

கலையும் தகவல் தொழில்நுட்ப உலகமும் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. ஆக்கப்பூர்வமான கண்ணோட்டம் அற்புதமான தொழில்நுட்பத்தைப் பூர்த்தி செய்யும் போது, பார்வையாளர்கள் மற்றொரு பரிமாணத்திற்கு இழுக்கப்படுகிறார்கள். எனவே அதிநவீன தொழில்நுட்பத்தின் முன்னணியில் மட்டுமல்லாமல் ஆச்சரியமான வேகத்தில் ஆக்கத்திறனை வெளிப்படுத்தக்கூடிய கணினிகளின் பரந்த துறையில் மாணவர்கள் அறிந்து கொள்ளக்கூடிய சூழலையும் வழங்குகிற ஒரு கல்வி நிறுவனத்துடன் நான் ஈடுபடுவது இயற்கையானது.
பொழுதுபோக்கு துறையில், எங்கள் வணிகத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் ஐ.டி ஊடுருவுகிறது. இசையைப் பதிவு செய்து திருத்தியமைக்க, திரைப்படங்கள் மற்றும் கமர்ஷியல்களை டப் (ஒளி-ஒலி இணை) செய்ய, அல்லது சர்க்யூ டு சோலையிலின் பல்வேறு வகையான பயிற்சி மற்றும் மல்மீடியாவிற்கு கணினிகளைப் பயன்படுத்தினாலும், அதிக நிபுணத்துவம் வாய்ந்த தொழில்நுட்பம் மற்றும் நல்ல ஆக்கத்திறனுடைய கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களின் குழு நான் வழங்கும் எந்த நிகழ்ச்சிகளுக்கும் அவசியம்.
கலைக்கும் தொழில்நுட்பத்திற்கும் இடையிலான இந்த ஒத்துழைப்பு என்பது சேர்ந்து ஒத்துழைக்கிற ஆதாரப் பொருள் இது வீடியோ மற்றும் ஆடியோ நிகழ்ச்சிகளைத் தயாரிக்க தேவை.
கே.சி.ஜி.ஐ மாணவர்களுக்கு வணிக உலகின் பல அம்சங்களுக்கு அவர்கள் பயன்படுத்த வேண்டிய கலைத்திறன் மற்றும் தொழில்நுட்ப அறிவை நேர்த்தியாக்க அவர்களுக்கு தேவைப்படும் கருவிகளைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. முந்திட்டம் வரைபடம், கலை வெளிப்பாட்டின் பரிணாமத்தின் மிகச்சிறந்த தொழில்நுட்பம் கலைகளில் ஈடுபட்டுள்ள தகவல் செயலாக்க தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தேவையை உருவாக்கியுள்ளது, மற்றும் பார்வையாளர்களின் எதிர்பார்ப்புகளை விட அதிகமான ஆக்கப்பூர்வமான வெளிப்பாட்டை அனுமதிக்கிறது. இந்த துறையில் கே.சி.ஜி.ஐ கற்றலின் முன்னணியில் உள்ளது, மற்றும் மாணவர்களை அவர்களின் சாத்தியமான திறனையும் தாண்டிச் செல்லக்கூடிய ஒரு கல்விச் சூழலை வழங்குகிறது.





கே.சி.ஜி குழுமம் நிறுவப்பட்ட 50 வது ஆண்டு விழாவில் 'MUΣA' என்ற குறுவட்டு அறிவிக்க இசை நிகழ்ச்சியில் பேராசிரியர் நிட்ஸா மேலாஸ்.





## அடுத்த மின்-வணிகத் தலைவர்களுக்கு பயிற்சி அளித்தல்

பேராசிரியர் 高弘昇

# Ko, Hong Seung



### தகவல் உத்திகள் (சி.ஐ.ஓ), உத்திகள் திட்டமிடும் அலுவலகம், சாம்சங் எலெக்ட்ரானிக்ஸ் கோ., லிமிடெட்டின் முன்னாள் மேலாளர்

### நிப்பான் அப்ளைடு இன்ஃபர்மேடிக்ஸ் சொசைட்டி (என்.ஏ.ஐ.எஸ்), பிரதிநிதி இயக்குனர்

**பேராசிரியர் ஹாங் சியுங் கோ தென் கொரியாவில் பிறந்தார், மற்றும் முன்னதாக மாபெரும் தென் கொரிய மின்சார உபகரணங்கள் மற்றும் மின்னணு கூறுகள் தயாரிப்பாளர், சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில் பொது வாடிக்கையாளர்களுக்கு மின்-வணிகம் மற்றும் இணைய-அடிப்படையிலான பெருநிறுவன உத்தி, CALS (முதன்மையக B2B கருத்தியல்-அடிப்படையிலானது) ஆகியவற்றை உயிர்ப்பித்து கொண்டு வர தகவல் உத்திகளின் மேலாளராக பணியாற்றினார். அவர் அந்த நிறுவனத்தின் தகவல் மற்றும் இலாபத்திற்கு பெரும் பங்களித்துள்ளார். பேராசிரியர் ஹாங் மின்-வணிக உலகத்தில், அது வியத்தகு மாற்றங்களுக்கு உட்படுவதால் தேவைப்படும் மனித திறமைகள் குறித்து விரிவாக பேசினார்.**

### மின்-வணிகத்திற்கு ஒரு உத்தி தேவை

—மின்-வணிக உலகம் விரைவான மாற்றங்களுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிகிறது. இணையம் பரவுவதுடன் வணிகமும் மாறிவிட்டதா?

90-களின் நடுவில் நான் தகவல் உத்திகளின் மேலாளரான பிறகு சாம்சங் உள்நாட்டு மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களுக்காக அவர்களின் வலைதளத்தை தொடங்கியது. அந்த நேரத்தில், இணையத்தை சந்தைப்படுத்துவதற்கு ஒரு சக்தி வாய்ந்த கருவியாக யாரும் கருதவில்லை, மற்றும் இது நிறுவனத்தின் பிராண்ட் அங்கீகாரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு வழியாக தெரிந்தது. எனினும், நாங்கள் வலைத்தளத்தை திறந்த போது, தயாரிப்புக்குப் பிறகு சேவைகள், புகார்கள், போன்றவைகள் குறித்து விசாரித்து உலகம் முழுவதிலுமிருந்து ஒரு நாளைக்கு சுமார் 200 மின்னஞ்சல்களை நாங்கள் பெற்றோம். அப்போது தான் நான் எங்கள் வலைத்தளத்தை சந்தைப்படுத்தும் கருவியாக பயன்படுத்தலாம் என்று உணர்ந்தேன்.
இணையத்தைப் பயன்படுத்திய வணிகங்கள், முன்பதிவு முறைகள் மற்றும் முன்பதிவு முறைகள் மற்றும் பங்கு வர்த்தகம் போன்றவை அதற்குப் பிறகு வளர்ச்சியடைந்தன. ஆனால், இணையத்தில் பயன்படுத்துவதற்கு ஒரு அமைப்பை உருவாக்கித் தொடங்குவதன் மூலம் விற்பனையில் பெரிய அளவிலான வளர்ச்சியை நாங்கள் பார்க்கவில்லை. இணையத்தைப் பயன்படுத்தினால் அவர்களின் வணிகம் சிறப்பாக இருக்கும் என்று மக்கள் நினைத்த நேரத்தில் தென் கொரியாவில் தகவல் தொழில்நுட்பத்தின் ஏற்றம் தோல்வியடைந்தது. தயாரிப்புகளை உருவாக்கி உலகம் முழுவதிலுமிருந்து வாடிக்கையாளர்களை ஹோஸ்ட் செய்து, அவர்கள் இணைய ஷாப்பிங் மால் உருவாக்கினால் வர்த்தகம் நடத்த முடியம் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் கிட்டத்தட்ட அந்த இணைய ஷாப்பிங் மால்கள் அனைத்தும் பல ஆண்டுகளில் இணையத்திலிருந்து மறைந்துவிட்டன.
இறுதியாக, இணையம் ஒரு கருவி மட்டுமே என்பதை அவர்கள் உணரவில்லை. மேலும், அவர்களிடம் ஒரு உத்தியும் இல்லை. இணையத்தில் நீங்கள் எத்தனை தயாரிப்புகளை வைத்திருந்தாலும், அவர்கள் வெறும் திரையில் உள்ளன. ஏனெனில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில், வாடிக்கையாளர்கள் தயாரிப்பை அவர்களின் கைகளால் தொட்டு சரிபார்த்த பின் அவற்றை வாங்கினார்கள்.

### ஜப்பானிய நிறுவனங்கள் சரிகின்றன மனித திறமை இல்லை.

—இந்த மிகப்பெரிய மாற்றங்களுக்கு மத்தியில், தற்போதைய உலக வணிகச் சூழலை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

துரதிர்ஷ்டவசமாக, மற்ற நாடுகளுக்கு மத்தியில் ஜப்பான் மற்றும் தென் கொரியாவின் தற்போதைய நிலைமை, நிறுவனத்தின் விற்பனையை மேம்படுத்த இணையத்தைப் பயன்படுத்தும் உத்திகளை உயிர்ப்பித்து கொண்டு வர மனித திறமை இல்லை. மேலும், நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பைத் தயார் செய்வதில் அதிக அளவில் முதலீடு செய்கின்றன, எனவே இந்த நிலைமை அவர்களுக்கு முடிவில்லாத பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது.
நிறுவனங்களுக்கு என்ன தேவை என்றால் வணிக உத்தியை உருவாக்க மனித திறமை. அவசியமாக, சந்தைப்படுத்துதல் மற்றும் நிர்வாகத்திற்காக தகவல் தொழில்நுட்பத்தின் வளங்களைப் பயன்படுத்துவதற்கான திறன் அவர்களுக்கு வேண்டும்.
பொதுவாக ஜப்பானிய மற்றும் தென் கொரிய நிறுவனங்களில் பணியாளர்களிடையே சந்தைப்படுத்தும் உணர்வு குறைவாக இருப்பதாக கருதப்படுகிறது. இது ஏனென்றால் சம்பளத்தைப் பற்றிய அவர்களின் சிந்தனையின் அடிப்படை என்பது அவர்களின் அன்றாட வேலைக்காக அவர்கள் சம்பாதிக்கும் சம்பளம் வழியாக அவர்களுக்கு கிடைக்கக்கூடிய இலாபங்களின் சமமான விநியோகம்.
ஆனால், அமெரிக்கா வித்தியாசமானது. செய்யப்படும் வேலையின் அளவு மற்றும் உங்கள் வேலை உண்மையில் நிறுவனத்திற்கு எவ்வளவு பங்களித்துள்ளது என்பது குறித்து நிலையான, கடுமையான அழுத்தம் உள்ளது. கிட்டத்தட்ட அமெரிக்க நிறுவனங்களில் சந்தைப்படுத்துவதற்கு மட்டுமே என அர்ப்பணிக்கப்பட்ட துறைகள் எதுவும் இல்லை. அனைத்து பணியாளர்களுக்கும் ஏற்கனவே இந்த மனநிலை இருப்பதால், இந்த துறைகள் தேவையற்றவையாக மாறிவிடுகின்றன. பெருளாதாரம் மோசமான நிலைக்கு மாறினாலும் கூட எப்படி இலாபத்தை மேம்படுத்த முடியும் என்பதைப் பற்றி சிந்திக்கும் மனநிலை அமெரிக்க நிறுவனங்களுக்கு உள்ளது, எனவே அவர்கள் எப்போதுமே முன்னேறக்கூட ஆற்றலுடன் இருக்கிறார்கள். இதனால் தான் ஜப்பானிய மற்றும் தென் கொரிய நிறுவனங்களுக்கு அவர்களுடன் பொருந்துவது கடினமாக உள்ளது. பெரிய நிறுவனங்கள் உட்பட, ஜப்பான் மற்றும் தென் கொரியாவில் பல நிறுவனங்கள் விற்பனை, விளம்பரம் மற்றும் பிராண்டிங் செய்வதை சந்தைப்படுத்துதல் என்று தவறாக நினைக்கின்றன. அதனால் தான் தற்போது அமெரிக்காவில் உள்ள நிறுவனங்கள் மட்டுமே வணிகத்திற்காக இணையத்தைப் பயன்படுத்துவதில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களாக வெற்றி பெற்றுள்ளன. ஜப்பான் மற்றும் தென் கொரியாவில் உள்நாட்டில் அந்த வகையான பாராட்டுகளைப் பெற்ற நிறுவனங்கள் உள்ளன, ஆனால் அவர்கள் உள்கட்டமைப்பின் மேம்பாடு காரணமாக ஏற்பட்ட மின்-வணிகத்தின் அதிர்வு அலைகளில் சவாரி செய்து பண விளையாட்டு வகை ஊகங்கள் மூலம் வெற்றி பெற்றார்கள். தற்செயலாக, மின்-வணிகத்தில் வெற்றி பெற்ற நிறுவனங்கள் எதுவும் ஐரோப்பாவிலும் இல்லை. இதற்கு இணையம் பரவுவதில் ஏற்பட்ட பெரும் தாமதம் தான் காரணம்.

### ஆசியாவில் ஆதிக்கம் செலுத்த ஒரு சிறப்பு பட்டதாரி பள்ளியாக மாறுதல்

—இந்த வணிகச் சூழலில், கே.சி.ஜி.ஐ என்ன வகையான அம்சங்களை ஆய்வு செய்ய வேண்டும்; நம்முடைய நோக்கம் என்னவாக இருக்க வேண்டும்?

தகவல் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் பெற்ற பல பட்டதாரி பள்ளிகள் பல இல்லை. மேலும், கியோட்டோ கம்ப்யூட்டர் காகுயின் கே.சி.ஜி.ஐ-இன் வழிமரபில் உள்ளது. இது எங்களுடைய மிகப் பெரிய அனுகூலமாகும். மேலும், கே.சி.ஜி.ஐ-இல் சிறப்பு திறன்கள் மற்றும் அறிவுடன் முக்கியமான பெருநிறுவனங்களில் பணிப்புரிந்த ஆசிரியர்களின் பெரிய வகையமைவு உள்ளது. என்னுடைய விரிவுரைகளில், நான் என்னுடைய வெற்றி கதைகளை மட்டுமல்லாமல் என்னுடைய தோல்விகள் பற்றியும் பேச முயற்சிக்கிறேன். ஏனென்றால் பெரும்பாலும் வெற்றிகளை விட தோல்விகள் அதிகம் கற்பிக்கின்றன.
இப்படி தான் இந்த சகாப்தத்தில் உண்மையில் தேவைப்படும் மனித திறமைகளுக்கு நான் பயிற்சியளிக்கிறேன்.
பிற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் கல்வி வலையமைப்பும் ஆண்டுதோறும் விரிவடைந்து வருகிறது. துறை ஜப்பானுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டது அல்ல. ஆசியாவிலும் உலக அரங்கிலும் பணியாற்றக்கூடிய மனித திறமைகளைப் பயிற்றுவிக்க பங்களிக்கக்கூடிய ஒரு சிறப்பு பட்டதாரி பள்ளியாக கே.சி.ஜி.ஐ இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

# கியோட்டோ, மாணவர்களுக்கான நகரம்

கியோட்டோ 1200 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டுள்ளது. இது ஒரு காலத்தில் ஜப்பானின் தலைநகரமாகவும், இன்றும் ஜப்பானின் கலாச்சார மையப்பகுதியாகவும் உள்ளது. இது ஒரு சர்வதேச நகரமாக இருப்பதால் பல மாணவ இளைஞர்கள் இந்நகரத்தில் வாழ்கின்றனர்.
KCG வளாகங்கள் வசதியான பகுதிகளில் அமைந்திருக்கின்றன, மேலும் கியோட்டோ நகரத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இவைகளை நீங்கள் அணுகலாம்.
கூடுதலாக, ஒசாகா, நாரா, கோபே மற்றும் ஓட்சு போன்ற கன்சாய் பிரதேசத்தில் உள்ள மற்ற இடங்களிலிருந்தும் அவைகளை நீங்கள் எளிதாக சென்று அடையலாம்.



## ஹியோகுமன்பென் வளாகத்தின் சுற்றியுள்ள பகுதி, கியோட்டோ முக்கியமான பள்ளி

*மரோமச்சி பண்பாட்டைப் பிரதிபலிக்கின்ற கோவிலான ஜின்ககு-ஜி கோவில், ஜிடாய் மாட்சூரியுடன் (கியோட்டோவிலுள்ள மூன்று பெரிய திருவிழாக்களில் ஒன்று) தொடர்புள்ள ஹைய்யன்ஜிங்கு கோவில், செர்ரி பிளாசம் மரங்களுக்குப் பெயர் போன டெட்சுககு-னோ-மிச்சி, ஜப்பானிலுள்ள 2வது மிகப்பழமையான மிருகக்காட்சிசாலையான கியோட்டோ நகர ஜூ, மற்றும் கியோட்டோ நகர அருங்காட்சியகம் போன்ற பற்பல இடங்களும் இந்தப் பகுதியில் (பல இதர இடங்களில்) உள்ளன. இது இப்பகுதியிலுள்ள ஜப்பானிய கலாச்சாரம் மற்றும் வரலாற்றுடன் தொடர்பு கொள்ள மிகவும் எளிதானது!*

இடம்

| | |
|---|---|
| ஜிங்கக்குஜி | ஹெய்யன் ஜிங்கு ஷ்ரைன் |
| டெட்சூகக்கு-நோ-மிச்சி (தத்துவ அறிஞரின் நடை) | எய்க்காண்டோ ஸென்ரின்-ஜி |
| நான்ஸெஞ்ஜி கோவில் | சியோன்ஜி கோவில் |
| கியோட்டோ நகரம் கியோசெரா கலை அருங்காட்சியகம் | நேஷனல் மியூசியம் ஆ்ஃப் மாடர்ன் ஆர்ட்ஸ் |
| கியோட்டோ சிட்டி மிருகக்காட்சி சாலை | |



## கேசிஜிஜ-ன் சுற்றியுள்ள பகுதிகள் கியோட்டோ எகிமே சேட்லைட் வளாகம்

*ஜேஆர், கின்டெட்ஸு மற்றும் நகர சுரங்க பாதைகளை இயக்கும் கியோட்டோ நிலையம், ஜப்பான் முழுவதிலிருந்தும் வருகை புரியும் பெரும்பாலான மக்களின் கியோட்டோவுக்கு நுழைவாயிலாக இருக்கிறது. நவீன கட்டிடங்கள் மற்றும் வரலாற்று கட்டிடங்கள் இரண்டும் இந்த பகுதியில் ஒருங்கே அமைந்துள்ளன, மேலும் நாம் ஒரு மாறுபட்ட சூழலை இங்கு உணர முடியும்.*

இடம்

| | |
|---|---|
| டோஜி | சன்ஜுசன்ஜெண்டோ |
| நிஷி ஹோங்வான்ஜி கோயில் | கியோட்டோ நேஷனல் மியூசியம் |
| ஹிகாஷி ஹாங்கான்ஜி கோயில் | கியோட்டோ ஸ்டேஷன் கட்டிடம் |
| டோ்ஃபுகுஜி கோவில் | கியோட்டோ மீன்காட்சியகம் |
| கியோட்டோ கோபுரம் | |



## கேசிஜிஜ-ன் சுற்றியுள்ள பகுதிகள் ராகுஹோகு வளாகம்

*கியோட்டோ மற்றும் கியோட்டோ ஸ்டேஷன் மையத்தில் இருந்து சுரங்கப்பாதை மூலமும், கிடாஓஜி சுரங்கப்பாதை நிலையத்திலிருந்து மற்றும் ராகுஹோகு வளாகத்திற்கு அருகில் உள்ள பேருந்து நிலையத்தில் இருந்து நகரப் பேருந்து மூலமும் ராகுஹோகு பகுதிக்கு செல்வது மிகவும் வசதியானது. நவீன கட்டிடங்களுடன் அமைந்துள்ள கிட்டாயாம தெருவுக்கு அருகில் காமிகமோ கோவில் உள்ளது, மற்றும் தாவரவியல் பூங்கா, மிடோரோகா-ஐக் குளம், மற்றும் காமோ ஆறு ஆகியவற்றில் இயற்கையை நாம் அனுபவித்து ரசிக்க முடியும்.*

இடம்

| | |
|---|---|
| கமிகமோ ஷ்ரைன் | கியோட்டோ தாவரவியல் பூங்கா |
| மிடோரோகா-இக்கோ குளம் (மிஸோரோகா-இக்கே குளம் என்றும் சொல்கிறார்கள்) | கிட்டாயாமா தெரு |



## கேசிஜி-ஐ சுற்றியுள்ள பகுதிகள் கமோகவா வளாகம்

*கியோட்டோவின் மூன்று மிகப்பெரிய திருவிழாக்களில் ஒன்றான யோய் மட்சூரியுடன் தொடர்புடைய ஷிமோகாமோ கோவில், மற்றும் கியோட்டோவில் உள்ள இம்பீரியல் அரண்மனை, வளாகத்திற்கு அருகில் உள்ளன. இது இயற்கை வளங்கள் நிறைந்த ஒரு பகுதி.*

இடம்

| | |
|---|---|
| ஷிமோகயோ ஷ்ரைன் | டடசு நோ மோரி (ஷ்ரைன் ஃபாரஸ்ட்) |
| கியோட்டோவில் இருக்கிற இம்பீரியல் பேலஸ் | கியோட்டோ சிட்டி ஹிஸ்டாரிக்கல் மியூசியம் |





# kcg.edu கல்வி கட்டமைப்பு

உலகத்தரமான, உயர்தரமான ஐ.டி கல்வியை செயலுருவாக்க உலகளாவிய கல்வி நிறுவனமாகவும் இருப்பதை கியோட்டோ காலேஜ் ஆஃப் கிராஜுயேட் ஸ்டடீஸ் ஃபார் இன்ஃபர்மேட்டிக்ஸ் நிறுவனம் நோக்கமாக கொண்டுள்ள அதே வேளையில் பிற KCG குழு கல்வி நிறுவனங்களுடன் நெருக்கமான வலைக் கட்டமைப்பினை உருவாக்குவதோடு மட்டுமின்றி, வெளிநாடுகளிலுள்ள அரசாங்கங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் ஒத்துழைத்து செயலாற்றி ஐ.டி.கல்வியில் தலைவராகவும் விளங்குகிறது.



1963 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஜப்பானின் முதல் கணினி கல்வி நிறுவனமாக 50 ஆண்டுகளுக்கும் மேலாக பாரம்பரியம் மற்றும் சாதனைகளை பெருமையாகக் கொண்டு,சுமார் 50,000 பட்டதாரிகளை கொண்ட ஜப்பானியத் தகவல் தொழில் துறையில் மாபெரும் தனிப்பட்ட வலைக் கட்டமைப்பினை கியோட்டோ கணினி கருயின் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

**kcg.edu**
Kyoto Computer Gakuin
**KCG**

ரோசெஸ்டர் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி என்பது 1829 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு பொறியியல் பல்கலைக்கழகம் ஆகும், இது முழுமையான அமெரிக்காவிலும் IT படிப்புகளை (1991) நிறுவிய பல்கலைக்கழகங்களில் முதன்மையானதாக விளங்கிய பெருமையினை கொண்டுள்ளது. கணினி கிராபிக்ஸ், விளையாட்டுகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப துறைகளில் அமெரிக்காவிலுள்ள முதன்மையான முடிவுகளை நாங்கள் பெருமையாக கருதுகிறோம். 1996 ஆம் ஆண்டில் கியோட்டோ கம்ப்யூட்டர் கருயினுடன் ஒரு சகோதரி பள்ளி ஒப்பந்தத்தையும் (துணைப்பள்ளி) RIT செய்து கொண்டது.

**RIT**
Rochester Institute of Technology

**kcg.edu**
Kyoto Computer Gakuin Automobile School
**KCGM**

கியோட்டோ கம்ப்யூட்டர் கருயின் ஆட்டோமொபைல் பள்ளி, மேம்பட்ட நுட்பங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம், வலைக்கட்டமைப்பில் திறனறிவினைக் கொண்டு அடுத்த தலைமுறை வாகன தொழில்நுட்பங்களுக்கு பொருந்தும். படியான வாகன மெக்கானிக்குகளை உருவாக்கி துணை புரிகிறது.



**kcg.edu**
The Kyoto College of Graduate Studies for Informatics
**KCGI**



ஜப்பானிய மொழிக் கல்வி மையமான கியோட்டோ ஜப்பானிய மொழி பயிற்சி மையம், நீதித்துறை அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, கல்வி, கலாச்சாரம், விளையாட்டு, அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகங்கள் ஆகியவற்றில் இருந்து தங்கள் நாட்டில் 12 ஆண்டு கல்வி முறையுற்ற மாணாக்கர்களுக்கான ஜப்பானிய மொழித் துறை நிறுவனமாக சிறப்புப்பெயரை பெற்றுள்ளது.

**kcg.edu**
Kyoto Japanese Language Training Center
**KJLTC**

**kcg.edu**
Kyoto Computer Gakuin - U.S.A.
**நியூ யார்க் அலுவலகம்**

**kcg.edu**
Kyoto Computer Gakuin - China
**பீஜிங் அலுவலகம்**
**டேலியன் அலுவலகம்**
**ஷாங்காய் அலுவலகம்**

**kcg.edu**
Kyoto Computer Gakuin - Vietnam
**ஹனோய் அலுவலகம்**

2000 ஆம் ஆண்டில் நியூயார்க் உலக வர்த்தக மையத்தில் KCG குழுமத்தின் வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கான ஒரு தளமாக நியூயார்க் அலுவலகம் நிறுவப்பட்டது. செப்டம்பர் 11 அன்று அமெரிக்காவில் ஒரே நேரத்தில் நடந்த பயங்கரவாத தாக்குதல்களால் பாதிக்கப்பட்டிருந்தாலும், நியூ யார்க் அலுவலகம் இப்போது ராக்ஃபெல்லர் மையத்தில் அமைந்துள்ளதுடன் அதன் நடவடிக்கைகளையும் மீண்டும் தொடர்கிறது.



பெய்ஜிங்-ல் இருக்கும் சீனாவின் தேசிய நூலகத்திற்குள் கேசிஜி (KCG) பெய்ஜிங் அலுவலகமானது, சீனாவின் பல்கலைக்கழகங்களுடன் பரிமாற்றம் செய்யும் தளமாக இருப்பதற்காகவும், கேசிஜி (KCG) தன்னுடைய உறவுகளை வலுப்படுத்துவதற்காகவும் 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. கேசிஜி (KCG) 2008ல் டாலியன் அலுவலகத்தையும், 2018 ல் ஷாங்காய் அலுவலகத்தையும் திறந்து வைத்துள்ளது, இது பிற செயல்பாடுகளின் மூலமாக சீனாவின் பல்கலைக்கழகங்களுக்கு தகவல் தொழில்நுட்ப கல்விக்கான ஆதரவினை வழங்குகிறது.



2019 ஆம் ஆண்டில் கே.சி.ஜி ஹனோய் அலுவலகத்தை நிறுவியது, வியட்நாமில் கே.சி.ஜி-இன் முதல் அடித்தளம்.







## KCGI-ன் கண்ணோட்டம்

**பெயர்:** தி கியோட்டோ காலேஜ் ஆஃப் கிராஜுயேட் ஸ்டடீஸ் ஃபார் இன்ஃபர்மேட்டிக்ஸ்

**மூல நிறுவனம்:** கியோட்டோ ஜோஹோ கருயென்

**முகவரி:** 7 தனகமான்சென்-சோ, சக்யோ-கு, கியோட்டோ 606-8225, ஜப்பான்

**பட்டதாரி பள்ளி:** பயன்பாட்டு தகவல் தொழில்னுட்ப பள்ளி

**முதன்மை:** வலை வர்த்தகத் தொழில்னுட்பத் திட்டம்

**நிறைவுக்கு தேவைப்படும் கிரெடிட்கள்:** 44

**அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை:** 600 (மொத்த கொள்திறன் 1200 நபர்கள்.)

**பாடத்திட்ட காலம்:** 2 வருடங்கள்

**பட்டம்:** தகவல் தொழில்னுட்பத்தில் முதுகலை அறிவியல் (M.S. in IT)

URL: https://www.kcg.edu/

KYOTO



பற்பல ஐடி நிறுவனங்கள், ஜப்பானிய தொழிற்துறை முன்னணி நிறுவனங்களான ரோஹ்ம் உள்பட, முரடா உற்பத்தி, நிண்டெண்டோ, ஹாரிபா, கியோசெரா, நைடெக் மற்றும் ஓம்ரான் ஆகியவை ஜப்பானிய பாரம்பரிய பண்பாட்டு மையமான கியோட்டோவில் அமைந்துள்ளன. நோபல் பரிசு பெற்றவர்களில் பலர் கியோட்டோவில் பிறந்தவர்கள். KCGI கியோட்டோ உருவாக்கி வகுப்பறையில் கொண்டு வரும் அருமையான ஆற்றலை நோக்கமாகக் கொள்ள KCGI விரும்புகிறது.

### ஹையகுமன்பென் கேம்பஸ், கியோட்டோ முதன்மைப் பள்ளி






**முகவரி:** 7 தனகமான்சென்-சோ, சக்யோ-கு, கியோட்டோ 606-8225, ஜப்பான்
**அணுகல்:** ஹையகுமன்பென் குறுக்குச் சந்திப்பிலிருந்து வடக்குப் பக்கமாக 1 நிமிட நடை டிமாச்சியனகி நிலையத்திலிருந்து 8 நிமிட நடை; கீஹான் எலக்ட்ரிக் ரெயில்வே அல்லது எய்ஸான் எலக்ட்ரிக் ரெயில்வே அருகில்
கியோட்டோ நிலையத்திலிருந்து 17ம் எண் பேருந்தில் சென்று, "ஹையகுமன்பென்னில்" இறங்கவும் அல்லது 206ம் எண் பேருந்தில் சென்று "அசுகாய்சோவில்" இறங்கவும்.

### கியோட்டோ எகிமே சேட்லைட், கியோட்டோ முதன்மைப் பள்ளி






**முகவரி:** 10-5, நிஷிகுஜொ, டெரனொமே-சோ, மினாமி-கு, கியோட்டோ 601-8407, ஜப்பான்
**அணுகல்:** கியோட்டோ நிலையத்தின் மேற்குப்பக்க வழியிலிலுள்ள ஹசிஜோவிலிருந்து மேற்காக 7 நிமிட நடை

### சப்போரோ செயற்கைக்கோள்






**முகவரி:** டாய்கோ கட்டிடம், 7வது மாடி (dGICInc உள்ளே), 5-11, ஒடோர்னிஷி, சுவோ-கு, சப்போரோ, 060-0042, ஜப்பான்
**அணுகல்:** ஒடோரி நிலையத்திலிருந்து 2ம் எண் வழியிலிருந்து வடக்குப் பக்கமாக 1 நிமிட நடை.

### டோக்கியோ செயற்கைக்கோள்






**முகவரி:** வோர்ட் மோடோஜாபு 4வது மாடி (ஹிடோமீடியா, இங்க். உள்ளே)
**அணுகல்:** டோக்கியோ மெட்ரோ ஹிபியா லைனில் ரோப்போங்கி நிலையத்தின் 1ஏ வழியிலிருந்து 8 நிமிட நடை
டோய் ஓடோ லைனில் ரோப்போங்கி நிலையத்தின் 3ம் வழியிலிருந்து 10 நிமிட நடை